
# கலைச் செல்வி



ரட்டாதி 1966 – நல்லூர் முருகன் மலர்

# பேபி மார்க் ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

அவை நவீன இயந்திரங்களினால்
விலையுயர்ந்த மூலப்பொருட்களைக்கொண்டு
சுகாதாரமுறைப்படி சுத்தமாகத் தயாரிக்கப்படுகிறது.

BABY BRAND

— தயாரிப்பாளர்கள் —

**சுப்பிரமணியன் சோடாக் கம்பனி**

வல்வெட்டித்துறை.

போன்: 97. தந்தி: SODA.

கிளை

**★ ராஜு ஸ்ரோர்ஸ் ★**

கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

போன்: 372. தந்தி: ESVES.

8-6 8-6


For Sparkling

PHOTOGRAPHS



Gnanam's

JAFFNA DIAL: 7067

GERMAN MADE

# Sonnenschein

BATTERIES

Northern Province Agent:

**THURAI & CO**

**23, Stanley Road, JAFFNA.**

R.V. கவுடர்
R.V.G. பீடிகள்
மேலானவை




தயாரிப்பாளர்கள்:-

**R V G பீடிக் கம்பெனி,**

34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

● கார் ● லொறி

● ட்ரக்டர் ● வான்

எல்லா வாகனங்களுக்குமுரிய

★ உபரி உறுப்புகள் ★

# லூக்கஸ்

# பற்றறிகள்

2 வருட உத்தரவாதத்துடன்

விற்கப்படுகின்றன.

| போன் 7022 |

## செல்லப்பா & கோ,

4/1 ஸ்டான்லி வீதி. யாழ்ப்பாணம்.

★ தினமும் 10,000க்கு மேற்பட்டோர்

★ உபயோகிக்கும்

★ ஒரேயொரு தமிழ்

★ டிறக்டரி

★

1966-1967.

வரதரின் பலகுறிப்பு

விலை 10/= ரூபா.

வரதர் வெளியீடு,

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

கலை: 8

காட்சி: 6

கலைச்செல்வி

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும். —பாரதியார்.

கௌரவ ஆசிரியர்:

**இ. வைத்தியலிங்கம்**

B. Sc. (Eng) Lond;
A M. I. C. E; A. M I. E. C.

★ ஈழத்தின்

★ கலை

★ இலக்கிய

★ ஏடு

ஆசிரியர்:

"சிற்பி"

மு. கனகராசன்

"கலைச்செல்வி" படைப்புகளின் கருத்துக்கள்
அவற்றின் ஆசிரியர்க்கே உரிமை.

புரட்டாதி '66

விலை -/35

20, ஸ்டான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

# கந்தா வா வா!

★ கவியோகி சுத்தானந்த பாரதியார் ★

காபிராகம். ஆதிதாளம்.

**பல்லவி**

கந்தா வாவா கலாபமயில்மேல்
சுந்தர வடிவேலா — ஓம் சிவமுருகா (கந்தா)

**அனுபல்லவி**

வந்தனஞ்செய்யும் அடியார் மகிழச்
சிந்தையில் இனிக்கும் செந்தில் அமுதே (கந்தா)

**சரணங்கள்**





சூது பொறாமைச் சூழ்ச்சிகளெல்லாம்
துயர்செய் பகையெல்லாம்
வாது வழக்குகள் வம்புகளெல்லாம்
வராது துன்பந்தராது விலகிடக்! (கந்தா)

ஆணவச் சூரனை நாணப்புடைப்பாய்
ஆனந்த வாழ்வினைக் கொடுப்பாய்
மாணழகுத் திருமங்கலச் செல்வம்
மனைதொருமிலகிட நல்காய் குகனே (கந்தா)

தவயோகிகளின் இதயக்குகைவளர்
சிவயோகச் சுடரே — ஜயஜய
நவஜீவனமருள் சமயோக சாதன
நாயகனே சரணம் — முக்தி
தாயகனே சரணம். (கந்தா)

உள்ளும் புறமும் உயிரும் உடலும்
உலகும் விரிவானும் — கடலும்
துள்ளும் ஆறும் மலையும் உனது
துலங்கும் அருள்வடிவே — ஓம்
சுப்ரமண்ய குருவே — ஜயஜய (கந்தா)

வறுமை மடமை அடிமை சிறுமை
வஞ்சத் தொல்லைகள் — இனங்கெடு
சஞ்சல மாயங்கள் — வராதே
மறுமலர்ச்சிதா புதியவாழ்வுதா
மனநிறைவு தாராய் — முருகா
மயக்கு வினைதீராய் (கந்தா)

போக்கும் வரவும் வாக்கும் வடிவும்
பொருளும் ஆனாய் நீ — என்னைத்
தாக்கும் வினையை நீக்கிச் சிவனை
ஆக்காய் உனக்காளாய் — சுத்
தானந்தத் தோழா — சரவணபவனும் (கந்தா)

கந்தா வாவா — கலாபமயில்மேல்
கார்த்திகேயா வா
கந்தா வாவா — சுந்தரவேலா
கலிநலியப் புதுநல் — யுகமே
கண்டுகளித்திடவே — கருணைக்
கடலிற் குளித்திடவே! (கந்தா)

# திறமான புலமையெனில்..

பட்டமளித்தல்; பதக்கமணிதல்; பொன்னாடை போர்த்தல்; புகழ்மாலை சூட்டல் – வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன் அவர்கட்கு நம் ஈழமணித் திருநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றுவரும் பாராட்டு விழாக்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் இவை. ஆயிரக்கணக்கான அன்பர்கள் தாமாகவே முன்வந்து தம் அன்பையும் நன்றியையும் அகமகிழ்வையும் வெளிப்படுத்தும் இவ்வேளையில், ஒரு சில எழுத்தாளர்கள் இப்படிக் கேட்கின்றார்கள்: தென்னாட்டிற் பிறந்தவருக்கு இந்நாட்டில் விழா ஏன்?

வினாவின் பின்னணியை ஆராயாமல், விடையை மட்டும் விளக்குகின்றோம்.

கி. வா. ஜ. ஒரு நாட்டின் மன்னரா? அல்லர், அல்லர்.

இந்நாட்டு அதிகாரபீடத்தின் ஆணையின் பேரிலா அவருக்கு மணிவிழா நடைபெறுகின்றது? அன்று, அன்று.

அவர் தலைசிறந்த சினிமா நடிகரா? அல்லர், அல்லர்.

விழாவிற்கு அனைவரும் வந்தேயாகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் போடப்பட்டதா? அன்று, அன்று.

ஆனால், ஏராளமானவர்கள் சேர்ந்து சீரான முறையில் விழாக்களை நடாத்துகின்றார்களே, காரணம் என்ன?


தாய்த் தமிழின் மீதும் தமிழ் முருகன் மேலும் மட்டற்ற பக்தியுடைய கி. வா. ஜ. விடம் ஆழ்ந்த அறிவுண்டு; அன்புச் செல்வமுண்டு; இவையிரண்டும் இணைந்த திறமான புலமையுமுண்டு. தன் நாவாலும், பேனாவாலும் இலட்சக் கணக்கானோரின் இதயங்களை ஈர்த்துவரும் காந்தமலை அவர்.

தம் இதயங்கவர்ந்தவருக்குத் தம் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிக்க இத்துணைப் பெருந்தொகையினர் கூடுவதில் வியப்பேது? விந்தையேது?

இந்நாட்டு எழுத்தாரின் தேசாபிமானத்தைப் பாராட்டலாம் ஆனால், மற்றையோரின் மாசற்ற திறமைக்கு அளிக்கப்படும் மதிப்பைக்கண்டு எழும் மனக்குமுறலுக்கு ஒரு திரையாக அதை உபயோகிக்க கூடாதல்லவா?

" அறிவாகிய கோயிலிலே
அருளாகிய தாய் மடிமேல்
பொறி வேலுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ்வுறவே புவிமீதருள்வாய் "

'பாரதி'



# தமிழ்த் தெய்வம்!

**கி.வா.ஜகந்நாதன்**

முருகன் தமிழ்த் தெய்வம்.

இப்படிச் சொல்வதனால் அவனுடைய பெருமையை ஒரு குடத்துக்குள் அடைப்பதுபோல ஆகி விடுகிறது என்றுசிலர் எண்ணலாம். முருகன் உலகத்துக்கும் தெய்வந்தான். ஆனால், அவனுடைய இராசதானி தமிழ் நாடு. இதனால்தான் அவனைத் தமிழ்த் தெய்வம் என்று சொல்லுகிறோம். 'அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப், பிரமமாய் நின்றசோதிப் பிழம்பு'தான் முருகன் திருக்கோலம் கொண்டு வருகிறது. அந்தக் கோலத்தின் பெருமையையும் அழகையும் தமிழர்கள் உணர்ந்துகொண்ட அளவுக்கு மற்றவர்கள் உணரவில்லை. இந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்டே முருகன் தமிழ்த் தெய்வம் என்று சொல்லுகிறோம்.

முருகன் தமிழ்நாட்டின் தெய்வம்; தமிழ்மொழியின் தெய்வம். இதற்கும் நல்ல காரணம் உண்டு. தமிழ் இலக்கண இலக்கியங்களின் வாயிலாக முருகனைத் தெரியும் அளவுக்குப் பிறமொழி நூல்களால் தெரிந்துகொள்ள முடியாது. தமிழ்மொழி எல்லாச் சமயத்தினருக்கும் பொதுவானது. தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களைப் படைத்தவர் எந்தச் சமயத்தினராயினும் முருகனைப்பற்றிச் சொல்லாமல் இருப்பதில்லை. அவனுக்குரிய மதிப்பைக் குறைப்பதில்லை இதனால், அவன் சைவர்கள் தெய்வம் என்று சொல்லாமல் தமிழ்த்தெய்வம் என்று சொல்கிறோம். இதைச் சற்றே ஆழ்ந்து கவனிக்கவேண்டும்.

தமிழில் பொருள் இலக்கணத்தை அகம் என்றும் புறம் என்றும் பிரித்து வைத்திருக்கிறார்கள். இலக்கியங்களிலும் இந்தப் பிரிவு உண்டு. அகப்பொருளில் ஐந்துதிணைகள் உள்ளன. அதில் முதல் திணைகுறிஞ்சி. மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய பகுதியைக் குறிக்கும் குறிஞ்சிநிலம் என்று சொன்னார்கள். இப்படியே பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று மற்றத் திணைகளுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த அமைப்புக்கள் எப்போது உண்டாயின என்றுதெரியவில்லை. மிகப்பழங்கால முதலே இந்த வரையறைகள் இருக்கின்றன.

ஐந்து திணைகளில் முதல் திணை குறிஞ்சி. உலகம் தோன்றும்போது, அதாவது பிரளயத்தில் மூழ்கியபிறகு மறுபடியும் உலகம் தோற்றம் அளிக்கும்போது, முதலில் மலையே தோன்றிற்றாம். "மலைநாறிய வியன் ஞால

த்து" என்றும், "கற்றேன்றி மண் தோன்ருக் காலத்தே" என்றும் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கூறுகின்றன. நிலநூல்வல்லாரும் இந்த உண்மையை ஒப்புக்கொள்கிருர்கள். அதனுல்தான் குறிஞ்சித்திணை முதல்திணை ஆயிற்று.

நிலவகையால் குறிஞ்சி முதலில் இருப்பது போலவே ஒழுக்க வகையாலும் குறிஞ்சியே முதலிடம் பெறுகிறது. ஒழுக்கத்தை உரிப்பொருள் என்று வழங்குவது இலக்கண மரபு. குறிஞ்சித் திணையின் உரிப் பொருள் புணர்ச்சியும் அதனேடு தொடர்புடைய நிகழ்ச்சிகளும். பிரிவு, இருத்தல், ஊடுதல், இரங்குதல் என்ற மற்ற நான்கு திணைகளுக்குமுரிய உரிப்பொருள்கள் குறிஞ்சி உரிப்பொருளாகிய புணர்ச்சிக்குப் பின்னரே நிகழ்பவை. ஆகவே குறிஞ்சித் திணையே முன்வைக்கப் பெறுகிறது.

ஒவ்வொரு திணைக்கும் கடவுள் இன்னுர் என்ற வரையறை தமிழ் இலக்கணத்தில் இருக்கிறது. குறிஞ்சிக்கு முருகனும், பாலைக்குத் துர்க்கையும், முல்லைக்குத் திருமாலும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும் தெய்வங்கள். முதல்திணையாகிய குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன் "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்று நக்கீரர் பாடுகிருர். முருகனை முதலில் தோற்றிய குறிஞ்சித் திணைக்குத் தெய்வமாக வைத்ததில் ஓர் உண்மை புதைந்திருக்கிறது. முதலில் தோன்றிய மலையில் தோன்றிய மனிதனே முதல் மனிதன். முதல் மனிதனுக்குக் கடவுள் உணர்ச்சி தோன்றி அன்பு செய்தபோது அவன் கடவுளை முருகனுகக் கண்டான் என்ற கருத்தைத் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்று இதைக்கொண்டு சொல்லலாம் அல்லவா?

இப்போது நமக்குக் கிடைக்கும் தமிழ்நூல்களில் மிகப்பழமையானது தொல்காப்பியம். அது,

"சேயோன் மேய மைவரை
உலகமும்"

என்று முருகனைக் குறிஞ்சித் தெய்வமாகக் கூறுகிறது. இதற்கு முன்புள்ள நூல்களும் இப்படித்தான் சொல்லியிருக்க வேண்டும். அவை நமக்குக் கிடைக்கவில்லை. தொல்காப்பியர் மறைவழி ஒழுகியவர். ஆதலால் அவர் முருகனை முதல் திணைத் தெய்வமாக வைத்துப் பாடியதில் வியப்பு ஒன்றும் இல்லை.

வீரசோழியம் என்ற இலக்கண நூல் ஒன்றுண்டு. அதை இயற்றியவர் புத்தமித்திரர். அது ஐந்து இலக்கணங்களையும் கூறும்நூல். புத்தமித்திரர் பௌத்தர். வேதநெறி அவருக்கு உடம்பாடு அன்று.

அகத்தியருக்குச் சிவபெருமான் தமிழை அறிவுறுத்தியதாக நாம் சொல்வோம். இந்தப் பௌத்தரோ அவலோகிதேசுவரர் என்ற பௌத்த சமயதேவர் உபதேசித்ததாகச் சொல்வார். அங்கே அவர் மதமாற்றம் செய்திருக்கிருர்.

அத்தகையவர் ஐந்திணைகளுக்குரிய தெய்வங்களைச் சொல்கிருர். முதல் திணைக்கு முருகனையே தெய்வமாகச் சொல்கிருர். அவன் சைவர் தெய்வமென்று எண்ணியிருந்தால் ஒருகால் மாற்றியிருக்கலாம். அவனைத் தமிழ்த் தெய்வமாகவே எண்ணினுர். ஆகவே, இலக்கணமரபிலே மதமாற்றம் செய்யாமல் குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன் என்றே சொல்லுகிருர்.

வைதிகநெறியை ஒப்புக் கொள்ளாத இந்திய நாட்டுச் சமயங்களில் மற்ருென்று சைனம். சிறந்த அகப்பொருள் இலக்கணம் என்று போற்றப்பெறும் நூலாகிய அகப்பொருள் விளக்கத்தின் ஆசிரியர் நாற்கவிராச நம்பி என்ற சைனர். அவர் முருகனை வழிபடுபவர் அல்லர். ஆயினும்

அவர் சைனதீர்த்தங்கரர் ஒருவரைக் குறிஞ்சித் தெய்வமாக அமைக்க வில்லை. முருகனையே அகப்பொருளில் முதல் தெய்வமாக அமைத்து இலக் கணம் செய்திருக்கிறார். கிறிஸ்துவப் பாதிரியாக இருந்து தமிழ கற்றுத் தேம்பாவணி என்ற காப்பியத்தைப் பாடிய வீரமாமுனிவர் தொன்னூல் என்ற இலக்கணம் இயற்றினார். அவ ரும் முருகனுக்குரிய தலைமையை மறுக்கவில்லை; மாற்றவில்லை. முருகனை ஐந்திணைகளில் முதற்பீடத்தில் ஏற்றி வைத்திருக்கிறார். சமயங் கடந்த உண்மை இதுவாதலால் இதனையாரும் மறக்கவில்லை; மறைக்கவும் இல்லை.

முருகன் பல சமயத்தினரும் ஒப் புக்கொள்ளும் தமிழ்த் தெய்வம் என்று சொல்வதில் தடை உண்டா?

அகப்பொருளில் களவு, கற்பு என்று இரண்டு பெரிய பிரிவுகள் உண்டு. எல்லா வகையிலும் சிறப் புற்று ஒத்த தலைவனும் தலைவியும் அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தாமே சந்தித்துப் பிறர் அறியாத வாறு காதல் செய்வதைக் களவு என்றும், பலர் அறியத் திருமணம் செய்துகொண்டு இல்வாழ்வில் இன் பம் துய்ப்பதைக் கற்பு என்றும் கூறுவர். கற்பில் களவின்வழி வந்த கற்பு, களவின் வழிவராக் கற்பு என்று இருவகை உண்டு.

அகப் பொருளுக்கு ஆலவாய் இறைவனே அறுபது சூத்திரங் களால் இலக்கணம் வகுத்திருப்ப தாகத் தமிழர் நம்புவர். இறையனார் அகப்பொருள் என்று பெயர்பெறும் அந்நூல் இன்றும் நமக்குக் கிடைக் கிறது. அகப்பொருளுக்குத் தந்தை இலக்கணம் வகுக்க, தான் இலக் கியமாகநின்று நடத்திக் காட்டி னவன் முருகன். களவு மணத்தை வள்ளி நாச்சியாரிடம் செய்த காதலி லும் கற்பு மணத்தைத் தேவயானை யம்மையாரிடம் காட்டும் அன்பிலும் அவன் செய்து காட்டினான். இந்தக் கருத்தைப் பரிபாடலில் உள்ள பாட்டு ஒன்று தெரியவைக்கிறது. இதனாலும் முருகன் தமிழ்த் தெய்வம் என்பது வலியுறுகிறது.

புறப்பொருள் பெரும்பாலும் வீரத் தைப் பற்றியே பேசுகிறது அகப் பொருளோ காதலாகிய ஈரத்தைப் பற்றி விரிப்பது. முருகன் காதல் விளையாட்டும் நிகழ்த்தினான்; வீரவிளை யாடலும் புரிந்தான். அவன் திருமார் பிலுள்ள போகத்துக்குரிய தாராகிய கடம்பு அவன் காதல் காட்டும் தெய்வ மென்பதைப் புலப்படுத்துகிறது. அவன் திருக்கரத்தில் உள்ளவேல் அவன் பெருவீரன் என்பதைக் காட்டு கிறது. இப்படி அகத்துக்குரிய காத லின்பத்தில் திளைத்துச் சிறந்த காத லனாகத்திகழும் முருகன், புறத்துக் குரியவீரத்திலும் சிறந்து ஏறுபோல் நிற்கிறான் என்பதைத் திருமுருகாற் றுப்படையில்,

"மங்கையர்கணவ, மைந்தர் ஏறே"

என்று அடுத்தடுத்து வரும் இரண்டு திருநாமங்கள் புலப்படுத்துகின்றன. காதலில் சிறந்து மங்கையர் கணவ னாகவும், வீரத்தில் உயர்ந்து மைந் தர் ஏறாகவும் அவன் திகழ்கிறான்.

குறிஞ்சித் திணையாகிய முதல் அகத்திணையில் தலைமைபூண்டு நிற் கும் முருகன் புறத்திணைகளிலும் முதல் திணையில் ஒருவாறு வந்து தோன்றுகிறான். அகத்திணையில் முதல் திணையாகிய குறிஞ்சிக்குரிய குறிஞ்சிப்பூ முருகனுக்குரியது. புறத் திணையில் முதல்திணை வெட்சி: அதற் குரிய பூவும் வெட்சி என்னும் பெய ருடையது. அதனால்தான் அந்தத் திணைக்கே பெயர் வந்தது. அந்த வெட்சி முருகனுக்குரிய பூ.

"வெட்சித் தண்டைக் காலென்கிலே"

என்று அருணகிரிநாதர் பாடுவார். ஆகவே, புறப்பொருளின் முதல்திணை

யிலும் அவனுடைய தொடர்பு இருக்கிறது.

இந்த வகையாலும் முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள உறவுக்கும் தெள்ளத் தெளிய விளங்குகிறது.

இலக்கண வகையில் பார்த்தபோது இந்த உண்மையைப் பல திறத்தாலும் அறிந்து கொண்டோம். இனி இலக்கிய வகையிலும் வேறுவகையிலும் முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள ஒட்டுறவைக் காணலாம். தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றில் முதல் சங்கத்தில் குன்றம் எறிந்த குமரவேளும் புலவனாக இருந்து தமிழராய்ந்த செய்தி வருகிறது. அதனால்தான் குமரகுருபரர்,

"சங்கத் தமிழின் தலைமைப் புலவா தாலோ தாலேலோ" என்று பாடுகிறார். புலவனாக இருந்ததோடன்றி அவன் செந்தமிழாசிரியனாகவும் இருந்திருக்கிறான். அகத்தியனாருக்குத் தமிழை அறிவுறித்தியவன் அவன். சிவபெருமானிடம் தமிழைக் கேட்டுத் தெளிந்த அம் முனிவர் முருகனிடம் பின்னும் உயர்ந்த படிப்பைப் படித்துப் பெரிய இலக்கணத்தை இயற்றும் பேராசிரியராகிவிட்டார்.

"குறுமுனிக்கும் தமிழுரைக்கும்
குமரமுத்தம் தருகவே"

என்று குமர குருபரரும்,

"சிவனை நிகர் பொதியமலை முனிவனக மகிழ இரு
செவிகளிலும்இனியதமிழ்
—பகர்வோனே"

என்று அருணகிரிநாதரும் பாடுவார்.

கடைச்சங்க நூல்களை மூன்று வரிசைகளாகப் பிரித்து அமைத்திருக்கிறார்கள். பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு என்பன அவை. பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு என்று ஒன்றன்பின் ஒன்றாக வைத்துச் சொல்வது மரபு. அந்த வரிசையில் முதலில் நிற்கும் மாலை பத்துப்பாட்டு. அதில் பத்து நெடும்பாட்டுக்கள் இருக்கின்றன. அவற்றில் முதலாக நிற்பது திருமுருகாற்றுப்படை. அது முருகனைப் பற்றி நக்கீரர் பாடியது. கடைச்சங்க நூல்கள் முப்பத்தாறு: அவற்றில் முதல் வரிசையால் நிற்பது பத்துப் பாட்டு; அதில் முதல்பாட்டாக நிற்பது திருமுருகாற்றுப்படை.

"பாவுள், முன்னுற வந்து நிற்கும்
முருகாற்றுப் படைமொ ழிந்தான்"

என்பர் சிவப்பிரகாச சுவாமிகள்.

முப்பத்தாறு தத்துவங்களில் முன் நிற்கும் சிவதத்துவம் போல முப்பத்தாறு நூல்களில் முதலாவதாக நிற்பது முருகனுடைய புகழ் கூறும் நூல். தமிழ் இலக்கியத் தொகுப்பில் முருகனுக்கு முதலிடம் உண்டு என்ற உண்மையை இது தெரியவைக்கிறது.

எட்டுத்தொகை நூல்களில், முதலில் தொகுக்கப்பெற்றது குறுந்தொகை என்று தக்க காரணங்களுடன் அமரர் டாக்டர் ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆகவே எட்டுத் தொகை நூல்களில் முதலில் நிற்பது குறுந்தொகை என்று சொல்லலாம். அதில் கடவுள் வாழ்த்துச் செய்யுளாக இருப்பது "தாமரை புரையும்" என்ற பாட்டு. அது முருகனை வாழ்த்தும் பாட்டு. ஆகவே பத்துப்பாட்டில் முதலில் முருகன் நிற்பதுபோல எட்டுத் தொகையிலும் நிற்கிறான் என்று சொல்லலாம் அல்லவா?

இப்படியே முருகனைத் தமிழர்கள் முன்வைத்துப் போற்றிய திறத்தைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

பழையஇலக்கண இலக்கியங்களை ஒட்டிச்சொன்ன இந்தக் கருத்துக்களோடு இந்தக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

முருகன் தமிழ்த் தெய்வம் என்ற உண்மையை மறுக்க வகை உண்டோ?

★

# இலக்கியச் சித்திரம்

★ காணிக்கை ★ மு. கனகராசன் ★

தெய்வீகப் பிழம்பு அது. வெறும் மலையல்ல. எல்லார்க்குமே உன்னத ஒளியை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் அதுவேதான் உலகின் ஜீவதீபம்.

மலர்களின் பரிசுத்தம், மழலையரின் பூரிப்பு, மாணிக்கங்களின் ஒளி, மதுரமான கீதம், மந்தகாச நிலவு, மனுக்குலத்தின் தத்துவம் எல்லாமே அங்கே இருந்துதான் பிரவாகிக்கின்றன.

சுடாத அந்தச் சுடரைத் தொட வேண்டும் என்பது எல்லாரினதும் ஆவல். தொழுகையும்கூட.

எந்த ஆத்மாவின் சிறுபுள்ளிகளாய்த் தெறித்துச் சிதறிக்கிடக்கின்றனரோ, அவர்களின் ஆத்மார்த்தமான தவமெல்லாம் மீண்டும் அந்த ஆத்மாவில் ஐக்கியமாகிவிட வேண்டும் என்பதுதான்.

அங்கே போய்விட்டால்......

ஒளியைக் காணலாம், ஜீவனைப் பெறலாம், அமரத்துவ மெய்தலாம், முக்தி பெறலாம், 'முதல்வரைத் தரிசிக்கலாம்.

தவிப்பு! திளைப்பு! துடிப்பு!

'அவர்' எப்படிப் ''பிதா''வானார்?

'அவர்' ஒரு நாள் 'முக்தி' யடைந்தார். உயிரை ஆக்கினார், அன்றே உள்ளத்தைக் கடந்தவரும் ஆனார்.—இதனால்தான் முக்தியிலிருந்து தோன்றியவர்கள் மீண்டும் அந்த மூலத்தை யடையத் துடிக்கின்றனர்.

இந்தத் தீவிரம் அர்ச்சுனனைப் பற்றிக்கொண்டது. 'அங்கே' போகத் தவித்தான். முடியவில்லை. முடியாதென்றும் அவன் எண்ணவில்லை.

இதைக்கண்ட கிருஷ்ணபகவான் வந்தார். 'உன் ஆவல் பூர்த்தியாக வேண்டும். அவ்வளவுதானே. இதோ எனக்கே புஷ்பாஞ்சலி செய். உன் எண்ணம் சித்திக்கும்' என்றார்.

அர்ச்சுனன் மனதைக் குவித்தான். கிருஷ்ணர்மீது மலர்களையும் குவித்தான்.

பின்னர்தான் 'கயிலை' போகும் சந்தர்ப்பமே கிட்டியது. அங்கே—

ஹா! அவன் அர்ச்சித்த பூக்களெல்லாம் ''அவர்'' பாதங்களைத் தழுவிக் கிடக்கின்றன.

பரிசுத்தமான இதயங்களிலிருந்து அர்ப்பணிக்கப்படும் காணிக்கைகள் எவரிட மிருந்து வந்தாலும் ஆண்டவன் சந்நிதிமுன் விலை மதிப்பற்றவைதான்.

செங்கண் நெடியான் மேல்த்
தேர்விசயன் எற்றியபூப்
பைங்கண்வெள் ஏற்றான் தாள்க்
கண்டற்றால்—எங்கும்......

(முத்தொள்ளாயிரம்)

★




## ★ ஊதுகுழல் பத்திரிகைகள்

ஈழத்து இலக்கிய உலகிற்கு இன்று காது அடைத்துப் போய்விட்டது. காரணம் நானுவித ஊதுகுழல்களின் ஓசை உத்தஸ்தாயில் ஒலிப்பதனுலாகும். நாளுக்கு நாள் அந்த இரைச்சல் அதிகமாகிக் கொண்டே வருவதனுல் இலக்கியவுலகம் செவிடாகிக் கொண்டே வருகின்றது.

இந்த ஊது குழல்களில்தான் எத்தனை வகை! எமக்கு மேற்கேயுள்ள பாரிய இரும்புலைக் கூடத்திலிருந்து உற்பத்தியான ஊதுகுழல்; இதற்கு எதிர் முகாமிலுள்ள இன்னெரு உலைக் கூடத்திலிருந்து உற்பத்தியான ஊதுகுழல்; இவற்றிடையே நம்நாட்டில் உற்பத்தியான பனையோலை ஊதுகுழல்

இவ் ஊதுகுழல்களை ஊதுபவர்கள் யார்? சிறுவர்களா, கற்றறிவில்லா மாந்தர்களா?-இல்லை. காலப்பாதையில் மனித சமுதாயத்தையே வழிகாட்டிச் செல்லும் சிந்தனைச் சிற்பிகள். இலக்கியச் செம்மல்கள். இவர்களின் ஊது குழல்களின் எண்ணிக்கை பெருகிவருகிறதே தவிர, இன்னிசையின் தரம் அதிகரித்ததாகத் தெரியவில்லை. இதனுல் நாட்டில் பெரும் மயக்கம். வாசக எழுத்தாள நண்பர்களின் மனங்கள் ‘குழம்பிய குட்டையாகி விட்டன. அதனுல் ஆக்க இலக்கியங்கள் ஸ்தம்பித்து விட்டன. ஆக்க பூர்வமுயற்சியிலீடுபடவேண்டியவன் எதை எதையோ வெல்லாம் (இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை எல்லாம்) எண்ணிப்பார்க்க ஆரம்பித்துவிட்டான். அவனே அவன் எழுத்திலேயே நம்பிக்கையற்று போகத்தொடங்கி விட்டான். இவற்றிற்கெல்லாம் காரணம்—

இன்று பெருகிவரும் ஊதுகுழல் பத்திரிகை’களாகும். சாக்கடைப் பொருளாகத் தினந்தோறும் வந்து குவியும் தரக்குறைவான தென்னிந்திய பத்திரிகைகளையும் நூல்களையும் கண்டு மனம் புழுங்கிக்கொண்டிருந்த நமக்கு (இதனுல் எமது நாட்டுப் பணம் ஏராளமாகக் கடத்தப்படுவதுடன் எமது இலக்கிய உணர்வினையும் இந்த நச்சு இலக்கியங்கள் நாசப்படுத்தி விடுகின்றன), ஈழத்திலே சில பத்திரிகைகள் தேசிய உணர்வினையும், தமிழ்மொழிப்பண்பினையும், நம் நாட்டுப் பத்திரிகைளின் போக்கையும் இலக்கியத்தையும் வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு எழுந்தபோது மிக்க மகிழ்ச்சியை அளித்தது. நாமும் எம்மால் இயன்றளவு ஆதரவளித்தோம். ஆனுல் —

அவர்களின் தொடர்ந்து வரும் நடப்பு நிகழ்ச்சிகளையும் அவதானிக்குமிடத்து இவையாவும் தேசிய உணர்வுடன் பிறக்காது இன்னெரு நாட்டின் பிரச்சாரக் கருவியாக-ஊதுகுழல்களாக மாறியிருப்பதை அறிய முடிந்தது. பிறநாட்டான் நம் நாட்டைத் தனது சந்தையாகக் கருதினுல் அதற்குப் பொருளுண்டு. ஆனுல் நம்நாட்டு

தேசிய எழுத்தாளர்கள் என்று கூறித் திரிபவர்கள் எங்களை பிற நாட்டிற்கு காட்டிக்கொடுக்கும் கைக்கூலிகளாக மாற்றப் படுகிறார்கள்-இந்த ஊது குழல் பத்திரிகைகள் வாயிலாக

இந்த ஊதுகுழல் பத்திரிகைகள் எழுத்தாளர்களை தங்கள் பக்கம் சேர்த்துக்கொள்ளக் கையாளும் வழிகள் இருக்கின்றதே அவை மிகவும் பயங்கரமானவை. தங்கள் பத்திரிகைகளில் எழுதிய ஒரு காரணத்திற்காக (தரமான எழுத்தாளர்கள் இப்படி ஊது குழல் பத்திரிகைக்கு எழுதுவதில்லை) ஒருவரை உச்சநிலைக்கு ஏற்றி நீரே உலக எழுத்தாளர் என அவர் முன் மட்டும் துதிபாடுவார்கள். (அவர்நாளை எழுதாவிட்டால் சாக்கடையில் தள்ளப்படுவது வேறு விடயம்) அல்லது அவரது படைப் பொன்றை தங்கள் ஊதுகுழல் நாட்டின் மொழியில் பெயர்க்கச் செய்து விட்டு-பார்த்தாயா உனது படைப்பு பிறமொழியால் பெயர்க்கப்பட்டதற்குக் காரணம் நம்பக்கமிருந்ததால் தான் என்று கோரஸ் பாடுவார்கள். பாவம் சில புகழ்விரும்பி எழுத்தாளர்கள் தண்டனிடுகிறார்கள். அல்லா விட்டால் தமது கொள்கைக்குப் புறம்பான எழுத்தாளன் படைப்பு எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் (உயர்ந்ததாக இருந்தால்தான் இவர்களுக்கும் பயம்) அதனை மட்டம் தட்டவும், இலக்கியதரத்தை கீழிறக்கிப் பேசவும், எழுதவும் முனைவர். இந்தப் பயங்காட்டலுக்கு சில எழுத்தாளர் எப்படியோ மசிந்தும் போய் விடுகிறார்கள். இவர்களின் இந்த முயற்சி ஹிட்லரின் சிஷ்யன் கோயபல்ஸின் முயற்சியாகவே விளங்குகிறது. ஹிட்லருக்காக கோயபல்ஸ் என்ன செய்தானோ (இலக்கியவாதிகளை அழைத்து சாம, பேத, தான, தண்ட முறைகளால் தங்கள் கொள்கைகளை பிரதிபலிக்கச் செய்தது போல) அதே வேலையையே இவர்கள் செய்கின்றனர்.

இவ்வளவும் செய்யும் இப்பத்திரிகைகள் என்ன கூறுகின்றதென்றால்- தங்களைத் தவிர ஏனைய பத்திரிகைகள் எல்லாம் பிற்போக்கு ஊதுகுழல்கள் எனக் கேலி செய்கின்றன. இவர்களது பிற்போக்கு' ஈழத்திற்கே உரித்தான தேசிய சிந்தனை அனைத்துமே ஆகும். தேசியம் தேசியம் என்று பிறநாட்டுக்குக் காவடி எடுக்கும் இவர்கள் தங்கள் 48 பக்கப் பத்திரிகையில் 32 பக்கத்தை தங்கள் ஊதுகுழல் நாட்டின் பிரச்சாரத்திற்கு ஒதுக்கிவிடுகிறார்கள். மிகுதி 12 பக்கமும் ஈழத்தைப் பிரதிபலிப்பதாகக் கூறும் பிறமொழிக் கதைகள் இடம்பெறுகின்றன. அதாவது ஈழத்து மக்களின் வேடம்பூண்ட குறிப்பிட்ட நாட்டவர்கள்.

ஆகவே-ஈழத்தைப் பொறுத்தவரை தேசிய உணர்வும், தமிழ்ப்பண்பும் நிரம்பப்பெற்ற இலக்கியங்கள் தோன்றுவதற்கான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்றே கூறல் வேண்டும். தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தடை செய்யவேண்டும் எனக் கூக்குரலிடுபவர்கள் குறிப்பிட்ட தூதரகங்கள் மூலம் இறக்குமதியாகும் நூல்களை தடைசெய்யவேண்டும் என்பது ஏன் கூறவில்லை. இறக்குமதி நூல்களை தடைசெய்தால்தான் உள்நாட்டு இலக்கியம் வளரும் என்று எண்ணியதற்கும், தற்போது நிகழ்வதற்கும்-மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்தியாசம்கூட இல்லையே. ஈழத்து இலக்கிய உணர்வினை அதிகரிக்கச் செய்யவும், நமது இலக்கியம் உலக அரங்கில் தனித்துவம் பெறவும் எழுத்தாளர்கள் இரவல் சிந்தனைகளைப் பெறாது, தமக்கென ஒரு சிந்தனையையும் எழுத்தையும் பத்திரிகையையும் கொண்டிருத்தல் அவசியமாகும். ★

**விமர்சனம்**

# ஆண்டாள் நாட்டியநாடகம்

ஆண்டவன் மீது வைத்த அன்பு காதலாகப் பரிணமிக்க அவனருளால் அவனையே தன் அன்புக் கணவனுக அடைந்தவள் ஆண்டாள் ''சூடிக் கொடுத்த சுடர்க் கொடி''யின் கதையை ஆடியும் பாடியும் ஆர்வமுடன் படித்தும் நடித்தும் வருகின்றனர் ஆஸ்திகப் பெருமக்கள். புனிதப் பேரெழில் நிறைந்த ஸ்ரீ ஆண்டாளை நேரிலேயே தரிசிப்பதைப் போன்ற பிரமையை இரகசிகருள்ளத்தில் ஏற்படுத்திய பெருமைக்குரியவர்கள் யாழ்-கலைமன்ற இயக்குனர் செல்வி திரு. குமாரசுவாமியும் அவருடைய மாணவிகளும்.

தேன் மலர்க் குவியலிலே பூஞ்சிரிப்புச் சிந்தும் மாந்தளிர்க் குழந்தையாகக் கோதை தோன்றுவதும், பெரியாழ்வாரின் அருமை மகளாகி ஆடிப் பாடுவதும், கனவிலும் நனவிலும் கண்ணனையே நினைந்து நினைந்து நெஞ்சம் உருகுவதும், தன் கனவுகளைத் தன் உயிர்த் தோழிகளிடம் சொல்லிச் சொல்லிக் களிபேருவகை கொள்ளுவதும் கண்ணுக்கு இதமாக, கருத்துக்கு அமுதாக, கனவுக்குப் பொருனாக அமைந்தன.

ஆசிரியை சொல்லிக் கொடுத்ததைத் தாம் செய்து கெடுத்துவிடுவோமோ? என்ற அச்சம் உள்ளத்துள்ளே இருந்ததனுற்போலும் முதலிரு காட்சிகளில் தோன்றிய சிறுமிகள் சிலரின் நடனத்தில் உயிர்த்துடிப்பு அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆனுல் தொடர்ந்து வந்த காட்சிகள் முழுத் திருப்தியையும் தந்தன. நடனத்தைப் பொறுத்தவரை எந்த ஒரு நடன மணியையும் குறிப்பிட்டுக் குறை சொல்ல முடியவில்லை. அதே வேளையில் பெரிய ஆண்டாள்-செல்வி திரு குமாரசுவாமி, ஆண்டாளின் உயிர்த்தோழி-செல்வி கல்யாணி பாலச்சந்திரன், கிருஷ்ணன்-செல்வி அம்பிகா குமாரசுவாமி, பெரியாழ்வார் - செல்வி உமையாள் இரத்தினசிங்கம் ஆகியோரை, விசேடமாகப் பாராட்டாமலிருக்கவும் முடியவில்லை. கிருஷ்ணரின் ஆடையை மட்டுமல்லாது அங்கங்களையும் நீலவண்ணமாக்கி, ஆண்டாளை ஆட்கொள்ளும் காட்சியையும் இணைத்திருந்தால் குறை என்ற சொல்லுக்கே இடமில்லாது போயிருக்கும்.

வழுவூரார் பாணியை வழுவாது பின்பற்றும் செல்வி. திரு குமாரசுவாமி அழகும் பொருளும் நயமும் கனிவும் நிறைந்த சாஹித்யங்களைத்தந்த திரு. ந. வீரமணி, அவற்றைப் **பாவம்** உணர்ந்து பாடிய திரு ராம் குமாரசுவாமி, திருவாட்டி சத்தியபாமா இராஜலிங்கம், அவர்கட்கு அனுசரணையுடன் வாசித்த பக்கவாத்தியக் கலைஞர்கள் ஆகியோர் இந்த நாட்டிய நாடக வெற்றியின் மூலகர்த்தாக்கள். அந்த வெற்றியால் பக்தியுணர்வும், மனநிறைவும் கலைநுகர்வும் பெற்ற நாம் பாக்கியசாலிகள்.

நீண்ட நெடு நாட்களின் பின் யாழ்ப்பாண இரசிகர்களுக்கு இக் கலைவிருந்தைப் படைக்கச் செய்த இலங்கை-அமெரிக்க நட்புறவுச் சங்கத்தினரையும் பின்னணியில் நின்று முழுமூச்சுடன் உழைத்த திரு. இராஜலிங்கத்தையும் எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை.—**எஸ். எஸ்.**

★

# தியான சாதனம்

— கவியோகி சுத்தானந்த பாரதியார் —

இந்த இதழ்முதல் கவியோகி சுத்தானந்தபாரதியார் அவர்களின் அருள்வாக்குகள் இடம்பெறும். ஆத்மீக வளர்ச்சிக்குதவும் அந்த மணிவாக்குகள் வரிசையில் இது முதலாவதாக இடம்பெறுகிறது. — ஆ - ர்.

## ஜபமாலை

ஜபமாலை! காலமெல்லாம் எனது ஜபமாலை; விண்மீன்கள் எல்லாம் அதிற் கோத்த மணிகள். "ஓம்... ஓம்... ஓம்" என்று உருவேற்றிச் செல்கின்றன. அருணாலயத்தில் அருட்சோதி எழுந்ததும், நட்சத்திர ஜபமாலை ஜோதியில் மறைகிறது. எனது ஜபமும் ஒளியிற் கலக்கிறது. காலைப் புட்கள் "சிவ சிவ... ஹர ஹர" என்று ஜபிக்கின்றன.

சோலை மலர்களெல்லாம் எனது நவரத்தினமாலை. கனிகளெல்லாம் பொன்மணிமாலை. மெல்லிய காற்றுடன் நானும் "ஓம்... ஓம்" என்று ஜபிக்கின்றேன். ஒவ்வொருமூச்சும் மந்திரஜபம். ஒவ்வொரு பேச்சும் நாமஸ்மரணை ஒவ்வொரு செயலும் திருவாராதனம். ஒவ்வொரு நெஞ்சத்துடிப்பும் ஜபவுரு. பரமாத்மனே! ஓங்கார ஜோதியே! என் வாழ்வெல்லாம் தியானநிஷ்டையான ஜபமாலையாகுக.

## ஜீவவீணை

பரமாத்மனே! இந்த ஜீவவீணையில் நீ பேரின்பப் பண்களை மீட்டுகிறாய். அதன் குடம் மூலாதாரம். உடல் மேருதண்டம். மனம், சித்தம், அகங்காரம், புத்தி ஆகிய நான்கும் நான்கு வீணைத்தந்திகள். ஓங்காரமேளம் செய்து நீங்காத நித்திய கானத்தை உன் அன்புவிரல்கள் மீட்டுகின்றன. ஏழிசைகளும் ஏழு சைதன்யப் படிகள். அவற்றில் உன் குரலும் விரலும் ஏறி இறங்கி ஆயிரம் இன்பப் பண்களை மீட்டுகின்றன. பண்ணும் நீயே, பண்ணிசைப் புலவனும் நீயே; குரலும், விரலும் நீயே; ஜீவவீணையும் உனதே. பரமா! நின் வேதவொலிகள் அதில் நர்த்தனஞ் செய்க!

# மணிவிழாக் கண்ட மாமேதை



கி. வா. ஜ.

இடம்: நீர்வேலியிலுள்ள ஸ்ரீ இராஜேந்திரக் குருக்களவர்களின் இல்லம்; நேரம்: மத்திய உணவை உட்கொண்டுவிட்டுப் பெரும்பாலோர் 'கோழித் தூக்கம் போடும் நேரம். மணிவிழாக் கண்ட மாமேதை ஸ்ரீ

கி. வா. ஜகந்நாதன் அவர்களை எப்படியாவது சந்தித்து இரண்டொரு நிமிடங்களாவது உரையாடவேண்டும் என்ற ஆவலில் இப்படியான 'கள்ள நேர'த்தையே நான் தேர்ந்தெடுத்தேன். வெளியே காய்ந்த வெயில், 'உறக்கத்திற்கே உசிதமான நேரம் இது' என்பதை உணர்த்திக்கொண்டிருந்தது. உழைப்பின் மத்தியிற் கிடைக்கும் ஒரு சில மணித்துளிகளில் உறங்கிக்கொண்டிருக்கும் அந்த உயர்தமிழ் அறிஞருக்கு உபத்திரவம் கொடுப்பதா என்ற உறுத்தலுடனே உள்ளே சென்றேன். காய்தலும் ஒய்தலுமின்றி கன்னித் தமிழ்த் தொண்டு புரியும் அந்தக் கந்ததாசர், "கலைமகள்"ளுக்கும் "காந்தமலை"க்கும் கடிதங்களை எழுதியபடியே நிமிர்ந்து பார்த்து என் பெயர் சொல்லி அழைத்தபோது ஆனந்தத்திலும் மேலாக ஆச்சரியந்தான் என்னை ஆட்கொண்டது. ஓய்வெடுக்கவேண்டும் என்பதையே மறந்து எழுத்துப் பணி புரிவதுடன், முன்பு என்றோ ஒருநாள் சந்தித்த நினைவில், என் பெயரை மறவாதிருக்கின்றாரே!

கி. வா. ஜ. அவர்களுடன் உரையாட ஆரம்பித்தவுடனேயே, கலியுக வரதனிலும் கன்னித் தமிழிலும் அவர் வைத்துள்ள கட்டுக்கடங்காத பக்தியும் காதலும் 'சட்' டென்று புலப்பட்டுவிடும். இவர் பிறந்த மண் என்ற பெருமை கிருஷ்ணராயபுரத்துக்கு உண்டு; ஆனால் இவரை வளர்த்த பெருமை மோகனூருக்கே சேரும். மோகனூருக்கண்மையிலே காந்தமலை என்ற குன்று இருக்கின்றது. அங்கேயுள்ள முருகன் ஸ்தலத்திற்குச் சிறுவயதிலிருந்தே இவர் தினமும் செல்வாராம். அங்கே வெளியுலகை மறந்து திருப்புகழும் தேவாரங்களும் பாடிக்கொண்டே தியானத்தில் அமர்ந்திருப்பாராம். முருகன் தமிழ்த் தெய்வமல்லவா? தன்னுடைய அடியாராக இருந்தவரைத் தமிழின் அடியாராகவும் ஆக்கிவிட்டான் அந்த முருகன். காந்தமலையானின் கருணைக்குப் பாத்திரரான கி. வா. ஜ சென்னையிலேயே ஒரு "காந்தமலை"யை உருவாக்கிவிட்டார். ஆம், இந்தத் தமிழ்ப்பேரறிஞரின் எழில்மிகு இல்லத்தின் பெயரும் "காந்தமலை" தான்! இல்லம்மட்டுமல்ல, உள்ளே இருப்பவரும் ஒரு காந்தமலை என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். தன் அன்பால், அறிவுமிழும் பேச்சால், எளிமையால், கீழோராயினும் தாழவுரைக்கும் பண்பால், கன்னித் தமிழையும், கற்றோரையும் காமுறும் தன்மையால், கந்தவேள் மீது கொண்ட கரையற்ற பக்தியால் எல்லோரையும் தன்னிடமீர்க்கும் சக்தி இந்தக் காந்தமலைக்குண்டு! பழந்தமிழ் இலக்கியங்களில் வைத்த பற்றின் காரணமாக, மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் அந்த ஏடுகளைத்தேடி எத்தனையோ ஊரெல்லாம் அலைந்து, செல்லரித்தும் சிதைந்தும் போயிருந்தவற்றைச் செப்பனிட்டு, அச்சேற்றித் தமிழுலகிற்கு அரும்பெரும் பொக்கிஷமாகவழங்கியவர். தமிழ்த் தாத்தாவின் அன்புக்குரிய சிஷ்யனாக கி. வா. ஜ. வாய்த்திருக்காவிட்டால், தமிழிலக்கியங்கள் பல இப்போது கிடைத்திருக்கமாட்டா என்ற உண்மையை எல்லோரும் ஒப்புக்கொள்ளும்போது, அதை ஒப்புக்கொள்ள மறுப்பவர் ஒரே ஒருவர்தான்! அந்த ஒருவர்...? கி. வா. ஜ. தான்! "என் குருநாதர், தன் தள்ளாத வயதிலும் தமிழுக்காக உழைத்த உழைப்பையும் செய்த ஆராய்ச்சிகளையும் பார்க்கும்போது, நான் என்ன பிரமாதமாகச் செய்துவிட்டேன்!" என்று அடக்கமுடன் கூறுவார் இந்த அறிஞர். நவையறு தமிழ்ப்பாலூட்டி அவையிலே ஏற்றி வைத்துச் சுவையுடன் பேசச் செய்யும் தகுதியைத் தனக்களித்த அந்

தச் சாமிநாத குருவை வணங்காமல் இவர் பேச ஆரம்பிக்கவே மாட்டார். ஆமாம் தமிழ்க் குமரனையும் தமிழ்த் தாத்தாவையும் வணங்கிவிட்டால் இந் தத் தமிழ்க் குழந்தையின் நாவிலே தமிழ் தவழ்ந்து விளையாடும்; கேட் போரின் உள்ளங்களை இத்தமிழ்க் குழந்தை மகிழ்வூட்டும்.

ஐயரவர்களிடம் தமிழ் கற்றுத் தெளிந்தபின், "கலைமகள்" ஆசிரி யர் குழுவில் உதவி ஆசிரியராக 1932-ம் ஆண்டிற் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகளின் பின்னர் ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்ற கி. வா. ஜ. பழைய, புதிய இலக்கிய வடிவங்களுக்கெல்லாம் அதில் இட மளித்துப் பயனுள்ள, இலக்கியத்தர மான பத்திரிகையாக அதை வெளி யிடுகின்றார். "அமுத நிலையம்" என்ற வெளியீட்டகத்தின் உரிமை யாளரும் இவரே. இலக்கியக் கட்டு ரைகள், சமயக் கட்டுரைகள், நாட் டுப் பாடல் விளக்கம், சிறுகதைகள் முதலிய பல்வேறு வகைப்பட்ட 152 நூல்களைத் தமிழுலகிற்கு வழங்கியி ருக்கின்றார் கி. வா. ஜ. இவருடைய நண்பரான திரு. தனபாலசிங்கன் அவர்களின் வேண்டுகோளின்படி இவர் ஆக்கிய "சிதம்பர சுப்பிரமணி யன் புகழ்க்கதம்பம்" என்ற கவிதை நூலும் இவற்றுள் அடங்கும்.

கண்டிமாநகரில் நடைபெற்ற தமிழ் விழாவுக்கென 1947-ம் ஆண்டிலே முதன் முதலாக ஈழத்திற்கு வந்த கி. வா. ஜ. அவர்கள் இதுவரை பல தடவை இங்குவந்து இலக்கிய, சமய விரிவுரைகள் ஆற்றிப் பெரும்பணி புரிந்துள்ளார் தமிழர்களை மாற்றுந் தாய் மனப்பான்மையுடன் நடாத் திய ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட் சிக் காலத்தில், ஆட்சியாளரின் அழைப்பின்பேரில் அவர்களின் விருந் தினராக இங்குவந்த பெருமையும் இவருக்குண்டு.

சென்னையில் இவருடைய மணி விழாக் கொண்டாடப்பட்டபோது தமிழ்நாடே திரண்டு வந்து தன் நன்றிக்கடனைத் தெரிவித்து இப் பேரறிஞரின் நல்லாசியைப் பெற்றுக் கொண்டது. தமிழ்நாட்டு முதலமைச் சர் "காந்தமலை"க்குச் சென்று இவரை வணங்கிய காட்சியை ஸ்ரீ இராஜேந்திரக் குருக்கள் சொல்லும் போது மெய் சிலிர்க்கின்றது. பல்வேறு அரசியற் கட்சிகளின் தலைவர்கள், சினிமா நடிக நடிகையர், தமிழ் அறி ஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை யாளர்கள், சமூக சேவையாளர்கள் முதலிய பலதரப்பட்டோரும் இவரிடம் அன்பும் மதிப்பும் வைத்திருக்கின் றனரென்றால், அதற்கெல்லாம் இவ ரிடமுள்ள தமிழுள்ளந்தானே கார ணம்! தமிழ் நாட்டில் மட்டுமல்லாது, கடல்கடந்த பர்மாவிலும், ஈழத்திலும் நடைபெற்ற, நடைபெற்றுவருகின்ற பாராட்டு விழாக்கள், கி. வா. ஜ. தன் எழுத்தாலும் பேச்சாலும் இத் தனையாயிரம் மக்களையும் எவ்வளவு தூரம் கவர்ந்துவிட்டார் என்பதைக் காட்டுகின்றன.

கௌரவப் பட்டங்கள் பல பெற் றும் அவற்றைத் தன் பெயருடன் இணைத்து எழுதாதவர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள். மோகனூரி லுள்ள முருகனடியார்கள் ' முருகன ருள் பெற்ற முனிவரர்" என்ற பட் டத்தை முதன் முதலில் இவருக்கு வழங்கினார்கள். ஸ்ரீகாமகோடி பீடாதி பதி வழங்கிய திருமுருகாற்றுப்படை யரசு, வாகீச கலாநிதி ஆகியவையும், சிருங்கேரி சங்கராச்சாரியார் அளித்த தமிழ்க்கவிபூஷணம், புஷ்பகிரி சங்க ராச்சாரியார் வழங்கிய உபந்நியாச கேசரி, தர்மபுர ஆதீனம் வழங்கிய செந்தமிழ்ச் செல்வர், மதுரை திரு ஞானசம்பந்தர் ஆதீனத்தாரின் திரு நெறித்தவமணி, சென்னைத் தமிழ்ச் சங்கத்தினர் கொடுத்த தமிழ்ப்பெரும் புலவர் முதலாய பட்டங்கள் இவரி யற்றும் சைவத் தமிழ்ப் பணியின் அணிகளே. இவற்றுள் "வாகீச கலாநிதி" என்ற பட்டம் மட்டும்

எப்படியோ எல்லாருக்கும் தெரிய வந்து, இவருடைய அனுமதியின் றியே இவர் பெயருடன் இணைக்கப் பட்டுவருகின்றது. சில மாதங்களுக்கு முன்னர் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக் குக் கி. வா. ஜ. அவர்கள் கனகாபி ஷேகம் செய்யும் காட்சியைப் பத் திரிகையிற் கண்டேன். இன்று தமி ழன்பர்கள் எல்லாரும் தங்கப் பதக் கங்களைச் சூட்டி இவருக்குக் கனகா பிஷேகம் செய்வதைக் கண்ணாரக் காண்கின்றேன்.

''ஈழத்திலிருந்து 'கலைமகளுக்குக் கவிதைகளே வருகின்றன. கதைகள் வருவதில்லை. தரமானவற்றை. அவை பாரால் எழுதப்பட்டிருந்தாலும், கலை மகளி'ல் வெளியிடுவோம். இந்தியா வில் இப்போது பிரபலமாக விளங் கும் எழுத்தாளர்களின் கதைகளையே அவை திருப்தியற்றனவாக இருந் தால். திருப்பியனுப்புவோம். எழுதிய வர் யார் என்பதைக் கவனிக்காமல், எழுத்துத் தரமானதா என்பதைப் பார்ப்பதுதான் 'கலைமகள்' கடைப் பிடிக்கும் கொள்கை. ஈழத்து எழுத் தாளர்கள் 'கலைமகளுக்கு நிறைய எழுதவேண்டும். நல்ல கதைகள் கிடை த்தால், என்னைவிட அதிக மகிழ்ச்சி அடைபவர் இருக்கமுடியாது'' — ஸ்ரீ கி. வா. ஜ. நீட்டியுள்ள இந்த இலக் கியக் கரத்தை ஈழத்து எழுத்தாளர் இறுகப்பற்றுவார்கள் என நினைக் கின்றேன்.

தமிழ்த்தாத்தாவிடம் முறையாகத் தமிழ் பயின்று ஆழ்ந்த அறிவும் அரும் புலமையும் பெற்று, தமிழிலக் கியக்கடலுள் மூழ்கி, ஆங்கில, வட மொழி இலக்கியங்களில் நனைந்து, பக்தியிலக்கியங்களில் தோய்ந்தெ முந்து, ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற இந்துத் தமிழ்ப் பண்பின் ஒளிமிக்க சிகரத்தில் இணை யற்று வீற்றிருக்கும் இப்பேரறிஞர் இன்னும் பல்லாண்டு காலம் இளை ஞராயிருந்து இனிய தமிழ்ப்பணி புரிய, எளிமைநிறை அழகுதமிழ் அன்பு தவழ் முருகனை இறைஞ்சு கின்றேன். — 'சிற்பி'

**ஹனு + மான் = கன்னக்குழி**

*வாயுபகவானின் திருக்குமாரனுகப் பிறந்த அந் தக் குழந்தை உருண்டு திரண்டு மொழு மொழு வென்றிருந்தது. வட்டவடிவான அதன் முகம் பார்ப் போர் அனைவரையும் கவர்ந்திழுத்தது. கீழ்வானிலே ஜெகஜ்ஜோதியாகத் தோன்றிய சூரியனைச் சிகப்புப் பந்தென்று நினைத்த அந்தக் குழந்தை அதைப் பிடித்து விளையாட விரும்பித் தாவிப் பாய்ந்தது. குழந்தையின் அறியாமையை அவதானித்த இந்தி ரன் அதைக் காப்பதற்காக வெகு வேகமாக ஒருகணை யைச் செலுத்தினுன். சூரியனின் தகிப்பிலிருந்து குழந்தை காப்பாற்றப்பட்டது. ஆனுல் இந்திரனின் கணை, குழந்தையின் கன்னங்களில் நிரந்தரமாக இரண்டு குழிகளை ஏற்படுத்தி வாயுகுமாரனை 'ஹனு மான்' (ஹனு-கன்னம்; மான்-குழி) ஆக்கிவிட்டது.*

# நல்லூர்க் கந்தன்

இ. வைத்தியலிங்கம்

'எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினுல்
இடர்கள் எல்லாம் போமே' என்றும்

'வேதாந்த சித்தாந்தம் கற்றத னுலென்ன'
வேடிக்கைக் கதைகள் பேசினு லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே' என்றும்


'சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பக்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே'

என்றும் பாடி அருளி இருக்கின்ருர்கள் கொழும்புத்துறை யோக சுவாமிகள்.

தமிழ்த்திருநாட்டின் தனிப்பெரும் தெய்வம் முருகன். முருகன் நாமத்தை இசைக்கும்போதே ஒருவகை இன்பம் ஊற்றெடுத்து உள்ளமிசை பெருகியோடுகின்றதை அறியாதவர் யார்? நித்திய யௌவன சுந்தரமூர்த்தியான செவ்வேள் வேல்பிடித்த திருக்கரமும் தானுமாய்த் தமிழன் அகக்கண் முன்னும் புறக்கண் முன்னும் நின்று நர்த்தனமிடுகிருன். குன்றமுகும் சோலைவளமும் பெற்ற தென்னுடெங்கும் கோயில்கொண்டு, குழந்தையாகவும், குமரனுகவும், வில்லேந்தும் வீரனுகவும். உலக அனுபவம் பெற்ற கிழவனுகவும், உலகம், மாயை என்பதைக் காட்டும் ஞானபண்டிதனுகவும், ஞானத்தை ஊட்டும் சக்தியான வேலாகவும், உரு அற்ற பரப்பிரமமாகவும், அகத்தியருக்குத் தமிழினைத் தந்து சங்கம் அமைத்ததால் தமிழ் தெய்வமாகவும், தான் ஞானசக்தியாக இருந்து இச்சா, கிரியா சக்திகளான, வள்ளி தேவசேனுவுடன் மணக்கோலத்தில் காட்சிதந்து இல்வாழ்வில் இன்பம் காணவேண்டுவோர்க்கு இறைவனுகவும், பலவிதமாகக் காட்சியளிக்கின்ருன். ஈழவழநாட்டிலும் மயில்வேல்முருகனை நினைத்தால் ஆவேசங்கொள்ளாத தமிழரில்லை. கதிர்காமத்திலும், நல்லூரிலும், செல்வச்சந்நதியிலும், இந்த சிவசக்தியை இன்பம் தந்து, துன்பம் துடைக்கும் வேலாகவும், அருள் சொரிந்து, இருள் அகற்றி மனிதனுடைய அசுரக் குணங்களை மலர்த்தும் நிர்மலமான ஜோதிஸ்வரூபமான சுப்பிரமணிய சிவமாகவும் வணங்குகின்ருர்கள்.

தமிழர்களின் தலைநகரகமாக விளங்கிய நல்லூரின் கண்ணேயுள்ள கந்தனின் கோவிலின் கதை மிகவும் சுவையானது. இக்கோவில் நல்லூரில்

கி. பி. 1450ல் சிறீ சங்கபோதி புவனேகபாகு — என்னும் செண்பகப் பெருமாளால் அமைக்கப்பட்டது. அன்றியும் அவன் கோவிலுக்கு அண்மையில் ஓர்ஏரியும் அமைத்து யமுனா நதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளில், கொணர்வித்து அதனை "யமுனாரி" எனப் பெயரிட்டு வழங்கினான். பின்பு கி. பி. 1620ம் ஆண்டில் போர்த்துக்கேய தனியரசாட்சியில் முதல் தேசாதிபதியான பிலிப்தே ஒலிஞே என்பவன் நல்லூர்க் கந்தசாமிகோவிலை இடித்து அக் கோயிற் கற்களைக் கொண்டு கோட்டையும் வீடுகளும் கட்டினான். இதனால் தமிழ் சமயம் அழிந்துவிடும் என்று எண்ணினார்கள். அன்றியும் யமுனாரிக்குப் பக்கத்தே கிறிஸ்துவ ஆலயம் ஒன்றையும் அமைத்தார்கள். ஆனால் நல்லூருடைய முருகன் 1793ம் ஆண்டளவில் டச்சு அரசாங்கத்தில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றிய இரகுநாத மாப்பாண முதலியார் அவர்களின் முயற்சியால்



**பக்தர்கள் புடைசூழ நல்லூர்க் கந்தசுவாமி தேரேறிவரும் திருக்கோலக் காட்சி**

திரும்பவும் புதுப்பொலிவுடனும், வீரக்கனலுடனும் வெளிப்பட்டான். படிப்படியாக அவர்களுடைய சந்ததியினரால் தமிழ்நாட்டில் கூட இப்படி ஒருபுனித ஸ்தலம் இல்லையென்ற அளவிற்கு விருத்தி செய்யப்பட்டு சைவ உலகிற்கே நடுநாயகமாக விளங்குகின்றது.

இங்கு நடக்கும் விழாக்களுக்கு தினமும் பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் "முருகா முருகா" என்று கலந்துகொள்ளுகின்றார்கள். அழுகையர் ஒருபாலும், தொழுகையர் ஒருபாலும், சென்னியில் அங்கைதூக்கியர் ஒருபாலும், 'முருகா' எனக் கதறி காவடி எடுப்போரும், அங்கமெலாம் செடில் குத்தி ஆடுவோரும், அங்கத்தை உருட்டி பலகாததூரம் உருண்டுவருவோரும், வீதியைச் சுற்றி தினம் அங்கப் பிரதஷ்சணம் செய்வோருமாக எல்லோருமே முருகனின் பேரருளுக்குப் பாத்திரமாகின்றார்கள்.

இங்கு காணும் திருக்கோலக் காட்சிகளை உலகில் வேறு ஒரு இடத்திலும் காணமுடியாது என்றே கூறலாம். பல கோடிமக்களின் பாவப்பிணி தீர்க்கும் ஞான மருந்தாகிய வேலின் கோலாகலக் காட்சியும், பக்தர்களுக்கருள் முத்துக்குமரனின் மஞ்சக் காட்சியும், தந்தையே நான், நானே அவர் என்ற பேதமற்ற கயிலாசவாகனக் காட்சியும், எங்கும் நிறைந்து விளங்குவான் இறைவன், யாவும் அவனில் அடக்கம் என்பதை விளக்கும் மாம்பழத் திருவிழாக் காட்சியும், ஐந்து முகங்கள் சிவஸ்வரூபமாகவும், ஆறுவது சக்தி ஸ்வரூபமாகவும், பரப்பிரமத்தின் ஸ்வரூப்மாகவும் விளங்கி, பக்தர்களை அருள் வெள்ளத்தில் திளைத்து ஆனந்த நிலையைக் கொடுக்கும் ஆறுமுகனின் தேர்க்காட்சியும் கண்டு தொழ நாலாயிரம் கண்களும் போதாது. இந்த ஆவணிப் பெருவிழாவானது ஆடி அமாவாசை வந்து ஆறுவது நாள் முதல் இருபத்தி ஐந்து நாட்களுக்கு நடைபெறும். இந்த இருபத்திஐந்து நாட்களும் யாழ்ப்பாணமே விழாக்கோலம் பூண்டிருக்கும். எல்லாச்சாலைகளும் நல்லூருக்கே செல்வது போன்று, பக்தர்கள் திரள்திரளாக தினமும் நல்லூரை நோக்கிச் சென்று கொண்டிருப்பார்கள்.

"நல்லூரான் திருவடியை நான் நினைத்தமாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே, இரவுபகல் காணேனடி"

"தென்னாடுடைய சிவனே போற்றி
நல்லூருடைய முருகா போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" ★

**கனக - மொழி**

**என்னுடைய பத்து ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டு சொல்கின்றேன்; உன் அந்தஸ்துக்கும் மேலானவனுடன் என்றுமே உறவு வைக்காதே. ஏனெனில் அவன் உன்னை அடிமையாக்கி விடுவான்.**

**— கனக. செந்திநாதன்**




தேநீர் ஆறிக்கொண்டிருந்தது.

"ஆறிப் போகுது... எடுத்துக் குடியுங்களேன்..." என்றேன் முருகானந்தத்திடம். அவர் பத்திரிகையைப் பக்கத்தில் மடித்து வைத்துவிட்டுத் தேநீரை முக்குப் பேணியுடன் தூக்கிப் பிடித்துக்கொண்டு இரு தடவை அதைப் பார்த்தார்.

"அதில் விஷம் கிஷம் ஏதுமில்லை. தைரியமாகக் குடியுங்கள்" என்றேன் நான் சிரித்தபடியே.

முருகானந்தம் சிரித்துக்கொண்டே ஒரு மடக்கில் தேநீரைக் குடித்துவிட்டு, "நீ விஷம் என்று பேசியதும் மட்டக்களப்பிலுள்ள எங்களுடைய சின்னம்மாவின் நினைவுதான் வருகிறது. நான் யாழ்ப்பாணம் வருவதற்கும் சின்னம்மாதான் காரணமாயிருந்தாள். அந்தக் கதையை யாரிடமாவது சொல்ல வேண்டுமென்று ஆசை. நீ விஷம் என்றதும் சின்னம்மாவின் அதிசய சரித்திரம் கண்முன்னுல் நடப்பது போலிருக்கிறது ..." முருகானந்தம் சற்று நிறுத்தினுர்.

"சொல்லுங்கள்... இதை வைத்து ஏதாவது ஒரு கதையே எழுதி விடலாம்...அதுவும் நீங்கள் சொன்னுல் அது கதை மாதிரியே இருக்கும்... சொல்லுங்கள்..."—நான் அவசரப் படுத்தினேன்.

"எதைச் சொன்னுலும் கதை,கதையென்று...சே!... இதற்கு முன் யாரிடமும் நான் இக்கதையைக் கூறவில்லை...உன்னிடம்தான் முதல்முறையாகக் கூறப்போகிறேன்..." என்று சொல்லி நிமிர்ந்து உட்கார்ந்தார். நானும் ஆவலுடன் சற்று நெருங்கி உட்கார்ந்தேன்.

முருகானந்தம் ஆரம்பித்தார்.

மட்டக்களப்பில் கோப்பித்தூள் மில் வைத்திருந்த செந்தில்நாதனை யாரும் அறியாமலிருக்க முடியாது. அவருடைய ஏக புத்திரன்தான் ராசலிங்கம். செந்தில்நாதனுக்குத் தங்கம் என்ற ஒரு விதவைத் தங்கை இருந்தாள், அவளுக்குச் சின்னம்மா என்று ஒரே மகள்...

செந்தில்நாதனின் வீட்டுப் பக்கமாகத் தான் தங்கத்தின் வீடும் இருந்தது. ஆனுல், துரைசாமியின் குடும்பத்தின் நிலையில் தங்கத்தின் குடும்பம் இருக்கவில்லை. தங்கத்தின் புருஷன் ஒரு லொறிடிரைவராகத்தான் இருந்தான். ஒரு லொறிவிபத்தில்தான் இறந்து போனுன்... அவன் பணம் ஏதும் வைத்துவிட்டுப் போகவில்லை. செந்தில்நாதன் தான் தங்கையின் குடும்பத்துக்குக் கொஞ்சம் உதவி செய்துவந்தான்....

சின்னம்மாவுக்கு இருபது வயது வந்தபோது, தங்கம் தனது தமைய

னிடம் கல்யாணப் பேச்சை எடுத்தாள். எந்த நோக்கத்துடன் தங்கம் இந்தப் பேச்சை எடுத்தாளென்பது செந்தில்நாதனுக்குத் தெரியும். சின்னம்மாவை மருமகன் ராசலிங்கத்துக்குக் கட்டிவைக்க வேணும் என்றொரு ஆசை. ஆனால், சின்னம்மா பெரிய உத்தியோகத்திலிருக்கும் ராசலிங்கத்துக்கு ஏற்றவளில்லை என்று தங்கத்தின் உள்மனம் சொல்லும்...

சின்னம்மா நிறத்தில் கொஞ்சம் கறுப்பு. முகம் பார்க்க லட்சணமாக வசீகரம் நிறைந்திருக்கும். ஆனால் அவள் முகத்தில் மொத்தமாக ஒரு அசட்டுக்களையும் கலந்திருக்கும். சின்னம்மாவை இரு தடவை பார்த்தவர்கள் 'இது ஒரு வெருளியடா' என்று சொல்லிவிடுவார்கள். அதோடு அவள் வீட்டு வேலைகளில் தனது தாய்க்குக் கொஞ்சங்கூட உதவியில்லை. கொஞ்சங்கூடச் சூட்டிகையில்லை என்று அக்கம் பக்கத்தவர்கள் சொல்லுவார்கள்...

ராசலிங்கத்துக்கு இந்த வெருளியைக் கட்டிவிடுவதால் அவனுடைய பிற்கால வாழ்க்கைக்கு ஒரு தடை கட்டிவிட்டது மாதிரி ஆகிவிடுமோ என்று செந்தில்நாதன் நினைத்ததில் தவறில்லை. அவனுக்கு வேறு இடத்தில் நல்ல சம்பந்தமாகப் பார்க்கலாம் என்ற எண்ணம் அவருக்கு. "அதற்கென்ன நல்ல இடமாகப் பார்த்துச் செய்துவைப்போம்" என்று தங்கச்சியிடம் தந்திரமாகச் சொல்லிவிட்டு இருந்துவிட்டார்...

இருந்தாற்போலத் தங்கம் இறந்துபோய்விட்டாள். வெருளி மருமகளான சின்னம்மாவை நினைத்துக் கலங்கிப் போனார் செந்தில்நாதன். எப்படியாவது அவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்துவிட வேண்டுமென்று தீர்மானித்து அதற்கான முயற்சிகளிலும் இறங்கினார். ஆனால், என்னவோ தெரியவில்லை, தனக்குக் கல்யாணம் வேண்டாம் என்று மறுத்துவிட்டாள் சின்னம்மா. செந்தில்நாதன் எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார்: தனக்கு எதுவும் வேண்டாம் என்று கெஞ்சிக் கூத்தாடினாள் சின்னம்மா, பேசாமல் விட்டுவிட்டார் செந்தில்நாதன்.

இந்நிலையில் கொழும்பில் உத்தியோகம் பார்த்த ராசலிங்கம் அங்கு ஒரு பெண்ணுடன் சிநேகிதம் வைத்துக்கொண்டதையும், அவளையே தான் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாகவும் தகப்பனாருக்கு எழுதியிருந்தான். செந்தில்நாதனுக்கு அவன் ஒரேபிள்ளை. அவனது விருப்பத்துக்கு மாறாக நடக்கச் செந்தில்நாதனுக்குத் தைரியமில்லை. அவரே நேரிற் சென்று விபரங்களை அறிந்தார். நல்ல இடமாகப்பட்டது. கல்யாணத்தை உடனேயே முடித்துவிட்டார்...

ராசலிங்கம் களனியில் ஒரு தனி வீடு எடுத்து அதில் குடும்பம் நடத்த ஆரம்பித்தான். சின்னம்மா வீட்டிலிருந்து எந்நேரமும் அழுதபடி இருந்தாள். தாயை நினைத்துத்தான் அழு



**பாரதீ!**

நேரெதிர் நேரெதிர் பண்புகள் - வந்து
சேருது சேருது வம்புகள்!
நூருது மான உணர்ச்சிகள் - கெந்திக்
கேருது போலிப் புணர்ச்சிகள்!
தீருது தீருது ஒற்றுமை - கம்மிச்
சோருது தாய்மொழிப் பற்றதோ!
பாரதி பாரதி பாரதீ - எம்மைப்
பாலிக்க மீண்டும் வருவையோ!

★ வி. கந்தவனம்.

கிறான் என்று எண்ணினார் செந்தில்நாதன். அவளுடைய கவலையை மறக்கச் செய்வதற்காக அவளைக் களனியிலுள்ள ராசலிங்கத்தின் வீட்டிற் கொண்டுபோய் விட்டு வருவதெனத் தீர்மானித்தார். அங்கு போனால் அவளுடைய அசட்டுத்தனமும் நீங்கிவிடுமென நினைத்தார். ராசலிங்கம் வரையில் சின்னம்மா ஒரு சுத்த வெருளிதான். ஏதோ பாவம் என்று நினைத்துச் சேர்த்து வைத்துக் கொண்டான்......

மட்டக்களப்பில் பரம அசடாக இருந்த சின்னம்மா களனியில் நிரம்பப் புத்திசாலித்தனமாக இருந்தாள். வீட்டு வேலை யெல்லாவற்றையும் அவளேதான் செய்தாள். ராசலிங்கத்தின் சொந்த சௌகரியங்கள் அத்தனையையும் அவளே கவனமாக, நிதானமாகச் செய்தாள். அதனால், சின்னம்மா அங்கு வந்தது ராசலிங்கத்தைவிட அவனது மனைவி இந்திராவுக்குத்தான் அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது...

''இனிமேல்தான் கதையின் முக்கிய பாகம் வருகிறது. கவனமாகக் கேள். ராசலிங்கத்துக்குத் தன் மனைவி இந்திராவின்மீது உயிர். இந்திராவின் விருப்பப்படியே எல்லாம் நடந்தது. ராசலிங்கத்தைவிட இந்திராவைத் திருப்தி செய்வதில்தான் அதிக அக்கறை எடுத்துக்கொண்டாள் சின்னம்மா. எதனால்? ராசலிங்கம் தனக்குப்போடும் சாப்பாட்டை நிறுத்திக் கொண்டு விடுவானென்று எண்ணமில்லை. அல்லது அவன் கோபித்துக் கொண்டு தன்னை மட்டக்களப்புக்கு அனுப்பிவிடுவானோ என்ற பயமுமில்லை...

சின்னம்மாவின் நெஞ்சம் களனிக்கு வரும்வரை நிர்மலமாக இருந்தது எனலாம். அவளுடைய வாழ்க்கையில் யாரும் தோன்றி அங்கே எவ்வித பதிவும் செய்யவில்லை...

ஆனால் சில நாட்களில், வெறும் மரமாக, ஒரு சேதனவஸ்துவாகப் போயிருந்த சின்னம்மாவின் இருதயம் அரும்புவிட்டு மலர ஆரம்பித்துவிட்டது. ராசலிங்கம்கூட எனக்கு ஏதோ விஷயமாகக் கடிதம் எழுதியிருந்தபோது. அதில், ''சின்னம்மாவை இப்போது பார்த்தால் அடையாளங்கூடக் காணமாட்டியள் அவள் மாறிப்போனாள்'' என்று குறிப்பிட்டிருந்தான்...

அசடன்! சின்னம்மாவின் மலர்ச்சிக்குக் காரணம் அவனே யென்பது அவனுக்கெப்படித் தெரியும்! அவனுடைய மனதில்தான் இந்திரா நிறைந்து கிடக்கிறாளே!... தனது உள்ளத்தில் எழுந்துவளர்ந்த உணர்ச்சியை, நிரம்பிய கவனத்துடன் அருமையாகப் பாவித்துக்கொண்டிருந்தாள் சின்னம்மா...

இப்படியே ஒரு வருஷம் கழிந்தது. ராசலிங்கம் ஒரு முட்டாள் பயல்! அவனுடைய மனம் இந்திராமேல் வைத்த பிரேமையில் போதை யுண்டதுபோல மயங்கிக் கிடந்தது. இந்த மயக்கத்தில் வீட்டுக்கு அடிக்

## பாவணக்கம்!

சாரதியாய்ச், சரித்திரத்தி னேழைமைக்கு மேலே
சாதித்த சாதனைகள் சமர்விளைத்த தாலே,
காரதிர்ந்து கணையடிகள் காட்டுகிற வாறே
காற்றாகக், கனவாகக் கவிநூறு செய்தே,
வாரணத்து வலிமையினை வாழ்க்கையினில் கண்டே,
வாடாதப் பெருஞ்சுடராய், வையகமே போற்றும்
பாரதியே, பைந்தமிழே, படைமுழக்கே, சங்கே!
பாவணக்கம் சூட்டியுனைப் பணிகின்றோம் வாழி!

★ மலைத்தம்பி.

கடி வந்துபோய்க்கொண்டிருந்த மகா தேவனைப்பற்றியும் அவன் சிந்திக் கவேயில்லை. மகாதேவன் இந்திரா வுடன் பாடசாலையில் ஒன்ருகப் படித் தவனும். அதைச் சாட்டு வைத்துக் கொண்டு ராசலிங்கத்தைத் தனது நண்பனுக்கிக்கொண்டு வீட்டுக்கு அடிக்கடி வந்துபோனுன். இந்திரா விடம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங் கினுன். அவளும் அவனிடம் இலகு வாகச் சிக்கிவிட்டாள்...

ராசலிங்கத்துக்கு இதெல்லாம் தெரி யாதேயன்றி, சின்னம்மா தனது புதிய அறிவு உதயத்தில் அவர்க ளிருவருக்குமிடையில் ஏற்பட்டு வளர் ந்துவந்த உணர்ச்சிகளைக் கண்டு பிடித்துவிட்டாள், ஆனுல், அதைப் பற்றி அவள் ராசலிங்கத்திடம் சாடை யாகக்கூடச் சொல்லவில்லை. அதனுல் அவன் மனம் கஷ்டப்படும். இல்லா விட்டால் அவனுக்கு இந்திராமே லிருக்கும் பிரேமை மயக்கத்தில் சின் னம்மாவின் குற்றச்சாட்டிலுள்ள நியா யானியாயத்தைக் கண்டுகொள்ள அசக்தனுக இருந்துவிடுவதுமன்றி, தன்மேல் சீறிவிழுந்து துரத்தியும் விடுவானே என்று பயப்பட்டதில் நியாயம் உண்டுதானே. அவனருகில் இருப்பதையே சொர்க்கமாகச் சின் னம்மா நினைத்தாள். அதை இழக்க அவளுக்குத் தைரியமில்லை. அதைச் சுயநலம் என்று நீ சொல்வாய். என் னைக் கேட்டால் அந்தச்சுயநலத்துக்கு மனிதத்துவச் சட்டங்களிலே மன் னிப்பு உண்டு என்பேன்...

மகாதேவன் — இந்திரா விவகாரம் பெரிதாக வளர்ந்து முற்றியது. கடை சியாக ஒருநாள் இந்திரா புருஷனுக்கு ஒருகடிதம் எழுதிவைத்துவிட்டுச் சில முக்கிய சாமான்களை எடுத்துக் கொண்டு மகாதேவனுடன் ஓடிவிட் டாள். இந்திரா ராசலிங்கத்துக்கு எழுதிவைத்த கடிதத்தைச் சின்னம்மா பிரித்துப் படிக்கவில்லை. இருந்தாலும் அதில் என்ன இருக்கிறது என்று அவள் ஊகித்துவிட்டாள். அதை எடுத்துக் கிழித்தெறிந்துவிட்டாள்...

அன்று வழக்கத்தைவிட இரண்டு மணிநேரம் தாமதித்து, இரவு ஏழரை மணிக்கு வந்தான் ராசலிங்கம். ''இந் திரா'' என்று கூவிக்கொண்டே வந் தான். சின்னம்மா பெரிய பொய் சொன்னுள். பக்கத்துவீட்டு ஆட்க ளுடன் இந்திரா படத்துக்குப் போய் விட்டதாகச் சொன்னுள். ராசலிங்கம் சந்தேகப்பட இடமில்லை. இப்படி அடிக்கடி இந்திரா போகிறவள்...

வழக்கம்போல உடைகளைக் கழற்றி விட்டுச் சாப்பிட்டான். எந்த நெருக் கடியிலும் எட்டுமணிக்குச் சாப்பிட்டு விடுவான் அவன். சின்னம்மாதானே சமையற்காரி. அநேகமாக அவள் தான் அவனுக்குப் பரிமாறுவது வழக்கம். அன்றும் வழக்கம்போலப் பரிமாறினுள். சாப்பிட்டுவிட்டுத் தன் னுடைய அறைக்குப் போய்விட்டான் ராசலிங்கம்...

இரவு ஒன்பது மணிக்குச் சின் னம்மா அவனுக்குப் பால்கொண்டு

**மஹாகவிதை!**

'புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை யென்னும்
வசையென்னுல் கழிந்த தென்றே
சுவைபுதிதாய் பொருள்புதிதாய் வளம்புதிதாய்ச்
சொற்புதிதாய்ச் சோதிமிக்க
நவகவிதை என்னுளும் அழியாத மஹாகவிதை
ஆக்கிய பாரதிநீ வாழ்க.

✶ அண்ணல்.

போனுள். அதைக் கையில் வாங்கிக் கொண்டு தற்செயலாக நிமிர்ந்து பார்த்தான். சின்னம்மாவின் முகம் வெளுத்திருந்தது; கண்களில் நீர் மல்கியிருந்தது.

"சின்னம்மா, என்னஒரு மாதிரியாயிருக்கிறுய்...?" என்று கேட்டான் ராசலிங்கம்.

ஒன்றுமில்லை — தலையிடிக்குது ... உடம்பு படபடவெண்டிருக்கு...என்று சொன்னுள் சின்னம்மா...

மேற்கொண்டு எதுவும் பேசாமல் பாலைக் குடித்தான் ராசலிங்கம். சின்னம்மா அவன் பாலைக் குடித்துவிட்டுப் பேணியைத் திருப்பிக் கொடுக்கும்வரை நின்றிருந்து வாங்கிக் கொண்டு திரும்பினுள்.

அப்போது அவனை அவள் பார்த்திருக்கக்கூடிய பார்வையைக் கற்பனைசெய்து பார்! அதிலே எவ்வளவு அர்த்தம் அடங்கியிருக்குமென்று சிந்தித்துப்பார்! இதுவரை நான் அவர்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்திருக்கும் விவரங்களையும்கொண்டு, அந்த நிலைமையில் அந்த இரண்டு வடிவங்களையும், அதில் சின்னம்மாவின் கண்ணையும் அதிலிருக்கக்கூடிய அர்த்தத்தையும் கற்பனை செய்துபார்!...

அவள் கொடுத்தபாலை அவன் குடித்ததிலும், அவள் அவனைப் பார்த்த பார்வையிலும் என்ன விசேஷமென்று கேட்கிறுய்? அதுதான் அவனைச் சின்னம்மா கடைசித் தடவை பார்த்தது. அந்தப் பாலில்...பாவம்! சின்னம்மாவை நான்குற்றம் சொல்ல மாட்டேன்...ஆமாம் அவள் பாலில் விஷத்தைக் கலந்து கொடுத்து விட்டாள்...

இந்த இடத்தில் சிறிது நிறுத்திய முருகானந்தம் என்னைப் பார்த்தார்.

"அதுசரி; இந்த விபரங்களையெல்லாம் யார் சொன்னுர்கள்? என்று கேட்டேன்.

"சின்னம்மாதான் சொன்னுள். இந்திரா ஓடிய விவகாரத்தை அறிந்தவர்கள் ராசலிங்கம் தற்கொலைசெய்து கொண்டுவிட்டான் என்றே எண்ணி விட்டனர். சின்னம்மா பெரிதும் அதிர்ச்சியடைந்துபோயிருந்தாள். அவள்மேல் பரிதாபப்பட்டு அக்கம் பக்கத்துக்காரன் என்றமுறையில் என்னுடன் அழைத்து வைத்துக்கொண்டேன். அப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாகச் சொன்னுள்.

"...அந்தச் சிறுக்கி ஓடிப்போனது அத்தானுக்குத் தெரிஞ்சால்... எனக்கு நினைக்கவே பயமாயிருக்குது...ஒரு சொல்லுக் கேக்கவேணுமெண்டு ஆசை...என்னை நீதரன் காப்பாத்த வேணுமெண்டு அத்தானின் காலிலை விழுந்து மண்டாட வேணுமெண்ட ஆத்திரம்.. ஆனுல் அது என்னுலை முடியேலை...பயமோ வெட்கமோ என்னவோ அவரிட்டை நானே சொல்லமுடியலை... அந்த விஷத்தைக் கலந்து குடுத்தபோது

**பாரதியாய் ஆக்காயோ?**

நீளிருளில் ஆழ்ந்துவிட்ட நெஞ்சக் கருவறையே!
சூலை இடத்துத் துவழும் புழுவாகி
நாதம் அடங்கி நலிவுற்றுழன் றுழன்றே
ஏதம் அடைந்தேனை இன்னும் வருத்தாதே
ஆகும் புதுக்கவிகள் ஆக்கற்கியலாது
நோகும் உயிர்க்குள்ளே நூரு யிரமெண்ணம்
ஏகும் பிறக்கும் இறக்கும் இவற்றை யெலாம்
பாகுக் கவிசெய்யப் பாரதியாய் ஆக்காயோ?

★ சொக்கன்.

நான்பட்டபாடு......அவர் குடிக்கிற போது கையைத் தட்டிவிடவேணும் எண்டும் நினைச்சன் ...... முடியேலை......இதுக்குமேலை சொல்லேலை ஐயோ...


இப்படியெல்லாம் அவள் பேசியது மிகவும் உருக்கமா யிருந்தது.

இரண்டு மூன்று கிழமைகளில் அவளுக்குப் புத்தி கெட்டுப்போய் விட்டது. சிலர் உதவியுடன் அவளை அங்கொடைக்கு அனுப்பிவிட்டேன். அதன்பிறகு எனக்கும் மட்டக்களப்பில் இருக்கவே பிடிக்கவில்லை...ஏதோ ஒருவித மனச் சஞ்சலம்...பேசாமல் யாழ்ப்பாணம் வந்துவிட்டேன்...

என்னதான் இருந்தாலும் இந்தச் செய்கைக்கான சின்னம்மாவின் அம் மனத்திலிருந்த நோக்கத்தை நினைக்கும்போது அவளை மன்னிக்கத்தான் தோன்றுகிறது......அது என்னவென்று உங்களுக்குப் புரிகிறதா? என்றார் முருகானந்தப்.

அந்த உயர்ந்த எண்ணம் நன்ருகப் புரிகிறது! அவன் தன் உயிரையே வைத்திருந்த இந்திரா காதலென்ற புனிதமான வார்த்தையின்கீழ் அவனுக்குத் துரோகம்செய்து விபசாரியாகஓடிவிட்டாள் என்ற விஷயத்தை அவன் அறியாமலே கண்களை மூடுவது உத்தமமென்று அந்தப்பேதை சின்னம்மா எண்ணிவிட்டாள். அவள் அப்படிச் செய்வதற்குக் காதல் என்பதுதான் காரணம். அப்படித்தானே' என்று முடித்தேன்.

முருகானந்தம் அமைதியாகத் தலையை அசைத்தார்★



## நம் பாரதி!

சாரதா

★

சேற்றிலே தாமரை பூத்ததாம் - என்னச்
செந்தமிழ் நாட்டிலே தோற்றியே
வேற்றுப் புலத்தா சாட்சியும் - மற்றும்
வெய்ய மிடிபகைச் சூழ்ச்சியும்
மாற்றித் தமிழினம் வாழவே - எங்கும்
மாண்பார் தமிழொளி சூழவே,
ஆற்ரெழுக் காய்ப்புதுப் பாக்களை - அள்ளி
அள்ளிச் சொரிந்த நம் பாரதி!

மாற்றுயர் மாமணி யாமவை - என்றும்
மங்காச் சுடர்விளக் காமவை;
மேற்றிசை வாணரும் போற்றவே - செய்யும்
மேன்மைக் கவிமல ராமவை;
ஊற்றென வற்ரு(து) உணர்வினை - என்றும்
ஊக்கிட வல்லன வாமவை
போற்றிப் புகழ்ந்திடு வோமவன் - துய்ய
பொன்னடி நெஞ்சிற் பொருத்துவோம்.



# நொண்டி மனம்

சத்யன்

கூட்டாந்தரையில் டொக், டொக் கென்று கட்டைகள்பதிந்து ஒலிக் கத் தன் வீட்டின்முன் வந்துநின்ற தேசிகன் தலை நிமிர்ந்து ஆகாயத் தைப் பார்த்தார். வானம் மப்பும் மந்தாரமுமாக, மழைத் துளிகளால் நிறைந்த மேகங்கள் கருமைபூசிக் கனத்துநிற்க, அந்தச்சுமை தாள மாட்டாது கோவெனக் கதறத் துடித்துநின்றன. "நல்ல காலம் மழை வருமுன் திரும்பிவிட்டோம்" என்று முணுமுணுத்தபடி கக்கத் தில் கால்களாய் வளர்ந்திருந்த கட்டைகளைப் படிக்கட்டில் வைத் துத் தன் உடலின் சுமையை அதில் இறக்கி உள்ளே நுழைந் தார். முழங்கால் வரை தொங்கிய இடதுகாலின் அரைப்பகுதி மெல்ல ஆடியது.

வாசல் திண்ணையில் அமர்ந்த வர் இரண்டு கட்டைகளையும் கீழே வைத்து விட்டு, "என்னப்பனே ரங்கநாதா" என்றபடி திண்ணை யின் பிடியில் சாய்ந்தார். காலம் பறித்துச் சென்ற ஆண்டுகள் தம் பரிசாக விட்டுச் சென்ற முதுமை, உடலை ஒடுக்க, வாழ்நாளெல்லாம் துன்பத்தைத் தவிர வேறு எதை யும் காணாது நலிந்துபோன இத யம் அந்த நாட்களை நினைத்தது. ஆதரவற்று வளர்ந்தும், எப்ப டியோ ஒரு தொழிலில் அமர்ந்து, இல்லறத்தையும் ஏற்படுத்திக் கொண்ட பிறகாவது தன்வாழ்வில் நிம்மதி தோன்றும் என்று அவர் எதிர்பார்த்தது தவருகிவிட்டது. எழிலின் திரட்சியாக ஓர் ஆண் குழந்தையைத் தந்து, களிப்பை வளர்த்தியவிதி அந்தக் குழந்தை பத்து வயதுச் சிறுவனாக வளர்ந்த போது பெற்றவளைப் பிரித்து நெஞ்சில் தீயைக் கொட்டியது. தேசிகன் தயங்கவில்லை. தன் அன்பாலும், பண்பாலும் அவரது வாழ்க்கையை ஒளிவிடச் செய்த பெண் தெய்வத்தின் பரிசைத் தானே தாயும் தந்தையுமாக இருந்து வளர்க்கத் தீர்மானித்தார். அதோடு தன் கொடூர விளை யாட்டை விதி நிறுத்தக்கூடாதா? சிறுவனான சங்கர் வளர்ந்து கல் லூரிப் படிப்பை முடிக்கும் தருணத் தில் தேசிகனின் இடதுகால் விபத் துக்காளாகித் துண்டிக்கப்பட்டது.

வேலையிலிருந்து விலகும் அவசியமும் ஏற்பட்டது. அலுவலகத்திலிருந்து கிடைத்ததொகை எத்தனை நாளைக்கு வரும்? சங்கர் படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போகத் தயாரானான். ஆனால், தேசிகனோ ''தேவையில்லை, நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றுவிட்டு ப்ராவிடெண்ட்பண்டு பணத்தை அவன் படிப்பிற்காக ஒதுக்கிவிட்டார். அன்றாடச் செலவிற்கு? வெகு விரைவில் ஒரு முடிவிற்கு வந்துவிட்டார் தேசிகன். சற்றும் கலங்காமல் ஓட்டல்களில் மாவு அரைக்கும் பணியில் அவர் இறங்கியதும் அறிந்தவர்கள் அதிசயித்தனர். ''என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? உங்கள் கௌரவம்...'' என்று இழுத்தவர்களுக்கு அவர் புன்னகையுடன், ''கௌரவமா? அது கைகளில் இருக்கணும் ஐயா. உழைப்பதுதான் கௌரவம்'' என்றபடி தமதுகோலை இழுத்துக் கொண்டு நடந்துவிடுவார்.

சங்கரும் படித்து முடித்து வேலையிலமர்ந்ததும், நல்ல பெண்ணாகப் பார்த்துத் திருமணத்தையும் முடித்தகையோடு மாவரைக்கும் பணிக்கு மூடுவிழா நடத்திவிட்டு ''அப்பாடா'' என்று உட்கார்ந்தார். வந்தவள் நல்லபெண். முடமான மாமனார்மேல் வெறுப்புக் கொள்ளாமல் அன்புடன் பேணினாள். தமது தொலையாத துன்பங்களுக்கு விடிவு காலம் ஏற்பட்டுவிட்டதாகக் கருதி மகிழ்ந்தார் தேசிகன். ஆனால், இரண்டே ஆண்டுகளில் அந்த மகிழ்ச்சி வெறும் கானல் நீராகிவிட்டது.

ஒழுங்காக இருந்த சங்கரிடம் திடீரெனச் சில மாறுதல்கள். வெளியே செல்லும்போது காதில் விழுந்த வார்த்தைகள் நன்றாயில்லை. கைநிறையச் சம்பளம் வாங்குகிறான். இருந்தாலும் வாசலில் யார் யாரோ வந்து நிற்கிறார்கள். வீட்டில் இருந்துகொண்டே இல்லை என்று சொல்லச் சொல்கிறான். வந்தவர்கள் திட்டிவிட்டுப் போகிறார்கள். இதையெல்லாம் திண்ணையிலமர்ந்து கேட்கும் தேசிகனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. பிள்ளை வழி தவறிவிட்டான் என்று மட்டும் தெரிகிறது. தெரிந்து என்ன செய்ய? காலும் கையும் செயலாக இருந்தாலே என்ன மதிப்பு இருக்கிறது?

தேசிகாச்சாரி யாரோ வரும் சப்தம் கேட்டுத் தலையைத் தூக்கினார். சங்கர்தான் நுழைந்தான். அவன் கூடத்திற்குள் காலடி வைக்கும்போது ''சங்கர்'' என்று அழைத்தார். சட்டென்று நின்று

### நிலைத்த நினைவு!

புலமைகொண்டு கவிசமைத்த புலவருள்ளே
புதுமைசெய்தார் நின்போலப் பிறரிங்குண்டோ
இலகுதமிழ் எளியநடை இனித்த சந்தம்
இலக்கணத்தின் அமைதியென இயம்புகின்ற
கலவைநிறை நறுஞ்சாந்துக் கவிதை தந்து
கமழ்வீசிக் களித்துலவத் தமிழைக் காத்த
நிலவுபுகழ்ப் பாரதியே நின்றன் நாமம்
நெஞ்சகத்தே நினைவொளியாய் நிலைத்ததையா.

★ செ. கதிரேசர்பிள்ளை.

திரும்பினுன். "என்ன?" சுழித்தோடும் கேள்வியுடன், கடுகடுப்போடு அருகே வந்தான். இதெல்லாம் சில நாட்களாக அவன் பேச்சில் இருந்தவைதான். அருகில் வந்தவனை ஏறிட்டுப் பார்த்தார். நேற்றுத் தோளில் தவழ்ந்த பிள்ளை இன்று ......?

"என்ன? சீக்கிரம் சொல்லுங்கள் எனக்கு டைம் ஆச்சு"

கனைத்தபடி அவர் கூறினுர், "உன் போக்கு வர வர சரியில்லை. என் காதில் பரா பரியாக விழுவதெல்லாம்......" நல்ல பாம்பு மாதிரி விருட்டென்று நின்ருன். "ரோடில் எவனே சொல்வதையெல்லாம் கேட்கணுமா என்ன? அவனவனுக்கு அவனவன் காரியத்தைப் பார்த்துக்கத் தெரியும். கண்ட இடத்திற்கும் போகாமல் விழுந்துகிடப்பதற்கென்ன? கால் தான் முடமாயிற்றே"! பாவி. வார்த்தைகளைக் கனலாக வீசி விட்டுப் போய் விட்டான்.

"டேய்" என்ற அதட்டல் தொண்டைவரை வந்தது. அதை மென்று விழுங்கிக் கொண்டார். ஆவேசத்தில் முகம் சிவந்தது. உடல் படபடத்தது. முடமான இடதுகாலின் மழுமழுவென்றிருந்த முட்டி துடித்தது.

'அடப்பாவி. மழுக்கக் காய்ச்சிய அம்பு மாதிரி 'முடம்' என்ற வார்த்தையை வீசிவிட்டுப் போய்விட்டான். இந்த முடமான காலின் வாதனையைப் பொருட்படுத்தாமல் அவனுக்காக உழைத்ததெல்லாம் மறந்துவிட்டு...'

'அடச்சே. என்ன இது? அவன் தான் ஆத்திரத்தில் புத்தி யில்லாமல் ஏதோ பிதற்றினுல் நாமும் சிறுபிள்ளை மாதிரி...' ஓலமிட்ட மனதை அடக்கிக் கொண்டார்.

தன் வெம்மையைக் குறைத்து மஞ்சள் வெய்யிலைப் பரவவிட்டிருந்தான் கதிரவன். மனதின் வேதனையைச் சற்று ஆற்றிக் கொள்ளவாவது வெளியே சென்று வரத் தோன்றிற்று. ஊன்றுகோலை இடுக்கிக்கொண்டு, கதவைக் கடந்து நீண்டசாலைக்குவந்துவிட்டார். பினுல் பாம், பாம் என்று ஹாரன் சப்தம் கேட்டதும் சற்று நின்ருர், அவரருகே வந்தகார் நின்றது,

"என்ன தேசிகா சௌக்கியமா?" என்றகுரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தார். டாய்லெட்ஸ் சாமான்கள் தயாரிக்கும் சேஷன் அண் கோவின் அதிபர் ராமசேஷன் தான் காரில் புன்னகையுடன் அமர்ந்திருந்தார். இருவரும் பால்ய நண்பர்கள்.

**வித்தகன் பாரதி!**

நித்தம் கவிதைகள் பற்பல - உயர்
நெஞ்சை யள்ளும் பல காவியம்
இத்தனை யுந்தோன்றக் காரணம் - என்றும்
இலங்கிடுந் தாரகை போலொரு
புத்தம் புதியச காப்தத்தைக் - கவி
புனைந்தே நிலைசெய்த பாவலன்
வித்தகன் பாரதி என்றெண்ண - களி
மேவிடும் பாவலர் நெஞ்செலாம்.

★ வ. கோவிந்தபிள்ளை.

"ஆமாம் உன் பிள்ளை அந்த வேலையை விட்டு விட்டதாகக் கேள்விப்பட்டேன். என்ன விஷயம்?'' திடீரென்று அவர் இதைக் கேட்டதும் தேசிகன் திடுக்கிட்டார். "ஏன்? உனக்குத் தெரியாதா?'' என்பதுபோல் அவர் பார்த்ததும் ''ஆமாம். அப்படித்தான் சொன்னான்'' என்று சமாளித்தார். பெற்றவன் பிள்ளைக்கிடையிலான ரசா பாசங்களெல்லாம் மற்றவர்களுக்கு ஏன் தெரிய வேண்டும்?

"சரி, அவனை அப்புறமா என்னை வந்து பார்க்கச் சொல். என் கம்பெனிக்கு நம்பகமா ஆள் தேவை. முன்பு இருந்தவனுக்கு முந்நூறு வரை கொடுத்தேன். சங்கருக்கு அனுபவம் இருக்கு இல்லையா? அவனை மறந்து விடாம வரச்சொல்ம்''... என்றபடி கிளம்பிவிட்டார்.

தேசிகன் சிலையாக நின்றார். வேலைபோன விஷயத்தைப் பற்றிக் கூடச் சொல்லாமல் அவ்வளவு அலட்சியமா? சே, என்ன பிள்ளைகள். கட்டைகளை எடுத்துவைத்து நகர்ந்தார்.

வாயிற்படியில் ஏறும்போது அவரது வரவை அறிவிப்பது போல ஊன்று கோல்கள் ஒலியெழுப்பின.

''ஏய். இந்தா. கட்டை வந்தாச்சு. கதவைத் திறந்து தொலை. கால் இல்லேன்னுபேர், ஊர் சுத்தறதுலே குறைச்சல் இல்லே.'' சங்கரின் பேச்சு தெளிவாகக் கேட்டது.

"ஐயோ, பெரியவர்களை, பெத்தவரைப்பார்த்து இப்படிச் சொன்னா...... இது உங்களுக்கே அடுக்குமா?'' அவன் மனைவி காமு இந்த அக்கிரமத்தைத் தாங்காமல் குரல் நடுங்கச் சொன்னாள்.

"சரிதான்போ பெரியவர்களாம், பெரியவர்கள்,''

காமு மௌனமாகக் கதவைத் திறந்தாள்,

அவனது வார்த்தைகள் ஈட்டிகளாகப் பாய்ந்தன. பாவம். வேலை போன துயரத்தில் பேசுகிறான் என்று மனதைத் தேற்றிக்கொண்டு உள்ளே சென்று காமுவைப் பார்த்தார். கண்கள்கலங்கி, முகம் வாடியிருந்தது. கன்றிப்போன கன்னம் என்ன நடந்திருக்கு மென்பதைச் சொல்லாமல் சொல்லிற்று. அவர் கைகால் அலம்ப நீர் வைத்துவிட்டு இலைபோடப் போனாள். "வேண்டாம் அம்மா. எனக்குப் பசி இல்லை" என்றபடி கைகால் சுத்தம் செய்து கொண்டு தேசிகன் நகர்ந்தார். கட்டைகளின் உதவியுடன் தள்ளாடும்

**கவிச்சாரதி!**

விடுதலைக்கோ ருரங்கொடுத்த வீரன்! சாதி
வேற்றுமைக்குக் குழியமைத்த தீரன்! மாதர்
அடிமைதனை அறுப்பித்த தொண்டான்! தேசத்(து)
அமை ஒருமைப் பாட்டினையும் பாட்டிற் கண்டான்!
மிடிமைதவிர் தொழின்முறைகள் விரித்த நாவான்!
விண்ணமுதும் விரும்புகின்ற மதுரப் பாவான்!
படிமிலசயெம் தமிழ்த்தாய்க்குப் புதுக்கால் தந்த
பாரதியைச் சாரதியைப் பணிகின்றேனே!

★ அல்வாயூர் மு. செல்லையா.

கிழவரைப் பார்க்கப் பார்க்க அவள் கண்களில் நீர் வடிந்தது. போகும் வழியில் சுவரில் சார்த்தி யிருந்த பாயையும், தலைகணியை யும் எடுத்துக் கொண்டு வாசல் திண்ணைக்கு வந்தமர்ந்தார்.

பக்கத்து அறையிலிருந்து பேச் சுக்குரல் கேட்டது.

''என்ன சாப்பிடலியாமா?'' சங்கர் கேட்டான்.

''பசி இல்லையன்னுர்.''

''ச்சு, சாப்பிடலேன்னு மிச்சம் போ. தண்டமா கொட்ட யாராலே உழைக்க முடியும்?''

''இதென்ன இப்படி வாய்க்கு வந்ததைப் பேசிண்டு'' காமு பட படத்தாள்.

''அடச்சீ. பேசாதே. என்னைப் பற்றிக் கண்டபடி கேள்வி கேட் கத் தெரியறதே. ஒரு வேலை வாங் கித்தர வக்கிருக்கா? காலைச் சுத் தின இதுமாதிரி. நொண்டியும், முடமுமா, ஆண்டிப் பண்டாரம் மாதிரி'' இயல்பான பாசத்தை அழுந்தத் துடைத்துவிட்டு, பொது வான மனித இரக்கத்தைக் கூட மறந்துவிட்டு அவன் பேசினுன். மானம் மிக்க அவர் மனம் தண லிடைப் புழுவாகத் துடித்தது. காமு அங்கே துடித்தாள்.

''என்காதுபட இப்படி நாராச மாகப் பேசாதீர்கள்''

பளீரென்று அறை விழும் சத்தம் கேட்டது.

''ஈசுவரா'' தேசிகன் கண்களை மூடிக்கொண்டார். மனம் எரி மலையெனக் குமுறிற்று.

அன்ருெருநாள் - சங்கர் பள்ளி யில் படிக்கும்போது அவர் அனு மதியுடன் சினிமாவிற்குப் போயி ருந்தான். ஒன்பது மணிக்குள் வானம் இருட்டி மழை பெய்யக் குமுறி நின்றது. தேசிகன் பதை பதைப்புடன் குடையை எடுத்துக் கொண்டு பிள்ளையை அழைத்து வரத் தட்டுத் தடுமாறிக் கிளம்பி விட்டார். நான்கு எட்டு நடப்ப தற்குள் மழை கொட்டு கொட் டென்று கொட்ட ஆரம்பித்தது. நல்லவேளை, தெருத்திருப்பத்தில் சங்கர் எதிர்ப்பட்டான். அவரைக் கண்டதும் ஓடிப்போய் தாங்கிக் கொண்டான்.

''அடடா நனைந்துவிட்டியேடா குழந்தை'' என்று கவலையுடன் அங்கேயே துடைத்துவிட்டார். அவர் பாசத்தைக் கண்டு கண்ணீர் வடித்தான் அன்று. இன்ருே பாசத் தைத் துடைத்துவிட்டுக் கனலாக வார்த்தைகளை வீசுகிருன்!

---

**பாரதி என்றவன் பாட எழுந்ததும் ...!**

காவியம் என்பவை நீள்புவி கண்டது;
கால நெடுங்கன வின்
காரண காரியம் ஊடுரு வும்கவி
காசினி கொண்டது; பொன்
ஓவியம் என்று மொழிந்திடு மாறும்
உயர்ந்தன சொல் இணைகள்,
ஓசையி லேசுதி பேசிய பாடல்
உணர்வு சிறந்தமையால்!

★ முருகையன்.

உழைக்க மறந்த உடம்பா இது?

எத்தனை படி மாவை அரைத்திருக்கின்றன இந்தக் கைகள்? இந்தக் கைகளின் வலுவில்தானே அவன் வளர்ந்தான்.

நிம்மதியற்ற இரவு மெல்லக் கழிந்தது.

காலை ஐந்துமணி.

அந்தக் குளிரிலும் குளித்து விட்டு வந்தார். பூஜையை முடித்துக்கொண்டு எழும்போது பல பலவென்று விடிந்து விட்டது. தனது சாமான்களை மூட்டையாகக் கட்டித் தோளில் மாட்டிக் கொண்டதும் கட்டைகளை இடுக்கிக் கொண்டார். அவர் கண்கள் காமுவின் கலங்கிய முகத்தைப் பார்த்தன.

"அவர் இசைகேடா ஏதோ பேசினார்னு......"

"அசடே அப்படியில்லேம்மா. மனசு ஒத்துக்கலேன்னு பிரிஞ்சு இருக்கறதுதான் நல்லது. வாரேன்மா. தீர்க்க சுமங்கலிபவ" கிழவர் நடந்தார். எதிரே சங்கர் வந்தான். சற்று நின்று எங்கோ பார்த்தபடி "உன்னை சேஷன் அண் கம்பனி ராமசேஷன் தன்னை வந்து பார்க்கச் சொன்னார். பொறுப்பான வேலை காலியிருக்காம்." மேலே பேசவில்லை. அவன் பதிலையும் எதிர்பார்க்கவில்லை. சங்கர் திகைத்து நிற்கும் போதே வாசலைக் கடந்துவிட்டார். அங்கிருந்து பேச்சுக் குரல் கேட்டது.

"என்ன தேசிகன் காலங்கலையிலே......"

"ஒன்றுமில்லை. பெருமாள் கோயில்லே ஒத்தாசைக்கு ஆள் வேணும்னு கேள்விப்பட்டேன். எம்பெருமான் பாதத்திலே கிடந்து அவனுக்கு மடப்பள்ளி சேவை செய்யக் கொடுத்து வைத்திருக்கணுமே. சும்மாதானே இருக்கோம்னு கிளம்பிவிட்டேன்." பேச்சுக் குரலும், கட்டைகளின் ஒலியும் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்தன.

சங்கர் பிரமித்து நின்றான்.


உழைக்கப் புறப்பட்டுவிட்ட அந்த உடலைத் தடுத்து நிறுத்தும் சக்தி ஊனமடைந்த அவன் மனதிற்கு இல்லை★

**அழைப்பு!**

பாதகரின் பழிச்செயலாற்
பார்முழுதும் பாழடைந்து பிளவுபட்டுச்
சாதிமத நிறபேதஞ்
சல்லரித்துச் சமுகமெலாங் கூறுருய்
நீதிவழி தவறிமனு
நிலைகெட்டோர் நிந்தனைகள் செய்யுமிந்தச்
சூதுநிறை பூமியிலே
சுடரொளியைப் பாரதிநீ ஏற்றவாராய்!

★ அம்பி.

# நம்நாட் வோசகர்



**கவிஞர்**

**ச. வே. பஞ்சாட்சரம்**


ஈழ நாட்டில் வாசகர்கள் மலிய; பயனுக எழுத்தாளர்கள் பெருக, அதைத் தொடர்ந்து பத்திரிகைகள் பல வெளிவருகின்றன. எனினும், நிலைபெற்று வரும் இலக்கிய ஏடுகள் மிகச் சிலவே. அவற்றுள்ளும் இலங்கையில் தமிழ் இலக்கியம் வளர்ச்சியடையவும் அதனூடு தமிழ் வளமடையவும் தொண்டு செய்வதில் கலைச்செல்வி முதலிடம் வகிக்கிருள். ஏராளம் எழுத்தாளர்களை, கவிஞர்களை, வாசகர்களை, உருவாக்கித் தந்துள்ள கலைச்செல்வி, ஈழத் தமிழர்களின் பொருளாதாரம் வளம்பெற முயன்றுழைப்பதற்கு ஏற்ற செயல்வீரர்களை உருவாக்குவதிலும் தன் கவனத்தைத் திருப்பவேண்டும். காரணம் தமிழினத்தின் மிகப்பெரிய எதிர்காலப் பிரச்சினை பொருளாதாரந்தான்.

எனவே, பொருளாதாரம் பற்றிய கருத்தரங்குகளையும், விவாத மேடைகளையும் பத்திரிகையில் நடத்தி, தமிழர் பொருளாதார வளர்ச்சிக் கழகங்களை நாட்டின் பல பாகங்களிலும் அமைப்பதற்கும், அக்கழகங்கள் இளைஞர் சக்திகளின் ஒத்துழைப்பினை சிரமதானமூலம் பெற முயல்வதற் கேற்ற திட்டங்களை வகுப்பது போன்ற சிந்தனைகளில் ஈடுபடுவதற்கும் உதவுதல் வேண்டும். இன்று எழுத்தாளர்களினதும், வாசகர்களினதும், தமிழறிஞர்களினதும் இதயங்களில் மட்டும் வீற்றிருக்கும் கலைச்செல்வி ஈழத் தமிழர் அனைவர் நெஞ்சங்களிலும் நிறையவேண்டும் என்பதுஎனது வேணவா! ★

**பாரதி இதயம்!**

பாரதி இதயம் உலகென்பேன் - மணிப்
பாரதி இதயம் வாழ்வென்பேன்
பாரதி இதயம் எழுத்தென்பேன் - இனிப்
பாரதி இதயம் நானுவேன்.

★ மு. கனகராசன்.




[ சகோதரிகளே! — இவ்விதழ் முதல் உங்களுக்கென இந்தப் பகுதி ஆரம்பமாகிறது. இதில் செல்வி. இரா. சரசுவதி, மங்கை, கலாவதி ஆகியோர் பயனுள்ள சில விடயங்களை எழுதியுள்ளனர். இப்பகுதிக்கு நீங்களெல்லாருமே எழுதலாம். எழுதுவனவற்றை சுருக்கமாக சுவையாக புல்ஸ்காப்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதியனுப்புங்கள்.

—அக்கா ]

# புதுமைப் பெண்!

★

**இரா. சரசுவதி**

★

பெண்ணுலகிற்கு வாழ வழி காட்டி; ஒளியூட்டிப் புது வாழ்வை அளித்த பெரும் புலவர்களுள் முதன்மை பெற்றவர் புரட்சிக்கவி பாரதியாவர். பெண்மை வாழ வேண்டும்; வளரவேண்டும்; பொலிவு பெற வேண்டும் என்றெல்லாம் வீரமுழக்கம் செய்தார் அவர். அன்னவர் கண்ட புதுமைப் பெண்ணுள் புவி மீது கவிபாடி வந்தாள். அன்னவளிடம் பெண்மை குன்றவில்லை. சேற்றில் செந்தாமரை மலர்வதைப் போல, பற்பல சமுதாயச் சீர்கேடுகளுக்கிடையில்தான் பாரதியின் புதுமைப் பெண் மலர்ந்தாள். மங்கையவளிடம் காதல், வீரம், தமிழ்மணம், தமிழ்க் கலைகள் யாவும் மிளிர்ந்தன. நல்லறிவு நிரம்பிய நங்கையவள் நானிலம் சிறப்புற சேவை செய்தாள். ஆணுக்குப் பெண் எவ்விதத்திலும் இளைத்தவளல்ல, என்ற உரிமை வேட்கை அவள் உள்ளத்தில் எழுந்தது. வீட்டிற்குள் அடங்கி, ஒடுங்கிக் கிடப்பதைவிட்டு, வெளியுலகிற்கு விரைந்தாள். தன் கற்பையும் காத்தாள்; தரணிக்கும் சேவை செய்தாள். நிறைந்த ஞானச் செருக்குடன் அஞ்சாத ஒழுக்க நெறியும் கொண்டு உலகமெலாம் பவனிவரலாம் பெண்கள் என்ற பேருண்மையை,

"நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
நிமிர்ந்தஞானச்செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லை யாம்;
அமிழ்ந்து பேரிருளாமறியாமையில்
அவலமெய்திக் கவலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறமாகும் உதயகன்னி உரைப்பது கேட்டிரோ!"

என்று உரைத்திருப்பதை, 'ஆடம்பரச் செருக்கு' எனப் பொருள் கொண்டு தம்மைத்தாமே அழித்துக் கொள்கிருர்களே தமிழ்ப் பெண்கள்.

பெண்களே! இன்றைய பெண்ணுலகைச் சற்று ஏறிட்டுப் பாருங்கள். அங்கே என்ன காண்கிறீர்கள்? கற்பிழந்த கன்னியர் எத்தனைபேர்? விவாகரத்துக் கோரி வழக்கு மன்றத்தில் நிற்கும் நங்கையர் எத்தனை பேர்? காளையர்களால் காதலித்துக் கைவிடப்பட்ட காரிகையர் எத்தனை பேர்? இந்த இடத்தில்தான் பெண்களிடம் யான் ஒரு கேள்வியைக் காரசாரமாகக் கேட்கப் போகின்றேன்.

பாரதியார் பாடியதன் பொருள் பெண்மைமை மறந்து மனம்போன போக்கில் வாழுங்கள் என்பதுதானு? உங்கள் ஆடை அணிகளை 'அலங்(ே)கார' முறையில் அழகு படுத்துங்கள் என்றுரைத்திருக்கிருரா?

நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் நங்கையர்களிடம் இருக்க வேண்டுமென்பதற்காக, மயக்குவிழி நங்கையர்களாக வாழவேண்டும் என்பதல்ல. வீட்டிற்குள் அடங்கி வாழாது வெளியுலகிலும் பெண்களின் புகழ் பரவ வேண்டுமென்றதற்காகப் பகட்டான ஆடையணிகள் அணிந்து பண்பற்றவர்களாகத் திரியவேண்டும் என்பதும் அல்ல. பாரினில் பெண்கள் ஒழுக்கத்தையும், ஒழுங்கையும் கடைப்பிடித்து பார்போற்ற வாழ வேண்டும். அதுவே பெண்மையின் தாத்பரியம்.

பட்டங்கள் செய்வதும் சட்டங்கள் ஆள்வதுவுமே பெண்கள் அறம் என்பதுதான் நமதுகவிஞன் பாரதிகண்ட புதுமைப் பெண்ணின் சிறப்பு. ஆனல் யாம் இன்று காணும் புதுமைப் பெண்கள் இத்தகைய சிறப்புக்களுடன் சீரிய வாழ்க்கை நடத்துகிருர்களா? இந்தக்கேள்வி நம் மனதில் எழுந்து கொண்டே யிருக்கத்தான் வேண்டுமா? எங்கே... சிந்திப்போம்; செயல்படுவோம் சீராரும் தமிழணங்காய் வாழ்வோம் ★

---

# பெண்களும் உத்தியோகமும்!

★

**மங்கை**

★

பெண்கள் ஏன் உத்தியோகம் பார்க்கப் போகின்ருர்கள்? எப்படியான உத்தியோகங்களை அவர்கள் விரும்புகின்ருர்கள்? உத்தியோகம் பெண்களையோ, இல்வாழ்க்கையையோ பாதிக்கின்றதா? - இவற்றையெல்லாம் கணக்கிட்டு மதிப்பிட பிறிட்டனில் ஒரு ஆராய்ச்சி செய்யப்பட்டது. அதன் பலாபலன்களை நம்நாட்டு (உத்தியோகம் பார்க்கும்) பெண்களுடன் ஒப்புநோக்குவது சுவையானதாயிருக்கும்.

பிரிட்டனில் பெரும்பாலான குடும்பப் பெண்கள் பணம் சம்பாதிக்கவே தொழில் தேடுகின்றனர். ஆனல் அது தமது தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யவோ அல்லது தன் ஒருத்தியின் நவீன செலவுகளுக்காகவோ அல்ல. அந்தப் பெண்கள் தங்கள் குடும்பப் பொறுப்பைச் சுமக்கவென்றே வேலைபார்க்கின்றனர்.

வாழ்க்கை நிலையெனப் பார்க்கும் போது அது பலவிதப்படுகிறது. சிலரின் தேவை நவீன தளபாடங்களும், விநோதப் பொருட்களுமாகும். வேறுசிலரின் தேவை பல்சுவையான உணவு வகைகள். பலரின் ஆவல்மிக்க தேவை அடிக்கடி 'கடைத்தெரு'வுக்கு ஒரு சின்னக்காரிலேனும் ஓடித்திரியவேண்டும் என்பதே. நவீன உடைகளும் அத்தியா

வசியத் தேவையாயிருப்பினும் அதை அவர்கள் தம் முழுக்குடும்பத்தினர்க்குமே எதிர்பார்க்கின்றனர்.

பெரும்பாலான குடும்பங்களில் கணவன் உத்தியோகத்திற்கும் பிள்ளைகள் பள்ளிக்கும் போய்விடுவதால் தாய்மார் தாமும் உத்தியோகத்திற்குப் போக விரும்புகின்றனர்கள்.

ஒரு பெண்ணிடம் கேட்டபோது அவள் கூறினளாம் 'வேலைக்குப் போவது என்னை இளமையோடு வைத்திருக்கிறது' என்று.

அங்கே அடிக்கடி பெண் தொழிலாளிகள் 'அப்சென்ட்' ஆகிறார்கள். என்றாலும் கூட அவர்கள் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதில் கரிசனையாயிருக்கிறார்கள்.

மொத்தத்தில் மேல்நாட்டுப் பெண்கள் வாழ்க்கையிலிருந்து ஒதுங்கிவிட என்றுமே நினைப்பதில்லை. உத்தியோகமே குடும்பத்தேவைகளிலொன்றுதான். ★

# பெண்களும் தலைவலியும்!

★

**கலாவதி**

★

தலைவலி மிகப் பொல்லாதது. வந்துவிட்டால் அது ஆளையே படுக்கவைத்துவிடுகிறதே. தலைவலி வருவதானல் ஆரம்பத்தில் சோர்வாயிருக்கும். பார்வை மங்கும், தெளிவிராது. இதன்பின் 10, 15 நிமிடங்களில் வந்துவிடும் தலைவலி.

தலைவலி மிகுந்துவிட்டால் நரம்புகளில் ரத்தம் பீறிடுவதைப்போலிருக்கும், நரம்புகள் புடைத்து மண்டை வெடிக்குமோ என்றுகூற இருக்கும். இதனல் மூளைக்கு இரத்தம் சரிவர செலுத்தப்படாமல் வயிற்றைப் பாதித்து வாந்தியைக்கூட உண்டுபண்ணும்.

மலச்சிக்கல், கண்கோளாறு, பல் சொத்தை என்பனவே தலைவலி வருவதற்குரிய பொதுவான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. மூளையிற் கோளாறு இருந்தால் தலைவலி வருவதைத் தடுக்க முடியாது. கழுத்து, மூளை என்பனவற்றில் தேவைக்கதிகமான இரத்தம் மிதமிஞ்சிப் பாய்ந்தாலும் தலைவலி வருவதுண்டு. மஞ்சள் காமாலை முதலிய வியாதிகளுள்ளவர்களுக்கு வாந்தி வந்தால் தலைவலி மிகுந்துவிடுகிறது.

தலைக்கு மிகுதியாக இரத்தம் பாயாமல் பெண்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். எப்போதும் எதையும் கண்டபடி சாப்பிடக்கூடாது. தேனீர் அடிக்கடி அருந்துவதைத் தடுக்கவேண்டும். அடிக்கடி எதைப்பற்றியும் சிந்தித்தபடி இருப்பது தவிர்க்கப்பட வேண்டும். மனதில் உற்சாகமா யிருந்தால் இப்படியான நோய்கள் வராமற் தடுக்கலாம். பயம் ஏற்படக்கூடிய அல்லது துன்பம் தரவல்ல இடங்களில் வசிக்கக்கூடாது. வயிற்றில் அஜீரண குணம் ஏற்படுவதை உடனடியாகத் தடுக்கவேண்டும். வருடத்திற்கொரு முறையேனும் பேதிக்குக் குடிப்பது சாலச்சிறந்தது.

கண் மங்கல் கழுத்தில் கட்டி, பித்தம் என்பன இருந்தாலும் தலைவலி ஏற்படுவது நிச்சயம். எனவே, நமது உடற்கூறு பாதிக்கப்படாமல் சுகதேகியா யிருத்தலே நிவர்த்திக்கு வழி. ★

"பிள்ளை, உனக்கென்னடி பிடிச்சது? இப்ப பள்ளிக்குப்போக மாட்டேனெண்டு நீ சொல்லத் தொடங்கி எவ்வளவு நாளாச்சு...?"

அன்னம்மாள் பொறுக்க முடியாமல் கேட்டுவிட்டாள். பொன்மணி சிறினாள்

"ஏன், நான் போகாட்டிக் காசு வராதெண்டே அந்தரம்? நீ பயப்படாதை காசு கட்டாயம் வரும்" அன்னம்மா துடித்தாள்.

"எடி, உன்னைக் காசுக்காகவே நான் போகச் சொல்லுறன்? பேய் பிடிச்சவள் மாதிரி வீட்டுக்குள்ளையே கிடக்கிறாய் எண்டு சொல்லவந்தா..." தாய் மூச்சு வாங்கத் தொடர்ந்து சொன்னாள். "...... உன்னை நானே வாத்தி வேலைக்குப் போகச் சொன்னனான்? எப்பவோ கலியாணம் பேச, 'மாட்டன் படிப்பிக்கப் போறனெண்டு ஒற்றைக் காலிலை நிண்டாய்; இப்ப என்ன கதை கதைக்கிறாய்? ..... உனக்கு விருப்பமில்லாட்டி வேலையை விடு"

"கோவிக்காதை அம்மா; தெரியாமச் சொல்லிப் போட்டன். எனக்கு மனஞ் சரியில்லை. கொஞ்சநேரம் தனியா விடு."

"இதென்ன பிள்ளையோ...? ஒண்டும் விளங்கேல்லையே கடவுளே......" அன்னம்மா. முணுமுணுத்துக் கொண்டே போனாள்.

'சே, என்ன அருவருப்பான உலகம் எட! நன்றிதான் வேண்டாம், கொஞ்சங்கூட மனுசத்தன்மை? என்ன படிச்சென்ன, என்ன உடுத்தென்ன...? மனசு சரியில்லாட்டி, மனிசன் மனிசனில்லை.

'இப்ப நான் என்ன செய்கிறது? பள்ளிக்குப் போகவா, விடவா? ... பள்ளியாவது பாடமாவது! நான் நினைச்சதுக்கும் இப்ப நடக்கிறதுக்கும் எவ்வளவு வித்தியாசம்...?' பொன்மணி, வேதனையில் முகஞ் சுளித்தாள் '...... இந்த இலட்சியம் அது இது எல்லாம் கதைக்கத்தான்; சீவியத்துக்குச் சரிவராது நாங்கள் சரியா நடப்பமெண்டாலும் உலகம் விடாது. 'அம்மா சொன்னதில்லைதான் என்ன பிழை? நான் தானே படிப்பிக்கப் போறனெண்டு ஆசைப் பட்டேன்? ஆசிரியத் தொழில், உன்னதமான தொழில். வருங்காலச் சந்ததிகளை உருவாக்கும் பொறுப்பு மிக்க — நுணுக்கமான — தொழில். எத்தனை சின்னஞ் சிறிசுகள் 'ரீச்சர் ரீச்சர்' என்டு ஓடிவரும்?? இப்படி நினைச்சுத்தானே கலியாணப் பேச்சையும் உதறித் தள்ளினன்.

# பார்வை

**சாந்தன்**

அம்மா என்ர மனசை மாற்றப்பட்ட பாடு-?

'எப்படியோ, பதினெட்டு வயதிலே படிப்பிக்கத் தொடங்கி, இப்ப முப்பது வயதிலே பன்னிரண்டு வருச 'ஸேவிஸ்' ஆச்சு. எவ்வளவு சந்தோஷமான, நிம்மதியான காலமாய்ப் போச்சுது இந்தப் பன்னிரண்டு வருசமும்...?

'ஆனா முந்தநாள்-? இந்தப் பன்னிரண்டு வருசத்திய நிம்மதியையும் நிறைவையும் அந்தப் பன்னிரண்டு நிமிடத்துச் செயல் அடித்துச் சென்று விட்டதே?

'காற்று ஊதி, வெடித்த பலூன் போலக் கடைசியில் மிஞ்சுவதெல்லாம் வெறுமையேதானே? அண்டைக்கு நடந்தது......? சீ, என்ன உலகம்!' வேதனையில் இதழ்கள் கோண பொன்மணி கண்களை மூடிக் கொண்டாள்.

பொன்மணி பஸ்ஸை எதிர் பார்த்துக் கொண்டுநின்றாள். இந்த எட்டேகால் மணி பஸ்ஸிலே போனால் நேரஞ் சரியாயிருக்கும். ஒன்பது மணிக்குத்தானே பள்ளி தொடங்கும்?

சாலையின் திருப்பத்து மறைவில், எங்கெங்கெல்லாமோ யந்திர இரைச்சல் கேட்டதேயொழிய பஸ்ஸைக் காணவில்லை.

"என்ன பஸ் ஸேவிஸ் இது?

அவள் சலித்துக் கொள்ளும் போதே, தெருவின் வளைவில் பேரிரைச்சலுடன் சிவப்பு ராட்சஸன்போல பஸ் திரும்பியது.

'ஸீஸன் ரிக்கெற்றை எடுக்கவும், பஸ் வந்து முன்னால் நிற்கவும் சரியாகவிருந்தது. ரிக்கற்றை எடுத்து, வழக்கமான - பழக்கமான - 'கொண்டக்டர்' என்பது தெரிந்தும், அவருக்குத் தன்னைத் தெரியும் என்பதை அறிந்தும், காட்டிவிட்டு உள்ளே ஏறினாள். டிரைவருக்குப் பின்னால், மூன்றாவது சீற் ஜன்னலை ஒட்டினாற்போல - அதுதான் அவளுடைய இடம். இருக்கையில் அமர்ந்து, முகத்திற் துளித்திருந்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள்.

அடுத்த நிறுத்தத்தில் பஸ் நின்றது.

"ஏறுங்கோ, தம்பியவை" கொண்டக்டரின் குரல் உற்சாகமாகத் தொனித்ததிலிருந்து, ஏறப்போவது இளவட்டங்கள் என்பது புரிந்தது.

'வழக்கமாக இங்கே ஒருத்தரும் ஏறுவதில்லை. இண்டைக்கு, யார்?' நினைவு கிளம்பு முன்னரே விடை கிடைத்து விட்டது.

மூன்று வாலிபர்கள். 'லோங்ஸும் சேட்டும்' அமர்க்களப்பட்டன. பார்த்தாலே கல்லூரி மாணவர்கள் என்

**பாரதி!**

உள்ளமதிற் தூயவொளி யுதிக்குமாகில்
உண்டென்றுன் வாக்கினொளி உண்மையாகக்
கள்ளமிலா நல்வாழ்வு நமதே பேடிக்
கருத்துகளைப் பொசுக்கிநலம் காணல்வேண்டித்
தெள்ளமுதக் கவிபுனைந்து உணர்வையூட்டித்
திசையெங்கும் இசைபொங்கச் செய்துவைத்தான்
வள்ளலவன் கருத்துமணி வாரி வாரி
வழங்குதலிற் பாரியினை மழுங்கச் செய்தான்.

★ திமிலை மகாலிங்கம்.

பது புரிந்தது. ஒவ்வொருவர் கையிலும் இரண்டு மூன்று புத்தகங்கள் வேறு பஸ் ஒரு குலுக்கலுடன் புறப்பட்டது மூவரும் இடந்தேடித் தங்கள் கண்களை ஓட்டினூர்கள். ஆண்களிருக்கும் இடங்களிலேயே அவர்கள் பார்வைகள் பரந்தன.

தலையைத் திருப்ப முயன்ற பொன்மணி, சற்று வியப்புற்றவளாய் மீண்டும் ஒரு தரம் அந்த மூவரையும் பார்த்தாள்.

'அட, அது செல்வம்! மற்றது தனபாலனு? ...... இரண்டு பேருந்தான்! எவ்வளவு வளர்ந்து விட்டார்கள் இருவரும். இப்ப கல்லூரியிற் படிக்கிறூர்கள் போல இருக்கு. என்னிடம் படித்தவர்கள்தானே!' 'என்னிடம் படித்தவர்கள்' என்கிற நினைவில் அவள் மனம் புளகாங்கிதமடைந்தது. அவனிடம் படித்த சிலர் இன்று பல்கலைக் கழகத்திலும் இருக்கிறூர்கள்.

'... அந்த மூன்றுவது பையன்? அவன் யாரோ, புதியவன்'

அவர்களுடைய பார்வை அவள் முகத்திற் படிந்தது. பொன்மணி முறுவலித்தாள். ஒரு பாசம், இன்னவென்று இனங்காணமுடியாத ஒரு பாசம், மேவிநின்றது. அவர்கள். ஒரு விஞடி திடுக்கிட்டதுபோலத் தோன்றினுலும், மறுவிஞடியே சமாளித்துக்கொண்டு முறுவலித்தனர். சட்டென்று பொன்மணியின் உள்ளத்தில் ஏதோ நெருடினுற்போலிருந்தது.

அவர்கள் அவளைப் பார்த்தபார்வை அது ஒரு கணமே யானுலும் - அவளைத் துளைத்துவிட்டது. அந்தப் புன்னகைகூட பழைய விகல்பமற்ற புன்னகையாக அவளுக்குப் படவில்லை. அந்தப் புன்னகையூடே ஒரு களங்கம் - சந்திரனில் மறுபோல, இல்லை, பாலில் விஷம்போல - ஊடுருவியதை அவளுணர்ந்தாள். எல்லாமே வெறுமையாகிவிட்டாற்போல ஒரு உணர்வு அவளைச் சூழ்ந்துகொண்டது. 'ஏன் சிரித்தோம்' என்று தன்னையே அவள் நொந்து கொண்டாள்

'சே, இதெல்லாம் என்ன? அவர்களின் முகத்தில் வாலிபம் கோடிட்டிருக்கிற முதிர்ச்சியால், முகம் மாறுபட்டுச் சிரிப்புமே மாறியிருக்கலாம். அவர்கள், என் தம்பிகள் இல்லை, மக்கள்! பெருமக்கள்! எனக்குள்ள ஆயிரம் புதல்வர்களுள் இருவர்'. அவள் தனக்குத்தானே சமாதானம் கூறிக்கொண்டாள் சாதாரணமாக வெளியே பார்க்க ஆரம்பித்தாள். கண்களின் புறப்பார்வையில், அவர்கள் தனக்குப் பின்னே உட்காருவதாகத் தோன்றியது

நினைவோட்டங்களிடையே, தப்பித் தவறிக் காதில் விழுந்த பின் 'ஸீற்' சம்பாஷனை' அவளைத் திடுக்குறச் செய்தது. "ஆர் மச்சான் இது? சொந்தமே?" அந்த மூன்றுவது

---

**பாரதிபோற் பாடல் வேண்டும்!**

சாக்கடையைப் போக்கற்குத்
தாவிவரும் வெள்ளத்தின் காடே வேண்டும்
வேர்க்கடலை சிலவல்ல
மிஞ்சுணவே வெம்பசியைத் தீர்த்தல் வேண்டும்
காக்கைகளைக் கனிவல்ல
கல்லடிதான் ஓட்டிடுதல் வேண்டும் நம்முள்
தீக்குணங்கள் தீந்தழியத்
தீரமுடன் பாரதிபோற் பாடல் வேண்டும்.

★ ச. வே. பஞ்சாட்சரம்

- புதிய - பையன்தான் கேட்டிருக்க வேண்டும். இவர்களில் ஒருவன் - குரல் விளங்கவில்லை திருப்பிக் கேட்டான் 'ஏன் கேக்கிருய்?' குரலில் குறும்பு தொனித்தது. அவளுடைய 'மாணவர்'களுள் இரண்டாமவன் தொடர்ந்தான். '...... சொந்தமில்லையடாப்பா; முந்தி எங்களுக்குப் படிப்பிச்சவ'' ''ஓகோ......'' புதியவன் இழுத்தான். உற்சாகமும் வியப்புங் கலந்த குரலில் ''ரீச்சரா ..? ஏன்ரா, என்ன வயதிருக்கும்?'' அவன் கேட்டான் ''அதை ஏன் உனக்கு?'' இவர்களில் ஒருவன் கேட்டான் ''ஃபேஸ்கட் எப்படி மச்சான்?'' இது மற்றவன். அவர்களுடைய சம்பாஷணை தொடர்ந்தது. ஆனுல். இதற்குமேல் அவளுக்குக் கேட்கவில்லை. வானமே இடிந்து தலையில் விழுந்தாற்போலிருந்தது.

கோபமும் வேதனையுங் கலந்து அவளை அமுக்கின. 'சீ, நாய்கள் இவர்களெல்லாம் மாணவர்களா?' அந்த ஒரு கணத்திலேயே - அவர்கள் அவளை ஆராய முற்பட்டபோதே- அவர்களுக்கு எல்லாம் வெறுமையாகிவிட்டது. இந்த உலகம், அவளுடைய இலட்சியம் எல்லாமே பொய். இவ்வளவுநாள் வாழ்வும் போலிதானு? இப்படியான சொற்களைத் தன் மாணவர்களிடமிருந்தே கேட்கவா அவள் படிப்பிக்கிருள்?

அவளுக்கு முன் உலகமே சுழல்வது தெரிந்தது. எவ்வளவு நேரமாயிற்ரே?

''என்ன ரீச்சரம்மா, இறங்கேல்லையே? உங்கடை கடைசி 'ஹோல்ற்' வந்திட்டுது''. கொண்டக்டரின் குரல் அவளை உசிப்பிற்று.

'பள்ளிக்கூடத்தடிக்கு வந்தாச்சா? அங்கேபோய் என்ன செய்கிறது? பள்ளியும் பாடமும்' அவளுக்கு வெறுப்பா வேதனையா என்று என்று சொல்லமுடியாத ஒரு நிலை எல்லாவற்றிலுமே வெறுப்புத்தட்டியது

பஸ்ஸிலிருந்து இறங்கியவள், ''இந்த பஸ் திரும்ப எவ்வளவு நேரமெடுக்கும்?'' என்று கொண்டக்டரைக் கேட்டாள்.

''கா, மணித்தியாலம்; அம்மா''

'ஒரு லீவு லெற்றரைக் கொடுத்திட்டு வந்திடலாம்' பொன்மணி பள்ளியை நோக்கி நடந்தாள். மனம், உடல் இரண்டுமே களைத்துக் கனத்தன.

பள்ளிக்குள் நுழைந்து, லீவு லெற்றரை எழுதி முடித்துவிட்டுத் தலைமை ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தபோது அவர் அங்கே இல்லை என்பதைக் கண்டாள். 'என்ன செய்கிறது? யாரிடமாவது கொடுத்துவிட்டுப் போகலாமென நினைத்தாள். அவளுடைய இரண்டாம் வகுப்பு மாணவன், 'விக்கி' தூரத்தில் போய்க்கொண்டிருந்தான். நல்லபிள்ளை. 'விக்கி... இங்கை வாரும்'' அவன் ஓடிவந்தான். மகிழ்வு தொனிக்க. ''குட் மோணிங் ரீச்சர்' என்ருன். ''குட் மோணிங் விக்கி நீர் எனக்கு ஒரு உதவி செய்யவேணும். உம்மட்டை நான் ஒரு காயிதம் தாறன், அதைப் பக்குவமா. முதல் வாத்தியாரிட்டைக் கொடுக்கவேணும்.

**தமிழ்க்கனல்!**

பாவாற் புதிய உலகைப் படைக்கவும் பாரதிலே
சாவா விளமைச் சுகங்கள் பலகோடி சந்திக்கவும்
தேவாதி தேவருந் தேடிவந்தே தமிழ் தேர்ந்திடவும்
மூவாத் தமிழ்க் கனல் மூட்டிடுவான் கவி பாரதியே!

★ நாவேந்தன்.

என்ன?'' ரீச்சருக்கு உதவி - அல்லது பணி - செய்கிறேமென்ற பெருமிதத்தில் ''ஓ ஓ... கவனமாக் குடுக்கிறன் ரீச்சர்'' என்றான்.

''நல்லபிள்ளை தாங்கியூ'' என்றவளை அவன்கேட்டான், ''ஏன் ரீச்சர் நீங்க இண்டைக்கு வரமாட்டியளே?''

''ஊஹூம்; எனக்குச் சுகமில்லை. போட்டுவாறன்'' பொன்மணி வெளியே வந்தாள்.

'இந்த விக்கியைப் போலத்தானே செல்வமும் தனபாலனும் இருந்தார்கள்? இன்று......? விக்கியும் இன்னும் கொஞ்ச நாளிலை இப்படித்தான் வருவானே?' - நினைக்கவே நெஞ்சு துடித்தது.

'ஏதோ இரண்டு பேரை, வைத்து எல்லாரையும் கணக்குப் போடக் கூடாது' என்று ஒரு கணம் நினைத்தாள்.

திரும்பிவந்த ரீச்சரம்மாவை அதிசயத்துடன் பார்த்தபடி, ரிக்கற் கொடுத்தார் கொண்டக்டர். வழக்கமான 'சீற்'றில் உட்கார இப்போது பிடிக்கவில்லை. வேறொரு இடத்தில் சென்று அமர்ந்தாள்.

அவளுடன் இப்படி யாராவது 'சேட்டை' விட்டது இதுதான் முதல் தடவையல்ல. ஆனால், அவளுடைய மாணவர்களே 'சேட்டை' விட்டதைத்தான் அவளாற் பொறுத்துக் கொள்ள முடியவில்லை

வழக்கமில்லாத வழக்கமாகப்போன கையுடனே திரும்பிவிட்ட மகளைப் பயத்துடன் வரவேற்றாள் அன்னம்மாள். ''என்ன பிள்ளை? ஏதன் சுகமில்லையே? ஏன் உடனே வந்திட்டாய்?'' தாய் பதை பதைத்தாள்.

''ஓம், அம்மா சரியான தலையிடி'' அவள் படுத்துக்கொண்டாள்.

''மழை வரும்போலக்கிடக்கு குடையைக்கொண்டு போவமே?'' அன்னம்மாள் பயந்துகொண்டே மகளைக் கேட்டாள். ஒருதரம் வைரவர் கோயில் ஐயரிடம் 'பார்வை பார்ப்பிக்க' மகளைச் சம்மதிக்கச் செய்வதே, பெரும் பாடாக இருந்தது அவளுக்கு

'பேசாம வாம்மா.'' - இருவரும் புறப்பட்டார்கள்.

வைரவர் கோவில் 'முக்கால் கட்டை' தூரத்திலிருந்தது. அம்மன் கொவிலையும், அதை யடுத்திருக்கிற பெரிய வயல் வெளியையும் தாண்டிக் கொண்டுதான் போகவேண்டும். வயல் வெளியின் முடிவிலிருந்த 'குச்சொழுங்கை' பத்துப் பன்னிரண்டு வீடுகளை ஊடறுத்துக்கொண்டு வைரவர் கோயிலடியை அடைகிறது.

தாயும் மகளும் அம்மன் கோயிலடிக்கு வந்துவிட்டார்கள். இருந்தாற்போல, வானமே பிளக்கிற மாதிரி இடி முழங்கியது. 'எட்டிவா பிள்ளை. மழை வந்தா நிக்கக்கூட இடமில்லை''

அம்மன் கோயிலைத்தாண்டி, வயலுக்குள்ளும் இறங்கியாயிற்று. 'கிடைச்சிக்கட்டை' குத்துகிற வயலில் நடப்பதே பெரும் பாடாயிருந்தது. இருந்தாற்போல, 'ஓ ஓ' வென்ற பேரொலியுடன் மழை பிடித்துக்

**பாவின் மன்னன்!**

**பாரத நாட்டின் மேன்மைப் பண்புகள் சிறக்க, வீரர்**
**வீரநல் உணர்ச்சி ஊட்டி விடுதலைக் கொடியை நாட்டி**
**சீரமை தமிழின் செம்மை திசையெலாம் தெரிய வைத்த**
**பாரதி பாவின் மன்னன் பாரிலே தனித்த முன்னேன்!**

**★ இ. நாகராஜன்.**

கொண்டது. முந்தானையால் தலையை மூடிக்கொண்டே, "அந்தா ஒரு வீடிருக்கு. ஓடிவா" என்றுள் தாய். பெருந்துமியாய் விழுந்த மழையில் உடம்பு தெப்பமாய் நனைந்து விட்டது. எங்கும்ஒரே புழுதி மணம். இருவரும் ஓடினுர்கள்.

வயலைப் பார்த்தவாறு, வேலியில்லாமற் கட்டப்பட்டிருந்த மண்வீடு. அது தாழ்வாரத்தில் இருவரும் ஒதுங்கிக் கொண்டார்கள். சாரல் அடித்தது. தன் சேலையைப் பிழிந்து. மகளின் தலையைத் துவட்டினுள் தாய்.

"நல்லா நனைஞ்சுபோனுய்... குடையையாவது கொண்டுவந்திருக்கலாம்."

"சங்கடம் பிடிச்ச மழை, எப்ப விடுமோ?"

பேச்சரவம் கேட்டோ என்னவோ, வீட்டுக்ககவு திறந்தது. பதினெட்டு வயது மதிக்கக் கூடிய ஒருபெண் எட்டிப் பார்த்தாள். பொன்மணி திருமபினுள்.

'அட, அது மகேசுவரி!'

பொன்மணி அவளை அடையாளங் கண்டு கொண்டாள். இந்த மகேசுவரியும் அவள் மாணவிதான். இது அவள் வீடா? மகேசுவரியும் ரீச்சரைக் கண்டுகொண்டாள் பதை பதைத்து, 'எட, ரீச்சரே? உள்ளுக்கு வாங்கோ ரீச்சர். நல்லா நனைஞ்சு போனியள். ஐயோ"

"வேண்டாம் மகேஸ்; மழை விடப் போகுது."

"மழை இப்போதைக்கு விடாது ரீச்சர். நீங்கள் நல்லா நனைஞ்சுபோனியள். உள்ளுக்கு வாங்கோ; ஒருத்தருமில்லை." பொன்மணி, கூச்சத்துடன், தாய் பின்தொடர உள்ளே நுழைந்தாள்.

மகேசுவரி ஒரு வெளுத்த துண்டுடன் வந்தாள்.

"ஈரம் துடையுங்கோ ரீச்சர்"

பொன்மணி துண்டை வர்ங்கிக் கொண்டாள்.

'இந்த மகேசுவரி ஆக இரண்டு வருசம் என்னட்டைப் படிச்சவள். இப்பவும் எவ்வளவு அன்பு, பயபக்தி? பெண் பிள்ளையள் இப்படித்தான். இவளின்ர தமையன் தங்கராசாவும் என்னட்டைப் படிச்சவன்தானே. அண்ணனும் தங்கையும் ஒரே வகுப்பு. .. மகேஸ் இப்ப என்னமாதிரிவளர்ந்திட்டாள்!

தங்கராசாவுக்கும் இருபது வயதிருக்கும்......'

பொன்மணி திடுக்கிட்டாள் - 'இருபது வயது'

'அவனும் செல்வத்தைப் போல, தனபாலைப் போலத்தான் இருப்பானே? இந்த வீட்டுக்குள்ள வந்ததே பிழை.'

மகேசுவரி இரண்டு கதிரைகளுடன் வந்தாள்.

"இருங்கோ......" என்றவள்,

"கொஞ்சம் பொறுங்கோ ரீச்சர் வாறன்" என்று உள்ளே ஓடி மறைந்தாள். வெளியே மழை சாடிக்கொண்டிருந்தது.

ஐந்து நிமிடங்களாயின. மகேசுவரி கையில் இரண்டு 'மூக்குப்பேணி'களு

**வாழ்த்துகிறேம்!**

பெண்ணடிமை தீரவும் பேசும் திருநாட்டின்
மண்ணடிமை தீரவும் மாகவிதை செய்து, புகழ்
பொன்னடியை பொலிவுறவே செய்துவிட்ட புலவாஉன்
நன்னடியை வாழ்த்துகிறேம் நற்கவியாம் பாரதியே

★ ஏ. பி. வி. கோமஸ்.

டன், வாட்டசாட்டமான ஒரு இளைஞன் பின்தொடர உள்ளே வந்தாள்.

"தேத்தண்ணி குடியுங்கோ ரீச்சர்' பேணிகளைக் கையிற் கொடுத்தாள்.

"ரீச்சர், இவர்தான் அண்ணை. உங்களிட்டைப் படிச்சவர்தானே. முந்தி எத்தினை குட்டு வாங்கியிருப்பார்? இப்பபெரிய ஆம்பிளை" மகேசுவரி கல கலத்தாள். ரீச்சர் வீடுதேடி வந்துவிட்ட மகிழ்ச்சி அவளுக்கு. வெளியே சிரித்த முகத்துடனிருந்தாலும், உள்ளுக்குள் பதறிக்கொண்டிருந்தாள் பொன்மணி.

"வணக்கம் ரீச்சர்... .." தங்கராசா கை கூப்பினான்,

"......இந்த மழை நல்ல மழை. ஏனெண்டா, உங்களை எங்க வீட்டை கூட்டிக்கொண்ணந்திட்டுது, பாத்தியளே" அவன், குரலில் மகிழ்வு மேவக் கூறினான். அதே பழைய அன்பு, விநயம், பக்தி, எல்லாம் அவன் குரலில் இழையோடின. 'தங்கராசா மாறவேயில்லையா?' பொன்மணி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ தெய்வ சந்நிதானத்தில் நிற்பவன் போலத் துண்டை இடுப்பிற்கட்டிக் கொண்டு, கைகளை மார்பிற் கட்டிக் கொண்டு, அவன் நின்றிருந்தான். தன்னையறியாமலேயே, "இப்ப என்ன செய்யிறீர் தங்கராசா?" என்று கேட்டாள் பொன்மணி.

"கமந்தான் ரீச்சர். ஒழிஞ்சவேளையிலை சுருட்டுக்குப்போறது". அன்று விக்கியிடம் கடிதத்தைக் கொடுத்த போது மகிழ்ந்தாளே, அதே மகிழ்வு, அதே பக்தி, இப்போது இந்தத் தங்கராசாவின் பார்வையில் ஒளி விடக்கண்டாள் பொன்மணி.

'தங்கராசா மாறவேயில்லையா? இரண்டாம் வகுப்பிலை என்னட்டைப் படிச்ச அதே மாதிரித்தானிருக்கிறான். அதே குழந்தைத்தனம்...' பொன்மணி, இந்தக் கணத்தில் செல்வத்தை, தனபாலை, மறந்தாள் உள்ளத்தில் என்ன வென்று இனம் பிரித்தறிய முடியாத ஒரு நிம்மதி.

"அம்மாவும் ஐயாவும் ஒரு கலியாண வீட்டை போட்டினம். அம்மா உங்களைக்கண்டாச் சந்தோஷப்படுவா ரீச்சர்.." பெண்மணிக்கு ஒன்றுமே காதில் ஏறவில்லை. மகேசுவரி ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாள்.

தேநீரைக் குடித்து விட்டுக் குவளையைக் கீழே வைத்தாள் பெண்மணி. வெளியே மழை விட்டிருந்தது.

"அம்மா, போவோமே"? பென்மணி கேட்டாள்.

"ஓஓ... நேரமாச்சு..." தாயும் எழுந்தாள்.

"என்ன அவசரப்படுறியள் ரீச்சர்? இன்னுங் கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போகலாம்" அண்ணனுந்தங்கையும் ஒருமித்த குரலிற் கூறினார்கள்.

"இல்லைமகேஸ்; இருட்டுது இனிக் கோயிலுக்கும் போகவேணும். பொன்மணியும் எழுந்தாள்.

"பொறுங்க ரீச்சர்" தங்கராசா சிறுவன் போல உள்ளே ஓடினான். திரும்பி வந்தபோது கையில் ஒரு குடை. "இதைக் கொண்டு போங்கோ ரீச்சர். மழை வந்தாலும் வரும். நான்

## தன்னிகரில் பாரதி!

தமிழை அமிழ்தாக்கி தக்க நடையினிலே
தமிழை தமிழரெலாம் தகவே அறிகவென
தமிழில் கவிசெய்த தன்னிகரில் பாரதிபேர்
தமிழர் உளமட்டும் தாரணியில் நின்றுலவும்.

★ சர்வானந்தன்.

பிறகு வாங்கிறன்''. மறுக்க முடியா மல் வாங்கிக்கொண்டாள் பொன்மணி.

''போட்டு வாறம்''

தாயும் மகளும் நடந்தார்கள்

கோவிலுக்குப் போனது. பார்வை பார்த்தது, வீட்டுக்கு வந்தது ஒன்று மே பொன்மணிக்கு நினைவில்லை

'தங்கராசா இன்னும் பழைய தங் கராசாதான். என்னுடையமாணவன் தான், அவன் இன்னும் மாறவே யில்லை. இந்த ஒரு தங்கராசாவின் அன்பு. பக்தி, இப்படியே இருக்கு மானுல், செல்வமென்ன, தனபா லென்ன, எத்தனைபேர் எத்தனை கூத் தும் ஆடட்டும் எனக்கு இதுபோ தும். செல்வம்-தனபாலைப் போலப் பத்துப்பேர் இருந்தால், தங்கராசா வைப் போல ஒருவனுவது இருந்தா லே போதும். அதுதான் நிறைவு, நிம்மதி, திருப்தி எல்லாம்.

அவள் மகிழ்ச்சிப் பெருமூச்செறிந் தாள்.

அவள் தோற்கவில்லை. அவள் இலட் சியம் தோற்கவில்லை. தங்கராசா மா திரி மாணவர்கள் உள்ளவரை இந்த இலட்சியம் தோற்கப் போவதுமில்லை. அவனைப் போல எத்தனையோபேரை உண்டாக்க அவளால் முடியும். அவள் இனிப் படிப்பிக்கத்தான் போகிருள். ராஜிநாமாக் கடிதம் கொடுக்கப் போவதில்லை.

அன்றிரவு படுக்கப் போகும் போது,' 'அம்மா, நாளைக்குப் பள்ளிக் குப் போகவேணும், வேளைக்கு எழுப் பிவிடு'' என்று சொன்ன மகளை வியப் புடன் பார்த்தாள் தாய்

'இன்று மத்தியானம் வரை, பள் ளியே வேண்டாமென்ற பொன்மணி யா இவள்?' - அன்னம்மாள் அதிச யித்தாள். ''வைரவர் கோயில் ஐய ருடைய 'பார்வை நல்ல 'சுட்டிப்பு'த் தான்'' என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள் ★


## தமிழ்க் கவிஞர்களுக்கு....

**அன்பர்களே,**

பாரதியும் அவருக்குப் பிறகு வந்தோரும் தந்த தமிழ்க் கவிதைகளை ஆராய்ந்து ''புதிய தமிழ்க் கவிதை'' என்னும் நூல் ஒன்றை நான் (தமிழ்ப் புத்தகாலயம் மூலம்) வெளியிட்டிருப்பதை அறிந் திருப்பீர்கள். இத்துறையில் நான் மேலும் ஆய்வு நிகழ்த்த விரும்புவதால், உங்களுடைய் அல்லது உங்களுக்குத் தெரிந்த பிறருடைய கவிதை நூல் ஏதேனும் வெளிவரும்போது நூலின் பெயர், ஆசிரியர் பெயர், அதன் விலை, கிடைக்குமிடம் ஆகிய விபரங்களை ஓர் அஞ்சல் அட்டை மூலம் கீழ்க்கண்ட முகவரிக்குத் தெரிவித்து உதவுமாறு வேண்டுகின் றேன். யாரும் பிரதிகளை அன்பளிப்பாக அனுப்ப வேண்டாம் என்று மிக்க அன்புடன் கேட்டுக் கொள் ளுகிறேன்:

சாலைஇளந்திரையன் 3362/1, கிறிஸ்பதியன்காலனி. **தில்லி-5.(இந்தியா)**

நாவல்

# கர்ப்பக் கிருகம்



"செம்பியன் செல்வன்"

6

இரவெனும் தொட்டிலில் உலகம் துயிலெனும் இறப்பில் 'தன்' னின் 'தான'ழிந்து, தன்வயமழிந்த குலப்பெண் கணவனின் கைகளில் துவள்வதுபோல மூழ்கிக் கிடக்க, அமைதியின் சாந்தம் கலைந்த மோன நிலை எங்கும் கவிந்து விளங்குகின்றது. பனிதகுலம் விழிப்புற்றதும் இந்த அமைதியான அழகு சித்திர வதைப்படும் கொடுமையைப் பொறுக்க முடியாமல்தான் இயற்கை உயிர்க்குலத்தைத் துயிலெனும் சமாதியில சிறுபொழுதாவது ஆழ்த்திவிடுகின்றதா?... அல்லது உலகத்திற்குச் சமரசபோத விளக்கம் கற்பிக்கின்றதா?

அமைதியான அழகின் தடத்திலே இருவரும் நடத்துகொண்டிருக்கின்றனர். சிவராசாவின் மெய்யெலாம் இளமையின் பூரிப்பின் மதர்ப்பே எழுந்து, உள்ள நிறைவை ஏற்படுத்துகிறது.

7

பூவிரியும்...

கமலம் விரைவாக நடக்கின்றாள். அவள் மனதிலோ உலகம்பற்றிய சிந்தனை எதுவுமே இல்லை. பத்மனே உலகாகவிருந்து அவள் நெஞ்சக் கண்ணில் மின்னுகிறான். அந்த விசுவரூபம் அளிக்கும் துடிப்பில், அவள் கால்கள், வழியின் குண்டும் குழியும், தலைதூக்கிநிற்கும் கற்களின் இடறலையும் பொருட்படுத்தாமல் விரைந்துகொண்டிருக்கின்றன. அவள் நடையில் பதட்டமும் பரபரப்புமே விஞ்சுகின்றது.

கோடைஇரவின் வெம்மை நிரம்பிய காற்று உடலில் மெல்லியகுளிரை இறைக்க, மேனி சிலிர்க்கிறது.

கமலம் வந்து அழைக்கவும், கனவுலகில் ஒரு தேவதையின் பின்னே நடப்பதுபோல, மௌனியாகச் சென்றுகொண்டிருந்த சிவராசா தன் உதடுகளை மெல்ல நாவால் நனைத்துக் கொள்கிறான்.

''பத்மனுக்கு ஏதும் கடுமையே!... ஏன் இந்த இரவில இப்படி...!''

''இராத்திரிப் படுத்திருந்தவன்... நடுச்சாமம்போலத் திடீரெண்டு பிதற்றத் தொடங்கியிட்டான்... முழிச்சுப் பார்த்தா...உடம்பு நல்லா நடுங்கிக் கொண்டிருக்கு......வாணி பயத்தால் அப்படியே கத்திவிட்டா......நான் என்னசெய்ய முடியும் தம்பி...ஆண் துணையில்லாத பெண்புரசுகள்...பக்கத்தில இருக்கிற சின்னம்மா தான் கொஞ்சம் உதவி...அதுவுமல்லாட்டி... இந்த ஊரிலேயே...ஏன், உலகத்திலேயே எங்களால் வாழமுடியாது... ஏழையளின்ர துன்பம் இன்னொரு ஏழைக்குத்தான் தம்பி இந்தக் காலத்தில் புரியுது...இப்ப சின்னம்மா தான் ஏதோ குடிநீர் அடுப்பிலை வைச்சு எரிக்கிறா. அதுதான் தம்பியை ஆசுபத்திரிக்குக் கொண்டு போறதுதான் நல்லது எண்டது... இந்தச் சாமத்தில ஒரு பொம்பிளை எப்படித்தம்பி ஒரு சுகமில்லாத பொடியனை ஆசுபத்திரிக்குக் கொண்டுபோக முடியும்...சிங்காரம்...மற்ற ஆம்பிளையெல்லாம் எழுந்துகூடப் பாக்கமாட்டம் எண்டிட்டினம்...அவையளுக்கு ஏனோ எங்களில் ஆத்திரம்...நாங்க அவையளுக்கு ஒரு பாவமும் செய்யேல்ல தம்பி...கடைசியா சின்னம்மாதான் உங்களைக் கூட்டியரச் சொன்னவ...பாவம்...உங்கட நித்திரையைக்கூட குழப்பிப்போட்டம்...'' அவள் நடையின் வேகத்தில் ஏதேதோ சொல்லிக்கொண்டு போகிறாள்.

அவனுக்கு கூச்சமாக இருக்கிறது. ''நீங்க என்ன இதெல்லாம் சொல்லிக்கொண்டு...உலகத்தில ஆளுக்காள் செய்யிற உதவியைத்தான நானும் செய்தனான்...இதைப் பெரிசாக்கிக்கொண்டு...''

''அதில்லைத் தம்பி!...காலமையும் எங்களால் உங்களுக்கு வீண் அலைச்சல்...அதுவும் பத்தாதெண்டு இப்ப... இந்த நடுராத்திரியும் உங்களை வீணா அலைக்கழிக்கிறதை நினைச்சால் தான்...!''—அவள் நன்றிப் பெருக்கில் உணர்ச்சிமயமாகக் கூறுகின்றாள்.

''உப்பிடிச் சொல்லாதீங்க...நான் செய்தது பெரிதல்ல... இப்படி உதவி செய்ய எல்லாருக்கும் கொடுத்துவைச்சிருக்கேலா...ஆனா...நீங்க இப்படிச் சொல்லுறதான் மிகுந்த மனக் கஷ்டமா இருக்குது...''அவனும் ஏதோவொரு உணர்ச்சிலயத்தில் ஆழ்ந்து போய்ப் பேசுகிறான்.

''உண்மைதான் தம்பி!... உலகத்தில் எத்தனையோ பேர்...ஆனாச் சிலரிட்டத்தான் மனம் ஒன்டுபடுது... அவர்களிட்ட உதவிபெறவும் தயங்கிறதில்லை...அவர்களை வேற ஆட்களாகக்கூட எண்ண முடியிறேல்ல... தம்பி...என்னமோ உங்களை நினைச்சா...தேத்தையிலிருந்து எனக்கு என்ர பத்மனைப்போல ஒரு மகனாகத் தான் நினைக்க முடியுது...அதால தான் உங்களிட்ட இப்படி வந்து உதவி கேட்கிறேன்... ஒருத்தரிட்டப் போய் உதவி கேட்கிறதை ஒரு தலைக் குனிவா எண்ணுறவள் நான். அப்படிப் பட்ட நான்தான், உங்களிட்ட...''— என்று கூறியவாறு அவனைப் பரிவுடன் திரும்பிப் பார்க்கிறாள்.

**பாரதி பேர் வாழ்க!**

சொல்லினில் எளிமை, சொல்லும் பொருளினிற் புதுமை நெஞ்சை
அள்ளிடும் இனிமை, தூங்கும் அடிமையும் தோளுயர்த்தி
துள்ளுவோர் பள்ளு, நாட்டிற்றுயர்தரும் சாதிபேதம்
எள்ளியோர் பாவாற் சாடும் எமது பாரதிபேர் வாழ்க!

★ தில்லைச்சிவன்.

அந்தப் பார்வையின் கனிவு, மரியாதை, நன்றி எல்லாம் அவனைச் சிலிர்க்க வைக்கின்றன. அவளது பண்பே உருவான உரையாடலும், அவற்றில் பொதிந்துள்ள தாய்மை உணர்வும், குடும்பப் பொறுப் புணர்ந்தநிலையின் அமைதியும், அந் நிலையிலும் விட்டுக்கொடாத தன் மானப் பண்பும்... இதோ... இதோ... பன்னிரண்டு வருடங்கட்கு ஒருமுறை பூக்கும் குறிஞ்சிப் பூவான தமிழ்ப் பெண்... அல்ல அல்ல கற்பாந்த கோடி வருடங்கட்கு ஒரு முறை தோன்றும் ஒரு தெய்வமலர்... தமிழப் பெண்தெய்வம்...' என்ற எண்ணக் குதிப்பை நெஞ்சத்திலே ஏற்றுகின்றன.

'உங்களை என் மகன்போல...!'— அந்தத் தூய்மையான தாய்மை நிரம்பிய அத்தெய்வத்தின் காலடியில் தன்னையே அர்ப்பணித்துவிட வேண்டும்' என்ற வெறியிலே நெஞ்சமே நீராடுகிறது.

''அம்மா!...'' வார்த்தைகள் உதடு வரைவந்துவிட்டன. வார்த்தைகளைப் பெரும்பாடுபட்டு அடக்கிக் கொள்கிறான்.

வீட்டினுள்ளே இருவரும் வேகமாக நுழைகிறார்கள். உள்ளே கண்ட காட்சி அவனைத் திடுக்கிடவைக்கின்றது.

ஒரு சின்னஞ் சிறுமலரை ஒநசண்டாளனின் கைகள் எப்படிக் கசக்கி விட்டன?

தலைமாட்டில் ஒரு மண்ணெய் விளக்கு எரிந்து இருளில் மினுக்கம் காட்டுகின்றது. அதன் ஒளியைவிட, அதினின்று எழும் புகையே அங்கு அதிகமாக எழுகின்றது. பத்மனின் தலைமாட்டில் காலைமடித்து உட்கார்ந்தபடி பத்மனின் நெற்றியைத் தடவிக் கொடுத்தவண்ணம் வாணி சோகமாக விளங்குகிறாள். அருகே 'குளறி சின்னம்மா, ஒரு சிரட்டையில் குடிநீரை வார்த்துக்கொண்டிருக்கிறாள்.

''இந்தா பிள்ளை...இந்தக் குடிநீரைப் பத்மனுக்குப் பருக்கிவிடு!... அது கொஞ்சம் உள்ளபோனு உடலுக்கு கொஞ்சம் ஆத்தியா இருக்கும்''.

வாணி குடிநீரைவாங்கி, பத்மனின் தலையை மெல்ல உயர்த்தித் தன் மார்புடன் அணைத்து அவன் உதட்டிலே வைத்துக் குடிநீரை மெல்லப் பருக்குகின்றாள். அவன் இருசொட்டுக்களை உட்கொண்டதும், வாய் கசப்பில் சுளிக்கின்றது.

''கொஞ்சம்...கொஞ்சம்...இன்னும் கொஞ்சம் குடியடா கண்ணு!''— என்றவாறு ஆதுரத்துடன் மேலும் வாணி பருக்க, அருவருப்பு மேலிட்ட பத்மன் ஓங்காள சப்தத்துடன் பெரிதாக வாந்தி எடுக்கவே வாணியின் புடைவை எங்கும் அழுக்காகி... ஈரப்புடைவை ஒளியில் மின்னுகிறது'

ஒருகணம் அவன் முகம்கூட அருவருப்பில் சுளிக்கிறது. அவன் வாணியைப் பார்க்கிறான். அவள் முகத்தில் எவ்வித சலனமுமில்லை. பதிலாக அவன் குடிநீரை வாந்தி எடுத்துவிட்டானே என்ற துயரமே காணப்படுகிறது. மெதுவாகப் பத்மனை மீண்டும் படுக்கையில் கிடத்திவிடு

## பாரதி பதங்கள் தாழ்வோம்!

உரந்தனை நீங்கிவீரம் ஒடுங்கியே சிறப்பு மின்றுய்
கரந்தனர் போலவாழ்ந்த தமிழரின் நிலைமை நோக்கி
சிரந்தனைச் சிலிர்த்து நின்று சிறப்பொடு கல்வி ஆண்மை
பரந்தெழப் பாடல்செய்த பாரதி பதங்கள் தாழ்வோம்.

★ வ. குகசர்மா.

கின்றுள். அதன்பின்பே அவள் தன் ஆடையைச் சுத்தம்செய்ய முனைகின் றுள்.

சிவராசாவுக்கு அவளின் நிதானம் குலையாத அமைதியான செயல்கள் வியப்பாக இருக்கின்றன. மலையே நிலைகுலைந்த நிலையிலும் சலனம் காணமுடியா ஆழ்கடற் பண்பு...... யாழ்மண்ணில் உற்பவித்த இந்த யுகப் பெண்ணுக்கா?...

அறுபது வருடங்களை விழுங்கி விட்ட பெரியவர்களுக்குமில்லாத பொறுமை ..அடக்கம்...பணிவு ...... இவை அனைத்தும் கூடிநிற்கும் எளிமையான பேரழகு!...

தங்கள் இருப்பிடத்தைவிட்டு வழி தவறி வந்த தெய்வ அணங்கு களா?...அல்லது பெண் என்று முன் னோர்கள் இவர்களைத்தான் கூறி யிருக்கிறார்களா?...

"தம்பி!...என்ன யோசனை...பத்து மணிக் கொண்டுபோறதெண்டா ஒரு கார் வேண்டாமே! இந்த நடுராத் திரியிலே எவன் காரைக்கொண்டு வருவான். உமக்காரும் தெரிஞ்சகார்க் காரனிருக்கிறனே தம்பி!..."—என்ற சின்னம்மாவின் குரல் அவனை இவ் வுலகுக்கு இழுக்கிறது.

அவன் ஒருகணம் யோசனையிலாழ் கிறுன்.

சின்னம்மாவின் குரல் கேட்கிறது. "என்ன கமலம். நீ என்ன மினைக் கெடுரு...போக ஆயத்தம் செய்யே லியே...கெதியாச் சுருக்கண வெளிக் கிடு..."

"ஓமக்கா!...அதுதான் வெளிக்கிட் டுக்கொண்டிருக்கிறன்...புள்ள அந்தச் சீலையை எங்கினைக்க போட்டனீ!..." என்று அறையிலிருந்து கமலம் கேட்கிறுள்.

"அந்தக் கொடி மூலையில் பாரு ங்க...அங்கதான் போட்டனுன்!... நான் வந்து எடுத்துத் தரவே..."

"ஓம்! ஓம்!...இங்கே கிடக்கு... நான் எடுத்திட்டன்...நீ புள்ளயப் பார்...தம்பி...காருக்குப் போயிட் டுதோ!" என்று கமலம் கேட்க, வாணி நிமிர்ந்து அவனைப் பார்க்க, அவன் தலைநிமிரப் பார்வைகள் வெட் டித் தெறிக்கின்றன. அவள் பார் வையில் நன்றியின் வெளியீடே தெரி கிறது. அவளுக்குக் கூச்செறிகின் றது.

அவன் வெளியேறுகிறுன்.

**வெ**ளியே இருள் கலையவில்லை. விடிய நேரமிருக்கின்றது. நித்திரை பிடிக்காதோரும் அயர்ந்து தூங்கும் பொழுது. நிம்மதியான உறக்கம் ஆளையே ஆட்கொள்ளும் நேரம்.

இப்ப எவன் கார் கொண்டுவரு வான்?

அவனவன் மூடி முடங்கிக் கிடப் பான். கூப்பிட்டாலும் கதவைக் கூடத் திறக்கமாட்டான்களே?

அவன் கால்கள் முச்சந்தியை நோக்கி நடக்கின்றன. கார்கார முருகேசு ... வேலாயுதம் ... கணபதி எல்லோருமே வர மறுத்து விட்டார்

**பாரதி எண்ணம்!**

ஆழ்கடலிற் சூழ்கின்ற அலைகலோடு
ஆதவனுஞ் சந்திரனும் ஓயும்போதும்
வாழ்கின்ற தமிழ்நெஞ்சந் தன்னிலென்றும்
வரகவியே பாரதியுன் எண்ணம் வாழும்

★ விஜயாவிந்தன்.

கள். நேரம்போய்க் கொண்டிருக்கிறது. அதில் கணபதி ஓரளவு அவர்கள் குடும்பத்துக்குப் பழக்கமானவன். 'தம்பி! யாருக்குச் சுகமில்லே வீட்டில். என்று கேட்டுவிட்டான். அவனைச் சமாளித்து வரப்பட்டபாடு ...அப்பா!

காரும் கிடைக்கவில்லை - அவர்கள் காத்திருப்பார்களே?- அவர்கள் எண்ணம் வந்ததும் அவன் கால்களில் துடிப்பு மிகுந்தது. அடுத்த நாற் சந்தியை நோக்கி ஓடியதன்பலன் கிட்டியது நல்லவேளை. அங்கு கார் கிடைத்துவிட்டது

காரை வீட்டுவாசலில் நிறுத்திய ஓசையைக் கேட்டும் 'கிட்டினர் வளவு' விழிக்கவில்லை. பத்மனை சின்னம்மாவும் வாணியும் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். காரிலேறியதும் பத்மன் அந்த மயக்கநிலையில் 'காரில் எங்கம்மா போறம்?' என்று-கேட்டபோது எல்லாரும் குலுங்கி விடுகிறார்கள். தன்னை வாட்டும் காய்ச்சலைக் கூட அவனால் உணரமுடியாத நிலை. காரின் உள் லைட்டைப் போட்டு விட்டு பத்மனை சரிப்படுத்திப் படுக்க வைக்கிறார்கள். கமலம் காரிலேறும் போது அவள் அணிந்திருந்த சேலை சிவராசாவின் கண்களிலே ஈட்டியாக ஏறுகின்றது.

அது மத்தியானம் வாணி அணிந்திருந்தசேலை, ஒரே சேலை. தாய்க்கும் மகளுக்கும் இதுதான் அவர்களிடம் இருக்கும் நல்ல சேலையாக இருக்கலாம். அதுவும் அதிக விலையுள்ளதாக இல்லையே.

வையகமே'...இப்படியும் ஒரு இல்லாமையை நீ படைக்கலாமா? இதனால்தான் அவர்கள் பெருமையை உன்னால் உலகிற்கு உணர்த்தமுடிகிறதா? இல்லாமையையே மறைத்து அதனையே வாழ்வின் வழியாக மாற்றி அவர்களால் எப்படிவாழ முடிகிறது?

அவன் காரின் முன்சீட்டில் ஏறி அமர்கிறான்.

"சின்னம்மாக்கா'... நீங்க தான் வாஸியைப் பார்த்துக்கொள்ளோணும் ... வயதுப்புள்ளை... ஆஸ்பத்திரியில் காட்டி என்ன நிலமை எண்டு கேட்டுக் கொண்டு வந்திடுகிறன் ..;"

"இதென்ன கமலம்! இதெல்லாம் எனக்குச் சொல்லணுமே... நீ ஒண்டுக்கும் வாணியைப்பத்திக் கவலைப் படாம போட்டுவா!..."

அப்ப என்ன வாணி'... வரட்டா..."

வாணி தலையசைகிறாள். கார் நகர்கிறது.

கார்க்கண்ணாடி கதவுகளினூடாக குளிர்காற்று 'விர் விர்'ரென்று உள்ளே வீசுகின்றது. பத்மன் மேலும் குளிரால் நடுங்குகிறான்.

"தம்பி! ஒருக்கா இந்தக் கண்ணாடியை உயர்த்திவிடுறியளா... குளிர் காத்தடிக்கிறது"

சிவராசா கார்க்கண்ணாடியை உயர்த்திவிடுகிறான். கண்ணாடிவழியே வானத்தில் நிர்ச்சலனமாக சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். கார்ச் சக்கரத்திற்குள் அகப்பட இருந்த தெருநாய் ஒன்று 'வாள்'... வாள்'..." என்று கத்திக்கொண்டு, ஓடிப்பதுங்குகிறது.

ஆஸ்பத்திரியின் பெரிய வாசலினூடாக உள்ளேபுகுந்த கார் நிற்கிறது.

**பாரதியின் எழுச்சி!**

காரிருள் நிறைந்த வாழ்வின் கதிரொளி போல வந்தான்
பாரிடை அடிமை நெஞ்சில் பாரதி எழுச்சி சொன்னான்
ஊரினில் மக்கள் ஒற்றுமை ஆள வைத்தான்
பேரறிவாளன் பாட்டில் பிறர் நலம் பேணிக் காத்தான்,

★ ஜீவா. நாவுக்கரசன்

அவனும் இவளும் பத்மனை உள் அழைத்துச் செல்கிறார்கள். அங்கும் அவர்களுக்கு ஏமாற்றமே காத்துக் கிடக்கின்றது.

டாக்டர் ஒருவருமேயில்லை, பிரதம நர்ஸ்தான் தூக்கக் கலக்கத்துடன் இருக்கிறாள்.

''என்ன 'அட்மிஷனா'... ''டாக்டர் இல்லையே'...''

'அப்படியெண்டால் '...''-கமலம் பரிதாபமாகக்கேட்கிறாள்.

''போயிட்டுக் காலமை டாக்டர் வந்தோடன கொண்டு வாங்க...''-நர்ஸின்பதில் அவனைச் சீற்றத்துக்கு ஆளாக்குகின்றது.

''என்ன சொல்லுகிறீங்க... கடுமையான காச்சலெண்டு நோயாளியைக் கொண்டந்திருக்கிறம்—டாக்டர் இப்பவே நோயாளியைப் பாக்காட்டி என்ன நடக்குமெண்டே சொல்லேலாதநிலை. நீங்க இப்படிச் சொல்லுறீங்களே...''—அவனது எரிச்சல் மண்டிய பேச்சு நர்ஸின் தூக்கக் கலக்கத்தைத் தூக்கி எறிந்த நிலையில் அவளும் பதட்டமாக சொல்லுகிறாள்.

''அவ்வளவு அவசரமெண்டா வேற ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுதான்''

''அப்படிக் கொண்டுபோறதெண்டா... இந்த தர்மாஸ்பத்திரி கட்டியிருக்க வேண்டியதுமில்லை... உங்களுக்கு வேலை கொடுக்கவேண்டிய அவசியமுமில்லை...''

அவனின் பதில் அவள் முகத்தைச் சிவக்கவைக்கிறது.

''பெரிய டாக்டர் வீட்டைபோயிட்டார். அவரில்லாம நான் என்ன செய்கிறது...''—அவள் சமாளிக்கப் பார்க்கும் தந்திரம் அனுக்குப் புலனாகி விடுகிறது. இவர்களின் சச்சரவில் நேரம் போவதையும், அதனால் பத்மனை டாக்டரிடம் காட்ட முடியாது போய்விடுமோ என் அச்சமும் கமலத்தின் அடிவயிற்றில் எழுகிறது. டர்க்டரில்லை என்றதும் நெஞ்சம் ஒருகணம் திக்கென்றது.

சிவராசா ஒரு கணம் தயங்கினாலும்... ''மற்றடாக்டர் இருப்பாரே அவரைக் கூப்பிடுங்க...!'' - என்கிறான்.

நேர்ஸ் முணுமுணுத்துகொண்டு போகின்றாள்.

டாக்டர் வந்து பத்மனை பரிசோதிக்கும்போது தர்மாமீட்டர் 104° காட்டுகின்றது. நிமோனியா ஆரம்பம்!'' - என்று முணுமுணுக்கின்றார்.

கமலத்தின் நெஞ்சிலே தீபற்றிய வேதனை-

''என்னடாக்டர் சொல்லுறீங்கள்...: அவன் பிழைப்பானா?... சொல்லுங்கள் டாக்டர்!...''-என்று புலம்புகிறாள்.

''ஒண்டுக்கும் பயப்படவேண்டாம். நிமோனியா ஆரம்பம்தான். அது ஒண்டும்பெரிசில்ல... ஆனா நோயாளியை வார்டிலதான் வைத்திருக்கவேண்டும். நேர்ஸ்...இவங்களுக்கு ஒரு பெட் அரேஞ்பண்ணிக் கொடுங்க...''

''யெஸ்டாக்டர்...''

அவள் வார்டின் எல்லாப் பத்திரங்களையும் புரட்டிப் பார்த்துவிட்டு ''ஒரு பெட்டும் காலியாக இல்லை டாக்டர்!' என்றாள்

**பாமழைக்கோர் கவி!**

பாமரர் தம்மிடைப் பழகிய சொற்களால்
தேமது ரச்செழுந் தீந்தமி ழின்சுவைப்
பாமுறைக் கோர்புதுப் பாதையைக் காட்டியோன்
பாமழைக் கோர்கவி பாரதி யாரன்றோ.

✶ வே. குமாரசாமி.

"டாக்டர்! நான் என்னசெய்வன் டாக்டர்... எப்படியாவது... ஒரு இடம் எடுத்துக் கொடுங்க டாக்டர்!" — கமலம் கண்ணீருடன் கேட்கிருள்.

'டாக்டரின் மனம் மெல்ல இளகு கின்றது.

நேர்ஸ் பெட் இல்லாட்டியும் தற் காலிகமாக நிலத்தில் எண்டாலும் ஒரு இடத்தைச் சரிப்பண்ணிக் கொடுங்க! ..."

"சரி டாக்டர்!... என்றவாறு செல்லும் நேர்ஸ் 'நடுராத்திரியில் வந்து இதுகள் உயிரை எடுக்குது கள்... என்று முணுமுணுத்துக் கொண்டு செல்கின்ருள்.

கடைசியாக, ஒரு வார்டின் தாழ் வார ஓரமாக இடம் கிடைக்கிறது. அதற்குப் பக்கத்திலே அழுக்குநீர் ஓடும் சிறு வாய்க்கால் இருப்பதால் ஒருவித கெட்ட மணம் எழுந்து கொண்டிருக்கிறது.

கமலம் அவனைப் பரிதாபகரமாக நீர்மல்கும் கண்களுடன் ஏறிட்டுப் பார்க்கிருள். அவனுக்கு பார்வையின் பொருள் புரிந்துவிடுகின்றது.

இன்றிரவுக்குமட்டும் பார்த்துக் கொள்வம்... காலமை பெரிய டாக்டர் வந்ததும் சொல்லி ஏதாவது வேறு இடத்துக்கு மாத்திக்கொள்ளலாம்.

கமலத்தை அங்கு தங்கவேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு அவன் தெருவில் காலடி பதிக்கை யிலே பூமியில் பொழுதுவிடிந்து கொண்டிருக்கிறது. அவனுக்கு கண் களெல்லாம் எரிச்சலைக் கொடுக்கின் றன. உடலை அயதியே ஆழ்த்திவிடு கின்றது.

'இனி வீட்டைபோய் குளிச்சாத்தான் இந்தக்களைப்பு போகும் - என்ற சிந் தனையில் நடக்கின்ருன்.

பத்மன் வீட்டைபோய் கமலம் கொண்டுவரச்சொன்ன பொருட்களைக் கொண்டு போகச்சொல்லி சொல்லிட் டுத்தான் போகவேண்டும். அப்ப முதலில் அங்கபோயிட்டு பேந்துதான் வீட்டபோகவேணும் ...

அவள் 'கிட்டினர் வளவில் காலடி எடுத்து வைத்தபோதும் அது இன் னும் விழிக்கவில்லை. உள்ளே சென் ருன். அங்கு அவன் கண்ட காட்சி அவன் உள்ளத்தை மெழுகாக உருக் கியது.

சின்னம்மா பாயிலே அயர்ந்து உறங்கிக்கொண்டிருக்க, வாணி சுவ ரிலே சாய்ந்தவண்ணம் விழிப்புக்கும் உறக்கத்திற்கு மிடைப்பட்ட அவச நிலையிலே அயர்ந்து போய்க் கிடக் கின்ருள். அவனின் அந்தநிலை ஒரு தேர்ந்த சித்திரக்காரனல் வரையப் பட்ட ஓவியமாகத் தெரிகின்றது.

அவன் காலடி ஓசை கேட்டதும் அவள் உடனேயே விழித்துக் கொள் கிருள். நற்குலப் பெண்களின் பண் பல்லவா அது?

"அம்மா என்ன சொல்லிவிட்டவா? ... பத்தமனுக்கு எப்படி இருக்குது?" அவனையே நோக்கி அவள் முதல் தடவையாக கேட்க, அவன் உடலில் புல்லரிக்கின்றது.

"பத்மனுக்கு ஒண்டுமில்லை. கொஞ் சம் காய்ச்சல்தான். ரெண்டுநாள் ஆஸ்பத்திரியில் இருந்தால் எல்லாம் சரியாய்' போயிடும் எண்டு டாக்டர் சொன்னவர்... - என்று அவன்

**சாகாத புகழோன்!**

**வெட்டரிவாள் மீசையினன் வீரம்மிஞ்சும்**
**கட்டவிழ்த்த தமிழ்க்கவிஞன் கலைஞன், - மண்ணில்**
**கொத்தடிமைத் தனங்கண்டு குமுறும் நெஞ்சன் - இன்று**
**செத்தாலும் சாகாத புகழோன் வாழ்க.**

★ வே. பத்மசோதி.

அவளைப் பயமுறுத்தாவண்ணம் விசயத்தை பக்குவமா எடுத்துச் சொல்கிறான்.

'அப்பாடா!... அவள் முகத்தின் சோக இருள் விடிவெள்ளி பூத்த விடி காலையாக கரைகின்றது. அப்போது அவள் முகத்தின் தூக்கம் கலைந்து இயற்கை அழகின் தேஜஸ் அவனுக்கு பிரமிப்பை ஊட்டுகின்றது.

அவள் ஏதோ திடீரென்று நினைவுக்கு வந்தவளாக சின்னம்மாவை எழுப்பிவிடுகிறாள்.

''என்னதம்பி!... பத்மனுக்கு சும்மா காய்ச்சல்தான்... சரி கமலம் ஏதாவது சொல்லிவிட்டவவே!...

அவன் கமலம் கூறியவற்றைக் கூறுகிறான். ''இனி நீங்க போற தெண்டா மத்தியானம் பண்ணிரண்டு மணிக்குத்தான் போகமுடியும்... அப்ப நான் வரட்டா?...

'சரிதம்பி!... என்றவாறு மீண்டும் அயர்ந்து தூங்கிவிடுகிறாள். அவள் களைப்பு அவளுக்கு!

''கொஞ்சம் நில்லுங்க!... என்ற குரல் அவனைத் தடுத்து நிறுத்துகின்றது. வாணி அவசரமாக அறையின் உள்ளே நுழைகிறாள். கையில் ஒரு கிளாஸுடனும், பிளாஸ்குடனும் வெளியே வருகிறாள்.

அவனிடம் கோப்பியை பிளாஸ்கிலிருந்து ஊற்றி...'' ''நல்லா களைச்சுப்போனீங்க. எங்களால் உங்களுக்கும் அலைச்சல்... இதைக் குடியுங்க!...'' - என்று கூறியவாறு அவனிடம் நீட்டுகின்றாள். அவன் துணிச்சலுடன் அவள் முகத்தை நிமிர்ந்துபார்க்கிறான். அவளின் கண்கள் பளீரிடுகின்றன. இருவரிடையேயும் நிலவிய மெல்லிய திரை மெதுவாக விலகிக் கொண்டிருக்கின்ற பிரேமை. அவன் கோப்பியை வாங்கிப் பருகுகிறான்.

அப்போது சிங்காரம் வீட்டுக் கதவு திறக்கப்படுவதையும் அவன் மனைவி வெளியே வந்ததையும் கவனிக்காமல் தன்னிலை மறந்து நிற்கும் அவ்விருவரையும் ஆச்சரியக் கண்ணுல் விழுங்குவதையும் இருவரும் கவனிக்கவில்லை.

—தொடரும்


யாழ்மார்க்

பாத்திரங்கள் என்றே எப்போதும் கேட்டு வாங்குங்கள்.


★ நிக்கல். ★ குரோமியம்.
★ வெள்ளி. ★ தங்கம் முதலிய

எலக்ரோ பிளேடிங் வேலைகள் குறைந்த விலையில் செய்யப்படும்.

★ யாழ் மெற்றல் இன்டஸ்ரீஸ் ★

250, 253, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 7049.
தந்தி: யாழ்மெற்றல்




தந்தையின் முகத்தைப் பார்க்க ஒரு புறம் பயமாகவும் ஒரு புறம் பரிதாபமாகவுமிருந்தது. தன் மகனுக்குப் பேசி வைத்த பெண் சொல்லாமற் கொள்ளாமல் இப்படி இரகசியமாக ஊரைவிட்டே ஓடிப்போனது வேண்டுமென்றே தனக்கிழைக்கப்பட்ட அவமானம் என்ற நினைவில், அந்த நிகழ்ச்சி ஊராரின் கேலிக்கும் கிண்டலுக்கும் தன்னை ஆளாக்கிவிட்டதே என்ற ஏக்கத்தில் நடைப்பிணமாகத் தன் தனியறைக்குள் அடைந்து கிடந்தவரின் பரிதாபக் கோலம் நெஞ்சை உருக்குவதாக இருந்தது. அதே வேளையில் வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவர் காட்டிய பிடிவாதத்தையும்; அந்தப் பிடிவாதத்தினால் ஏற்பட்ட கசப்பான விளைவுகளையும் எண்ணிப் பார்த்தபோது மகாதேவனின் மனத்தில் அளவிற்கு மீறிய பயமும் ஏற்பட்டது.

எழுந்து நின்றவனை உட்காரும்படி சைகை செய்தார் முருகேசு. தந்தையும் மகனும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தார்களேயன்றி. இருவருமே வாய்திறக்கவில்லை. என்ன பேசுவது என்று தெரியாமல் மகாதேவன் தவிக்க, எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் அவர் தயங்கிக்கொண்டிருக்க மௌனம் சில நிமிடங்களை விழுங்கியது.

**5**

கடைசியில் முருகேசுதான் வாய்திறந்தார். தம்பி... என அழைத்த குரலில் இரக்கமும் உறுதியும் இழையோடியிருந்தன. அதைஅக்கறையுடன் கேட்கும் விருப்பத்தைத் தன் முகபாவத்தாற் காட்டிக்கொண்டு அவரைப் பார்த்தான் மகாதேவன்,

"தம்பி! நாங்களெல்லாம் இனிச் சண்பகத்தை மறந்து விடவேண்டியதுதான்." என்று சொல்லி, பொங்கியெழும் துக்கத்தை அடக்க முயல்பவரைப் போலச் சிறிது நேரம் தாமதித்துவிட்டு மீண்டும் தொடர்ந்தார் "சொல்லும்போது சுலபமாகத் தெரிந்தாலும், மறப்பதென்பது முடியாத காரியம்தான். நானே இந்த நிலையில் இருக்கின்றேனென்றால், உன் நிலைமையை என்னால் ஊகித்துப் பார்க்கவே முடியாது...."

மகாதேவன் 'ம்" கொட்டக்கூட இல்லை. சால்வைத் தலைப்பால் தன் கண்களைத் துடைத்தபடி முருகேசு

தான் பேசினர். ''உறவு கெட்டுவிடக் கூடாது என்பதற்காக மட்டுமல்ல, அடக்க ஒடுக்கமான அந்தப் பெண் தான் எங்கள் குடும்பத்திற்கு ஏற்ற வள் என்ற நம்பிக்கையாலுந்தான் அவளை உனக்குச் செய்யவேண்டும் என்றிருந்தேன்... காதல், கீதல் என்று இந்தக் காலத்துப் பொடியள் தலைகீழாக நிற்கும்போது, எந்த விதத்திலும் குறை சொல்ல முடியாத சண்பகத்தை உனக்குக் கல்யாணஞ் செய்யத் தீர்மானித்தேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் எவருக்குமே தலைகுனியாதவனடா நான். அத்தனை மிடுக்கோடு உன்னுடைய கல்யாணத்தை மிகவும் சிறப்பாக நடாத்த வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்டிருந்தேன்...... ஆனல்......'' அவரை மேலே தொடரவிடாமல், வார்த்தைகளைக் கண்ணீர் முந்திக் கொண்டது.

அந்த நிலையில் அவரைக் காண மகாதேவனின் கண்கள் கலங்கின.

பழங்காலத்து மனுஷன் அவர். ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சுற்றிக் கட்டும் கோட்டையைத்தான் அவரும் கட்டியிருந்தார். எல்லையில்லா இன்பமும், ஏற்றமும், செல்வமும் செல்வாக்கும் அந்த எஃகுக் கோட்டையிலிருந்து எந்நாளும் ஒளிவிடும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனல் எதிர்பாரா முறையிலே அந்தக் கோட்டை இடித்துத் தகர்க்கப்பட்டதை அவரால் ஏற்கவே முடியவில்லை. இத்தனை காலத்திற்குப் பின்னர் இப்படியொரு வீழ்ச்சியா? தாங்கவே முடியாத தோல்வியா?

வயதால் வைரித்திருந்த அவரிதயம் இன்று வாழையாய்த் துவண்டது.

என்ன சொல்லித் தேற்றுவதென்று தெரியாமல் எங்கோ பார்த்தபடியிருந்த மகாதேவன், தன் இதயம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்ப வெற்றியின் இரகசியத்தை வெளியிடுவதா வேண்டாமா என்பதைச் சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அவனுடைய கவனத்தை மீண்டும் அவருடைய குரலே கவர்ந்தது.

''தம்பி! கறந்தபால் மடியேருது. சண்பகத்தையும் அவனையும் தேடிப் பிடிக்கிற எண்ணத்தை நான் கைவிட்டேன். இந்த வீட்டுக்கு வருவதற்கு அவள் கொடுத்து வைக்கவில்லை. பிராப்தம் அவ்வளவுதான். நாங்கள் விரும்புவதெல்லாம் அப்படி அப்படியே நடந்துவிடவேண்டும் என்று நினைப்பதைப் போன்ற முட்டாள்த்தனம் வேறில்லை. இந்த உண்மையை என்னல் இப்போதுதான் உணரமுடிகின்றது. இதை உணராத காலத்தில் நான் பிடித்த பிடிவாதங்களையும், காட்டிய முரட்டுத் தனத்தையும் நினைத்துப் பார்க்கவே நான் கூசுகின்றேன்.''

ஆச்சரியத்துடன் தன் தந்தையைப் பார்த்தான் மகாதேவன். சண்பகத்தின் போக்கு ஏற்படுத்திய ஏமாற்ற உணர்வும் அவமான நினைவும் அவரைச் சுயபரிசோதனையிலிறக்கி அவரைப் புதிய மனிதனுக மலரச் செய்கின்றனவா? அப்படியென்ருல் நடந்து முடிந்ததெல்லாம் நன்மைக்கேதானு?

அவசரப்பட்டு இப்படியொரு முடிவுக்கு வர அவன் விரும்பாவிடினும்,

### அலெக்சாண்டர் போலே!

**ஆயுத மேந்தவில்லை, படைபலங் கொண்டு நாட்டை**
**ஆண்டதுமில்லை அந்த அலெக்சாண்டர் போலே நம்ம**
**பாரதி பாட்டு என்ற படைக்கலத்தாலே வென்ருன்**
**பாரத வீரம்தன்னை உலகமே காண்க என்ருன்.**

★ நோ. மணிவாசகன்.

இந்த ரீதியிற் சிந்திப்பது அவனுக்குப் பெரு மகிழ்வைக் கொடுத்தது. எனினும் மீண்டும் அடக்கமாகத் தந்தையின் குரலைச் செவிமடுத்தான்.

"இனி எந்தவொரு விஷயத்திலும் உன்னை நான் கட்டுப்படுத்த விரும்பவில்லை. நீ சந்தோஷமாக வாழவேண்டும் என்பதுதான் என் விருப்பம். எப்படியானவளைக் கல்யாணஞ் செய்தால் நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழலாம் என்று உனக்குத் தோன்றுகிறதோ, அப்படியானவளைச் செய். பணமோ அந்தஸ்தோ எனக்கு முக்கியமில்லை. வாழப் போகின்றவன் நீ. உனக்குப் பிடித்தவள்தான் இனி என் மருமகள். ஆனால் ஒன்று, எவ்வளவு சிறப்பாகச் சண்பகத்தின் கல்யாணத்தைச் செய்யவேண்டும் என்று நினைத்தேனே, அதைவிடப் பலமடங்கு சிறப்பாக உன் கல்யாணம் நடக்க வேண்டும்; அதுவும் மிக விரைவில் நடக்கவேண்டும். இதுதான் என்னுடைய இப்போதைய ஆசை. இதை நீ நிறைவேற்றி வைத்தாற் போதும்."

உறுதி பகர்வதைப் போன்றும் இரந்து கெஞ்சுவதைப் போன்றும் மாறி மாறி ஏறியும் தாழ்ந்தும் ஒலித்த தந்தையின் குரல் மகாதேவனை எங்கோ உயரே தூக்கிச் சென்றுகொண்டிருந்தது. வானிலே மேலே செல்லும்போது மரங்களும் மனிதர்களும் வீடும் வெளியும் வேறுபாடற்று ஒன்ருகவே காட்சியளிப்பதைப் போன்று, உள்ளம் உயர்ந்த இந்த நிலையில் கஷ்டங்களும் கரைச்சல்களும் பிரச்சினைகளும் கலந்து பின் தெளிவாகியதைப் போன்றிருந்தன.

பரமனின் சந்நிதியில் நிலவும் புனித அமைதியிற் சில நிமிடங்கள் கழிந்தன. அந்தப் புனிதமான அமைதியையும், தன்னுள்ளம் அனுபவித்து வரும் தெய்வீக இன்ப உணர்வினையும் கலைப்பதற்கு விரும்பாதவனைப் போல் மௌனமாக, அந்த மௌனமே அர்த்தம் பொதிந்த மொழியாக விளங்கும் என்ற நம்பிக்கையே உருவானவனுக, மனக் கண்ணுல் தந்தையையும் மறுகண்ணுல் கூரையையும் பார்த்துக்கொண்டிருந்தான் மகாதேவன்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது

"அப்பா...!" - முதன் முதலாக மகாதேவனின் குரல் இப்போதுதான் ஒலித்தது. "சண்பகம் தனக்குள்ளே என்ன நினைத்தாள் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது நாம்தான் ஏதோ திட்டங்களெல்லாம் போட்டுவிட்டோம். ஒருவகையிற் பார்த்தால், அவள் செய்தது நல்லது போலவும் இப்போது தெரிகின்றது. எங்கள் கல்யாணத்திற்கு வேண்டா வெறுப்பாகச் சம்மதித்துவிட்டுப் பின்னர் வேதனைப்படுவதைவிட முன்னதாகவே அவள் இப்படியொரு முடிவுக்கு வந்தது நல்லதுதானே!"

அவனுடைய கண்களை ஊடுருவுவதைப்போற் பார்த்தார் முருகேசு. அவன் உண்மையிலேயே மாறிவிட்டானு? அல்லது அவருக்காகத் தன் துயரத்தை மூடி மறைத்து மகிழ்வுடன் இருப்பதாக நடிக்கின்ருனு?

ஆரம்பத்திற் சிறிது குழம்பினுலும், பின்னர் அவருடைய உள்ளமும் தெளிவடைந்தது. சண்பகத்தின் செயல்

## சொர்க்கக் கனவு!

**தொப்பித் துரைமாரை துரத்தவல் பாட்டிசைத்த**
**சுப்பிர மணியாரின் சொர்க்கக் கனவான**
**ஒப்பில் பொதுமையை யிவ்வுலகினி லேசமைக்க**
**தப்பில் வழியில் நாம் தளரா துழைப்போமே.**

★ கௌரி.

அவருக்கு ஆத்திரத்தையும் அருவருப்பையும் ஏற்படுத்தியது உண்மை தான். ஆனல் மகாதேவனின் உள்ளம் சிறிதும் சலனப்படாது சாந்தமடைந்தது அவருக்குச் சந்தோஷத்தையே கொடுத்தது.

"உனக்கேற்பட்ட அதிர்ச்சியில் நீ எக்கச் சக்கமாக ஏதாவது செய்து விடுவாயோ என்று நான் உண்மையிலேயே பயந்தேன். அந்தப் பயத்தை இப்போது நீ பறக்கடித்து விட்டாய் இனி, உன் கல்யாணத்தைப்பற்றி நீயே முடிவு செய்து கொண்டுவா. உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவது என் பொறுப்பு," என்று சொல்லிக் கொண்டே எழுந்தார் முருகேசு.

இத்தனை காலமும் தனக்குச் சிம்ம சொப்பனமாக, சீறும் புலியாக இருந்தவர், இப்போது சின்னக் குழந்தையாக, அன்புத் தோழனக மாறிவிட்டாரே என்ற பெருமகிழ்வில், தன் உள்ளக் கிடக்கையை விண்டு சொல்லத் தெரியாமல், பயத்திற் பிறந்த அடக்கம் நீங்க, பாசத்தில் முகிழ்ந்த பணிவுடன் தந்தையை மானசீகமாக வணங்கினுன்.

மாதவிமேல் வைத்த காதலைத் துறக்கவும் முடியாமல், தாய் தந்தையரின் மனவிருப்பத்தை நிறைவேற்றவும் தெரியாமல், இருதலைக் கொள்ளி எறும்பாகி அவன் செத்துப் பிறந்த விநுடிகள் அனந்தம். மாதவியுடன் இணைந்து இன்பமாக வாழும் நன்னுள் வராதா என்று ஏங்கிய அளவுக்கு, அந்த நாள் இப்பிறவியில் வரவே வராது என்று சோர்ந்தும் போயிருந்தவன் அவன். விரக்தியிலும் வேதனையிலும் வெந்து கொண்டிருந்த மகாதேவனின் உள்ளத்தில், தந்தையின் உறுதிமொழிகள் விவரிக்க இயலா வியப்பையும், வாழ்விலே புதியதொரு விருப்பத்தையும் விதைத்துவிட்டன. தன்னுடைய இலட்சியமும் தந்தையின் விருப்பமும் ஒன்றுகவே மாறிவிட்ட அதிசயத்தை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்துகொண்டிருந்தான்.

மட்டக்களப்பை நோக்கி மகாதேவன் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது, என்றுமேயில்லாத மகிழ்ச்சியும் நிறைவும் அவனுடைய மனத்தை நிறைத்திருந்தன. மாதவியை எப்போது காண்போம், அவளுடைய காதிலே அந்த இனிப்பான செய்தியை எப்போது போடுவோம் என்று துடித்துக்கொண்டிருந்தது அவன் இதயம். காதலிப்பதும், காதலிக்கப் படுவதும் அதன் விளைவாகக் கல்யாணம் சிறப்பாக நிறைவுறுவதும் உலகிலுள்ள சிலர்க்கு, மிக மிகச் சிலர்க்கு மட்டுமே கிடைக்கின்ற அரும் பெரும் பாக்கியம். அந்தப் பெரும் பாக்கியம் இப்போது அவனுக்கே கிடைக்கப்போகின்றதே!

அவன் வீட்டிலிருந்து புறப்பட்ட போது தாயுடன் நிகழ்த்திய உரையாடல்கள் நினைவுக்கு வந்தன.

"மகாதேவா, சண்பகத்தையும் அவள் செய்த துரோகத்தையும் நினைக்க நினைக்க வயிறு பற்றியெரிகிறது. அவளை மறக்கவும் முடியாமல், நினைக்கவும் விரும்பாமல் நான் படும் அவஸ்தை ஆண்டவனுக்குத் தான் தெரியும்... மகாதேவா, உனக்கு எங்காவது நல்ல இடத்தில் கல்யாணம் நடைபெறும் வரைக்கும் நிம்மதி என்பது எனக்கு ஏற்படவே மாட்டாது."

தேடித்திரிந்த சந்தர்ப்பம் தன்னை நாடிவந்த மனமகிழ்வில், தன் மன நிலையை உறுதியாகவே சொன்னுன் மகாதேவன். 'அம்மா, எங்களுக்கு மேற்பட்ட ஏதோ ஒரு சக்தி எங்களை வழிநடத்துகின்றது என்பதில் எனக்கிருந்த நம்பிக்கை இப்போது உறுதியாகிவிட்டது. சண்பகத்திற்காக நான் இப்போது கொஞ்சங் கூடக் கவலைப்படவில்லை "

அவன்பேசிய தத்துவம் அன்னைக்கு விளங்கவேயில்லை. அதை உணர்ந்து

கொண்டவன் போல் இப்போது சற்றுத் தெளிவாகச் சொன்னான் மகாதேவன், "அம்மா, இந்த வீட்டில் மீண்டும், கலகலப்பும் குதூகலிப்பும் விரைவிலேயே ஏற்படும் என்று என் அந்தராத்மா கூறுகின்றது. எந்த விதத்திலும் குறையற்ற, கண் நிறைந்த, கை நிறைந்த ஒருத்தி உன் மருமகளாக வருவாள். அந்த வேளையில் நீ என்னை மறந்துவிட்டு, அவளையே தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடினாலும் ஆச்சரியப்படமாட்டேன்."

அந்த வார்த்தைகளின் மந்திர சக்தியில் தன்னை இழந்து, மகிழ்ச்சியும் மனநிறைவும் மங்கலமும் நிறைந்த கற்பனை மாளிகையினுள்ளே காலடி எடுத்து வைத்த அந்தத் தாய்க்கு, அத்தகைய பெண் யார் என்பதையோ, அவள் இப்போது எங்கிருக்கின்றாள் என்பதையோ கேட்டறியத் தோன்றவில்லை. எதிர்பாராத ஆனந்த பரவசத்தில் வாயடைத்துப் போய், மகாதேவனையே பார்த்தபடி நின்ற அவள், கற்பனைக்கெட்டிய படி பூரணத்துவமான ஒரு பெண்ணை அவனருகிலே நிறுத்தி, இருவரும் எந்நாளும் இன்பமாகவும் அன்பாகவும் இணைந்து வாழ அருளும்படி இறைவனை வேண்டிக்கொண்டிருந்தாளோ!

தாயுள்ளத்தின் பாசக் கனிவை நினைத்தபோது இப்போதும் மகாதேவனின் உடல் சிலிர்த்தது.

அவனைப் பொறுத்தவரை, மாதவி என்ற அந்த மூன்று எழுத்துக்களும் அனந்தகோடி சக்தியிலிருந்தது. அவனுடைய வரண்ட வாழ்க்கையை வளமாக்க, இலட்சியக் கனவுகளுக்கு ஓர் அர்த்தம் உண்டாக்க, நெஞ்சத் தடாகத்தில் எழும் இன்ப உணர் வலைகளுக்கு உருவமும் உயிர்ப்பும் கொடுக்க, அன்னியோன்யமான குடும்ப வாழ்க்கையின் மூலம் அவனுடைய தாய் தந்தையர்க்கு நிம்மதியைக் கொடுக்க அந்த மூன்று எழுத்துக்களால், அவை குறிக்கும் அந்த மாதர்குல மாணிக்கத்தாற்றான் முடியும். மங்கையராகப் பிறப்பதற்கே எத்தனை மாபெருந் கடுந்தவம் செய்ய வேண்டியிருந்ததோ! அந்த மங்கை நல்லாளின் மாசற்ற அன்பைப் பெறுவதற்கு எத்தனை யுக யுகாந்தமாய் அவன் தவமியற்றினானோ!

இதயம் இறுமாப்படைந்த இப்போதைய நிலையில் முன்பு இழைத்த சில தவறுகளும் அவன் நினைவுக்கு வந்தன. இறையின் முறையை, இயற்கையின் நியதியை உணராது அவன் எத்துணை கடுமையாக கொடுமையாக, கயவனாக நடந்து விட்டான்! அன்றொருநாள் இரவினிலே, ஆருமற்ற தனிமையிலே தன் அன்பு முழுவதையும் அவன் முன்னால் அவள் கொட்டியபொழுது, இயற்கையாகவே எழுந்த இன்ப எதிரொலியை வேண்டுமென்றே அடக்கி வைத்து, இதயமற்ற இராட்சதன் போல் இரக்கமற்றுப் பேசிய நினைவு வர, உடனடியாகவே மாதவியிடம் ஓடிச்சென்று அவளுடைய காலிலே விழுந்து கதறவேண்டுமாப்போல் ஓர் உத்வேகம் எழுந்தது.

தன் கடுமைக்கும் கொடுமைக்கும் கருணையற்ற தன்மைக்கும் பிராயச் சித்தமாக இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் மாதவியின் மனம் இம்மியளவும் கோணாது நடப்பது என்ற தீர்மானத்துடன், சிறிது நேரம் அவன் தூங்கியெழுந்தபோது மட்டக் களப்பு வந்துவிட்டது.

**மா**டிவீதியில் அவன் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று பிரயாண அலுப்புத்தீரக் குளித்துவிட்டு மாதவியிடம் செல்லலாம் என நினைத்திருந்த அவனை, இடைவழியிலுள்ள "மலர்வாச"த்தின் கோலம் தடுத்து நிறுத்தியது. அந்த அழகு மாளிகையின் வாயிலைக் கார்கள் பல மறைத்து நிற்க, அங்கே குழுமியிருந்த பலரகப் பட்ட மனிதர்கள் தம் முகத்தை மறைக்க முயல்பவர்களைப் போன்று, தலை குனிந்தபடி நின்றார்கள். சற்று

உள்ளே தள்ளி இளம்பெண்களின் கூட்டம் சோகமேயுருவாக நின்றது. அவர்கள் மாதவியின் தோழிகளாக இருப்பார்களோ? அப்படியானால் மாதவிக்குத்தான் நடக்கக்கூடாத ஏதாவது நடந்துவிட்டதோ?

நினைத்தபோதே மகாதேவனின் நெஞ்சு நடுங்கியது. அவன் யாழ்ப் பாணம் செல்லப் புறப்பட்டபோது மாதவிவீட்டு வேலைக்காரி சொன் னது திடீரென்று ஞாபகத்திற்கு வந்தது. அந்த வருத்தம் இப்போது பெருத்துவிட்டதோ?

வெளியே நின்று வேண்டாத வற்றை எண்ணி வேதனைப் படுவதை விட, உள்ளே சென்று உண்மையை அறிந்துவிடவேண்டும் என்ற உந்த லில் ''மலர் வாச''த்தை நோக்கி நடந்தான்.

அத்தனை பேர்களின் மத்தியிலும் அவனை ''வா'' வென்றழைக்க ஒரு வருமேயில்லை. ஏதோ ஒன்றைப் பறி கொடுத்தவர்களைப்போன்று ஏக்கத் துடன் நின்ற அவர்கள் தங்கள் பார்வையாலும் சைகையாலும் தங் களுக்குட் சில செய்திகளைப் பரிமா றிக் கொண்டிருந்தார்கள். தன்னைக் கண்டவுடன்தான் அந்தச் செய்திப் பரிமாற்றமோ என்ற சந்தேகம் எழ அவன் கூனிக் குறுகினன். எந்நா ளும் இன்முகம் காட்டி அவனை அன்புடன் வரவேற்கும் காசுபதிப் போடியார்கூட அவனுடைய கண் ணிற்படவில்லை. அவன் அங்கே செல் வதை எவருமே விரும்பவில்லையோ!

அழையாத அந்த வீட்டினுள் நுழை யாது திரும்பவும் மகாதேவன் விரும் பவில்லை. மாதவியை மட்டும் அவன் கண்டுவிட்டால் இந்தப் புறக்கணிப் பையெல்லாம் அவன் புறக்கணித்து விடுவானே! நடப்பது நடக்கட்டும் என்ற துணிவில், நடந்ததை அறியும் வெறியில் ''மலர் வாச''த்திற்குள் நுழைந்தான் மகாதேவன்.

எங்கோ ஒரு மூலையிலிருந்து வந்து கொண்டிருந்த மாதவியின் தாயின் விசும்பல் ஒலியைத் தவிர அங்கே நிசப்தமே குடிகொண்டிருந்தது. பேச முயல்வதே பெரும்பாவம் என்று முடிவுகட்டியவர்களைப் போன்று அனைவரும் தம் உள்ளக் குமுறல்களை அடக்கி ஊமைக்கண் ணீர் வடித்துக்கொண்டிருந்தனர். ஏற்கனவே எழுந்த சந்தேகம் இப் போது வலுப்பட, துடிக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு, துயரே உருவான அந்தக் கூட்டத் தைத் துளாவிப் பார்த்தான் மகாதே வன்.

அவனுடைய திகைப்பையும் தவிப் பையும் அறிந்தோ என்னவோ மாத வியின் உடன் மாணவியும் உற்ற தோழியுமாகிய மல்லிகா அவனருகே சென்ருள். அந்த வீட்டின் வேருெரு பகுதிக்குத் தன் ஆசிரியனை அழைத் துச் சென்று மாதவியின் நிலையை விளக்கினுள் அவள்.

ஏதோ ஒரு பயங்கர அதிர்ச்சியி ஞல் இருதயம் பாதிக்கப்பட்டுவிட் டது. கடந்த ஐந்தாறு நாட்களாக அடிக்கடி மயங்கி மயங்கி விழுந்த அவள், நேற்றுப் பகல் முழுவதும் தன்னை மறந்த நிலையில் மகாதே வனின் பெயரையே உச்சரித்துக் கொண்டிருந்தாள். இரவானதும் அந்த உச்சரிப்பும் நின்றுவிட்டது. மயக்கம் அவளை முற்றுக மூடிவிட் டது. தங்களாற் செய்யக்கூடிய அத் தனையையும் செய்துவிட்டார்கள் டாக் டர்கள். மருந்து குடிப்பதற்கே மறுத் துவிட்டாள் மாதவி.

மாதவியின் வாழ்க்கை இனி மணிக் கணக்கிலேதான் உண்டு... உருகிய நெஞ்சை அடக்கி, பெருகிய கண்ணீ ரைத் துடைத்து, அழுகைக் குரலில் விக்கிக்கொண்டும் விம்மிக்கொண்டும் மல்லிகா சொன்ன இந்தச் செய்தி யைக் கேட்டபோது மகாதேவனின் இதயம் இடிந்தேவிட்டது. இதற்கெல் லாம் அவன்தானே காரணம்? என்

ணிய எண்ணமெல்லாம் மண்ணுகிப் போன நிலையில், எதிர்பார்த்த இன்ப வாழ்வு ஏமாற்றமாகிவிட்ட துயரில் மாதவி தன்னைத்தானே மாய்த்துக் கொள்ளும் முயற்சியா இது?

உலகத்திற்கு எல்லாவற்றையும் மூடி மறைக்கலாம் ஆனல் அவனுடைய உள்ளம் அவனுக்கு இடித் திடித்துரைக்குமே!

உள்ளங்களின் இரகசியக் காதல் உலகறியும் திருமணத்தில் முடிவதற்குப் பதிலாக ஊர் சிரிக்கும் பிரிவில் முடிந்துவிட்டதே! இதயமெனும் பூந்தட்டில் எத்தனை இனிய கனவுகளைக் குவித்திருந்தான் தன் இதயராணியிடம் சமர்ப்பிப்பதற்கு! அவன் கனவுகள் கலைந்து விட்டனவா?

அவளுடைய தங்கமேனி பொங்கியெழ, பொன்னிதயம் பூரிக்க எத்தனை இன்பக் கதைகளைச் சொல்வதற்கு நினைத்திருந்தான்! அந்த நினைவுகள் குலைந்துவிட்டனவா?

துயரமும் துன்பமும் மறைந்த, இன்பமும் அன்புமே நிறைந்த இனியவோர் பூங்காவிலே அவளை ஓர் வண்ணமலராய், வாசமலராய், வாடா மலராய்க் கருதித் தன் எண்ணக் கரங்களால் எத்தனை தடவை வருடியிருக்கின்றுன்! அவன் எண்ணங்கள் சிதைந்துவிட்டனவா?

திடீரென ஏதேதோ முடிவுக்கு வந்தவனைப் போன்று மகாதேவன் எழுந்தான். மாசற்ற அந்த மாணிக்கத்தைத் தன் மடிமீது கிடத்த வேண்டும் என்ற வெறி அவனை வழி நடத்த, மாதவியின் அறைக்குட் சென்றுன் அவன்.

தன் இதயங்கவர்ந்தவளின் இறுதிக் கோலத்தைப் பார்த்தான். அந்த நிலையிலும் புகைபடியா ஓவியமாய், புதுமை மிகு காவியமாய், புனித நிறை நறுமலராய்ப் பொலிவோடும் பொருளோடும்பேரெழிலோடும்மாதவி காட்சியளித்தாள்.

கைபடாத இந்தக் கன்னிமலர் இனிக் காலனுக்குத்தான் சமர்ப்பணமா?

அப்படி நினைப்பதே மன்னிக்க முடியாத குற்றமாய், மாபெருந் துரோகமாய் அவன் நெஞ்சை வாட்ட, அந்த நினைவைக் கிள்ளியெறிந்தான் மகாதேவன்.

மனித சக்தியால் இனி எதுவுமே முடியாது என்ற மயக்கமறு நிலையில், மனிதனுக்கு மேற்பட்ட அந்த மகா சக்தியைத்தான் மனமுருக வேண்டினுன். ஏதாவது அற்புதம் நிகழ்த்தி அவளுடைய உயிரை உடலில் நிறுத்த அந்தச் சக்தியால் முடியாமற் போய் விடுமா? அவன் படித்தறிவும் பகுத்தறிவும் மறைய, அவன் நம்பிக்கையே வடிவானுன்.

எங்கோ பிறந்து எப்படியோ வளர்ந்தவர்களைச் சந்திக்க வைத்துச் சிந்திக்கச் செய்த அந்த மகாசக்தி அவர்களை இணைத்துப் பிணைத்து இன்பமாக என்றும் வாழ வைக்கும் என்ற அசையா நம்பிக்கை அவனை உந்தத் தன் மனங்கவர்ந்தவளை வாரியணைத்து அக் கொடியுடலின் கொம்பாகி, முகமலரின் வண்டாகி, கண்ணீரால் முகந்தெளித்து, இதழோடு இதழ் பதித்துத் தன் என்பெல்லாங் உருக அன்பெல்லாம் சேர்த்து "மாதவிக் குஞ்சு" என்று அவன் அழைத்தபோது ...

அந்த அன்பின் குரல் அவள் ஆத்மாவை அரண் செய்ய அவள் தன் கண்மலர் விரித்துச் செவ்விதழ் சிரித்து "அத்தான்" என்ற அமிழ்த வார்த்தையால் தன் அன்புக்குரியவனை அணைக்க......

ஆனந்தக் கண்ணீர் மலர்கள் "மலர் வாச"த்தை நிறைத்தன. அந்த இனிய செய்தியை எங்கும் பரப்பும் வேகத்துடன் மல்லிகையின் மங்கல மணம் காற்றில் நிறைந்தது. ★

(நிறைவுபெற்றது)

# அன்ராக்ரிக் கண்டத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி

"இவன்"

பனிக்கட்டியினுல் மூடப்பட்டிருக்கும் அன்ராக்ரிக் கண்டமானது, பூமியின் தரைப் பரப்பில் பத்துவீதத்தைக் கொண்டதாகவும் பூமியின் நீரக்கன அளவில் பதினேழு வீதத்தைக் கொண்டதாகவும் உள்ளது. 1957-58ல் நிகழ்ந்த சர்வதேச பூ பௌதிக ஆண்டில் (I. G. Y.) பல ஆராய்ச்சிகளை இந்தக் கண்டத்தில் நடத்தியிருக்கின்ருர்கள். கடந்த ஒரு நூற்ருண்டாக பலர் பலமுறை முயன்றும், பலர் இறந்தும் சர்வதேச பூ பௌதிக ஆண்டிலேதான் பல தேசத்து விஞ்ஞானிகளும் ஒருமித்துப் பல உண்மையைக் காணமுடிந்தது.

இதன் அமைப்பையும் தன்மையையும் அறியமுயல்வது வட அமெரிக்காவில் 2/3 பங்கு 7500 அடி தடிப்பான பனிக்கட்டியால் மூடியிருந்தால் எப்படி அறியமுடியாதோ அவ்வண்ணமே அறியமுடியாததாகும்.

ஆனுல் பூ பௌதிக விஞ்ஞானிகள் இதில்தான் பூமியின் பரிணும வளர்ச்சியின் இரகசியம் இருக்கின்றதென்றும், இதை அறியாமல் பூமியின் பழைய சரித்திரத்தையோ அல்லது ஏதிர்காலத்தையோ சரியாக அறிய முடியாததாக இருக்கும் என்றும் கருதுகின்ருர்கள்.

இந்தக் கண்டத்தில் ஆண்டுக்கு ஒரு அங்குல மழையே பெய்கின்றது. இங்கு உஷ்ணம் - 100-Fக்குக் கீழ் செல்லுகின்றது. ஆனபடியால் ஜீவராசிகள் வசிப்பதற்கு முடியாத நிலையில் இருக்கின்றன. ஆனுல் பனிக்கட்டிகளுக்குக்கீழ் பல ஆயிரம் அடி ஆழத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட நிலக்கரி படிமங்கள், வேறு கதைகள் கூறுகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் இக் கண்டம் உஷ்ணவலயத்திற்கு உட்பட்ட இடமாகவும் மரங்கள் முதலிய நிறைந்த வனங்கள் உள்ளதாகவும் நிறைய சூரியனின் ஒளிபடக்கூடியதாகவும் இருந்திருக்கவேண்டும் என்றும் கருதுகின்ருர்கள்.


முக்கியமாக அங்கு கண்டு எடுக்கப்பட்ட மரங்களின் அடிப்பாகங்களைப் பார்க்கும் பொழுது அவை வட ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் சரித்திரகாலத்திற்கு முன் இருந்த மரங்களின் படிமங்களுக்கு ஒப்ப இருக்கின்றன. எனவே இந்தக் கண்டத்தில் சூரியனின் ஒளி ஒரு காலத்தில் படக்கூடியதாக இருந்திருக்க வேண்டும், அல்லது இக்கண்டம் மற்றக் கண்டங்களுடன் ஒன்ருக உஷ்ணவலயத்திற்கு மத்தியிலிருந்து இடம் பெயர்ந்திருக்க வேண்டும்.

முதலாவதாக இப்பொழுது இருக்கும் இடத்தில் இந்தக் கண்டம் நெடுங்காலத்திற்கு முன்னும் இருந்திருக்குமாஞல் இதில் சூரியனின் ஒளி நிறையப் படக்கூடியதாக இருந்திருக்கமுடியாது. அப்படியாயின் பூமிசுழலும் மையக்கோடு மாறியிருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியிருக்கின்றது. இதற்கு உதாரணமாக இப்பொழுது பூமி சுழலும் மையக்கோடு, பூமியின் செங்குத்துக் கோட்டுக்கு சரிவாயிருப்பதையும், நாளடைவில் அது மாறிக்கொண்டு போவதையும் அவதானித்தார்கள். இதனுல் இப்பொழுது இருக்கும் இரு துருவங்களும் சூரியனின் ஒளி வசதியாகப்படும் வரைக்கும் மாறினுல் அங்கு இருக்கும் பனிக்கட்டி உருகி ஒரு பிரளயமே வந்துவிடலாமென எண்

ணுகிறுர்கள். இப்படி பிரளயங்கள் முன்பு வந்திருக்கவேண்டும் எனினும், இந்த மாற்றம் உலகை எப்படிமாற்றி அமைத்திருக்கும் என்றும், அதன் பரிணம வளர்ச்சியை எப்படி தாக்கியிருக்கும் என்றும் சிந்திக்கலானுர்கள். இதற்கு சான்ருக இந்தியநூல்களிலும், விவிலிய நூலிலும் ஒவ்வொரு யுகமுடிவிலும் ஒரு சலப்பிரளயம் வந்து எல்லாம் அழிந்து விடுவதாகவும் இதற்குமுன் 3 பிரளயம் இருந்தாகவும் இப்பொழுது நான்காவது யுகத்தில் இருப்பதாகவும், கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் பூமியின் சுழலும் மையக் கோடுமாறியிருந்தால் தென் துருவம் மட்டுமன்று வடதுருவமும் மாறியிருந்திருக்கவேண்டும். அதுவும் உஷ்ண வலயத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும் என்று ஆராய்ந்தறிந்தவளவில் அங்கும் 250,000,000 வருடங்களுக்கு முன்பதாக இருந்த வளங்களின் படிமங்களைக் கண்டு எடுத்தார்கள். தென் துருவ கண்டத்தில் கண்ட நிலக்கரியைப்போல் வடதுருவத்திலும் கண்டு எடுத்திருக்கின்றுர்கள். இதில் இருந்து இந்த இரு துருவப் பிரதேசங்களும் ஒரு காலத்தில் சூரியனின் சூடான ஒளிக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்றமுடிவுக்கு வரமுடிகிறது.

(தொடரும்)






## கட்டுரைப் போட்டி

மாணவர்களே! உங்களொவ்வொருவருக்கும் ஒரு எதிர்கால இலட்சியம் இருக்கும். அதை வைத்து "எனது இலட்சியம்" என்ற தலைப்பில் கட்டுரைகளை எழுதுங்கள். கருத்துச்சிறப்பு, எழுத்துநடை, கையெழுத்து என்பன சிறப்பாகக் கவனிக்கப்படும். கட்டுரைகள் புல்ஸ்காப்தாளில் (ஒரு பக்கத்தில் மட்டுமே) இரு பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதப்படல் வேண்டும். 'மாணவர் உலகம்' அங்கத்தினர்மட்டுமே போட்டியிற் கலந்து கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் கட்டுரைகளுக்குத் திரு. உ. தர்மலிங்கம் பரிசுகளைத் தருவார். ஆ-ர்.

# தியாகம்!

— அக்கிரன் —

உலக அரங்கில், சிறந்த கொள்கைகளைக்கொண்டு உயர்வாழ்வு நடத்தும் முஸ்லிம்மக்கள், இற்றைவரை தியாகசீலர்களாகவும் தீரர்களாகவும், உத்தம குணத்தினராகவும், கல்வி ஞானங்களிற் தேறியவர்களாகவும் வாழ்ந்தனர், வாழ்ந்து வருகின்றனர்.

அன்றைய அராபிய மண்ணிலே தோன்றிய, இஸ்லாமிய வீரதிலகங்களின் சகோதரத் தன்மையும், தியாகசிந்தையும் என்றும் எம் உள்ளங்களில் ஒளிவீசக்கூடியதாக விளங்குகின்றது. ஒருநாள்:

யாமுக் என்ற் பெரும்போர்க்களத்தில், முஸ்லிம் சைனியத்திற்கும், உரோமச் சைனியத்திற்கும் கடும்போர் மூண்டது. எங்கும் செங்குருதியின் வெள்ளக் காட்சி. போர்க்களத்தின் ஒருபுறம், இறைதாசரான இக்ரிமாபின் அபூஜஹல் உயிர்பிரியும் அவஸ்தையில் துடிதுடித்துக் கிடந்தார். அவருக்குச் சற்றுத்தள்ளி, அவரது சிறிய தந்தையார் ஹாரிஸ், வாழ்வின் அந்திம காலத்தை நெருங்கிக்கொண்டிருந்தார். ஹாரிசிடம் ஒருவர் நீர்கொண்டு வந்தார். அருகில் குற்றுயிராய்க்கிடந்த இக்ரிமாவும் நீர்கேட்டார். ஹாரிஸ் உடனே தான் அருந்தாது இக்ரிமாவுக்கு நீர்க்குவளையை அளித்தார். அவர் அதை வாஞ்சையோடு அருந்த வாய்திறக்கும் வேளை, "தண்ணீர்!" என்ற துயரக்குரல் அவரைத் தீண்டியது, உடனே நீரைத் தான் அருந்தாது, துயரக் குரலெழுப்பிய அப்பாஸ்பின் ரபிஆவிடம் அளித்தார். ஆனல், அந்தோ! பரிதாபம். அவர் எமன் வாய்ப்பட்டுவிட்டார். தண்ணீர்கொண்டு சென்றவர் மீண்டும் இக்ரிமாவிடம் வந்தார். அங்கே வெற்றுடல் கிடந்தது மீண்டும் ஹாரிசிடம் வந்தார். அதே சோகக்காட்சி. இந்த உள்ளங்களைக் கொண்டவர்களே இஸ்லாமியர். ★

# பிடி! கொல்லு!

★ எம். வை. எம்: மீஆத் ★

காலை நேரம். தினப்பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தேன். திடீரென சுள் என ஒருகுத்து. குதித்தெழுந்தேன். கையிலிருந்த பத்திரிகை பதட்டத்தில் எங்கேயோ வீசப்பட்டது. நோவின் கடுமையில் கோபம் தாங்க முடியாது கத்தினேன். பதுங்கித் தாக்கும் இந்தக் குள்ளப் பயல்களின் தொல்லை நீங்காதோ? இதற்கு ஒரு முடிவு கண்டுதான் மறுவேலை. நேற்றும் இதே தொல்லை! இன்றும் தொல்லையா?...

'டேய், தம்பி... நெருப்பைக் கொண்டுவா. இப்பயல்களைச் சுட்டுத் தள்ளுவோம்.' என்று கத்தலானேன். தம்பி ஓடிப்போய் ஒரு மெழுகுத் திரியை எடுத்துக்கொண்டு வந்தான்.

தம்பியும் நானுமாகத் தொல்லைதந்து மறைந்த கள்ளப் பயல்களைத் தேடினோம். காணவில்லை. இத்துணை விரைவில் எப்படி ஒளித்துக்கொள்ள முடியும். இங்குதான் எங்கேயாவது ஒருமூலையில் பதுங்கிக் கிடப்பர். இன்று விட்டுவிட்டால் எங்களை உறிஞ்சிக் குடிப்பார்கள் பயல்கள். விட்டுக் கொடுத்தால் விளையும் தீமை அனந்தம்.

தம்பியும் என்னுடன் சேர்ந்து முணுமுணுத்துக்கொண்டு அப்பயல்களைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தான்.

'தம்பி தம்பி! இங்கே பார்.! ஒரு பயல பதுங்கியிருக்கின்றான். இதோ, எங்களைக்கண்டு ஓடுகிறான். பிடி! பிடி! விடாதே. கையாலாவது கழுத்தைப் பிடித்து நசுக்கு கொன்றே போடு, இவனைக் கொல்வது பாவமில்லை. பயப்படாதே. இவனின் சகாக்களுக்கு இது ஒரு பாடமாக இருக்கட்டும். இனிமேலாவது, இந்தப் பக்கம் தலைகாட்டாமல் இருக்கட்டும்.' என்று கத்தினேன். நெருப்பு அவனின் உடலைப் பிடித்துக்கொண்டது. ஐயோ என்ற அலறலுடன் உயிரற்றுப் பிணமானான். மூட்டைப்பூச்சி. ★

# வானம்

★ அழகுதாசன் ★

பட்டு மெத்தை வைத்ததுபோல்
பார்க்கத் தெரியுமாம்—நாம்
தொட்டுப் பார்த்துப் படுத்துறங்க
துணிவு விரியுமாம்.

அடுக்கப் பட்ட பஞ்சுபோல
அழகு காணுமாம்—நாம்
துடித்துக் கொண்டு எடுத்துவர
உணர்வு தோணுமாம்.

மரத்தில் பூத்த பூக்கள்போல்
மகிழ்ந்தி ருக்குமாம் – மீன்கள்
சரஞ்ச ரமாய்ஓ டியாடி
தனித்தி ருக்குமாம்.

குடையைப் போன்று விரிந்திருக்கும்
உலகக் கூரையாம்—மக்களின்
உடைமை யென்று மழைபெய்ய
உகந்த வானமாம்.

# அன்பு

அன்பு என்பது அகிலம் அறிந்த பொருள். அந்த அகிலத்திலே அன்புக்கு அடிமைப்படுபவர்கள் ஒரு சிலரே. அதில் அறிஞர்களே முதல் இடம் வகிக்கின்றனர். அன்புதான் இன்பஊற்று! அன்புதான் உலகமாசக்தி!! எனப் புத்தர் கூறுகின்றார்: அன்பு முரட்டு இதயத்தைப் பிளக்கும் சக்தி வாய்த்தது. இரும்புபோன்ற வலிமைபெற்ற தீய எண்ணங்களை உருக்கும் நெருப்புத்தான் அன்பு அந்த அன்புக்கு அடிமைப்படாதவர் அகிலத்தில் நடைப்பிணம் போன்றவர்களாவர்.

—ஆ. ப. சந்திரநாதன்.

# இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு

ராஜரிஷி

நான் இங்கே கூறுவது புரட்டாதி மாதத்தில் பிறந்தவர்களைப் பற்றியதாகும்.

இந்த மாதத்தில் பிறந்தவர்களின் வாழ்க்கை பொதுவாகவே வெற்றிகரமாயமைகிறது. ஏனெனில் இவர்களுக்கு விவேகமும், தம்முடன் சேர்பவரிலிருந்து வேறுபடும் மனக்கூர்மையும், எந்த செயலைப்பற்றியும் நல்ல கணிப்புமிருக்கும். எனவே எளிதில் இவர்களை ஏமாற்ற முடியாது. இவர்கள் தம் வாழ்க்கையை லோகாயதமானதாகவே அமைத்துக் கொள்வர்.

இவர்களின் பார்வை எப்போதும் மற்றவர்களின் குறைகளையே அலசிப்பார்க்கும். நிறைய வாசிப்பார்கள். ஞாபகசக்தி என்பது இவர்களுக்கோர் வரப்பிரசாதம். எனவே பெரும்பாலான இலக்கிய விமர்சகர்கள் இந்த மாதத்தில் பிறந்தவர்களாகவே இருப்பர்.

சுற்றுடலுடன் இணைந்து வாழவேண்டும் என மிகவும் விரும்புவார்கள். உடை, உறையுள் என்பனவற்றில் தனிநாட்டமிருப்பதால் எதிலும் அலங்கார ரஸனையையே விரும்புபவர்களாகின்றனர்.

சில காரியங்களில் எதையும் இவர்களால் புதிதாகச் செய்ய இயலாவிட்டாலும் கூட, மற்றவர்கள் தோற்றுப்போன அதே விஷயத்தில் தம் மனத்தைச் செலுத்தி வெற்றியீட்டவல்லவர்கள் இவர்கள்.

தம் வாழ்க்கை நிலைபற்றி என்றுமே இவர்களுக்கு மனநிறைவு ஏற்படுவதில்லை. கௌரவம், அந்தஸ்து, புகழ் என்பனவற்றை அளவுக்கதிகமாக விரும்புபவர்களும் இந்த வர்க்கத்தினரே.

அற்புதமான வழக்கறிஞர்களும், சட்ட வல்லுனர்களும், தர்க்கவாதிகளும் இவர்களிலேயே தோன்றுகிறார்கள். புதுமை செய்ய ஆற்றல் குறைந்தவர்களெனினும் எதிலும் தனித்துவ முன்னோடியாயிருக்கவேணடுமென்று ஈர்க்கப்படுபவர்கள்.

தொழில் முறைப் பிடிவாதம், திடமனம் என்பன இருப்பதால் வர்த்தகத் துறையில் துரிதகதியில் இவர்களால் முன்னேற முடியும்.

கற்பனேகளும், எண்ணங்களும் எப்போதும் தம் மனதிலேயே உழன்று கிடப்பதால் சிலர் தன்னலம் ஒன்றையே போற்றுபவராகவும் மாறிவிடுகிருர்கள்.

புரட்டாதி மாதத்தினர்க்குப் பொருட் செல்வத்தில் பற்று ஏற்படின் நிலேத்த மனமிராது. அலேமோதும் மனநிலே கபடு, சூது, கொண்டவராகக் கணிக்கச் செய்யும். எப்படியான வாழ்க்கைக்கும் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள இவர்களால் முடிகிறதாகையால் இவர்களேப் புரிந்துக்கொள்வதும் கடினமே. மிகமிக நல்ல ஆண்களோ பெண்களோ இம்மாதத்திலேயே பிறக்கின்றனர்.

இவர்களுக்கு இளமையில் தெளிந்த, தூயமனம், நல்ல குணம் இருக்கும். ஆனுல் மனே நிலேமாறிவிட்டாலோ வஞ்சமே உருவானவரா யிருக்கிருர்கள். ஆனுலும் இவர்தம் அடிமனத்தில் சட்டம், சம்பிரதாயம் பற்றிய எண்ணங்கள் நின்று நிலவுவதால் அவற்றைப்பற்றிய சிந்தனே களினுல் சாமர்த்தியம் பெறுகின்றனர். எனவே தமது தவறுகளேயெல்லாம் பூசி மெழுகி மற்றவர்களின் கண்ணுக்குத் தோற்ருது மறைத்துவிடுவதில் கைதேர்ந்தவர்கள். இப்படியானவரின் மனம் மதுபானத்தை நாடக் கூடியதாயமையும்.

புரட்டாதியில் பிறந்தவர்கள் தங்களிடம் ஏதாவது நோயிருக்கும் என்று சஞ்சலப்படக்கூடாது. பொதுவாகவே இவர்களே நோய் பீடிப்பதில்லே. எனினும் எப்போதுமே சுத்தமான காற்று, சூரிய ஒளி என்பனவற்றை நாடி வாழவேண்டியது அவசியமாகும்★

உ

# நல்லே ஞானசம்பந்தர் ஆதீனம்


பாமரரும் விரும்பும்வண்ணம் பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பகவானின் லீலேகளேக் கதாப்பிரசங்கமாகச் செய்து நற்பணி புரிந்த முத்தமிழ்மணி மணி பாகவதர் அவர்கள் நாளும் இன்னிசையால் நற்றமிழ் வளர்த்த ஞானசம்பந்தரின் பெயருடன் திகழும் மதுரை ஞானசம்பந்தர் ஆதினத்து மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளிடம் மந்திர காஷாயம் பெற்றுச் சுந்தரவேடம் தாங்கி, ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் என்ற தீட்சா நாமம்பூண்டு இங்கு வந்து நல்லூர்க் கந்தகோட்டத்தில், மதுரை ஆதீனத்தின் கிளேயொன்றை இம்மாதம் 6-ந் திகதி ஆரம்பித்திருக்கின்ருர்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வடக்குத் திருவீதியில் நிரந்தர மடாலயத்தைக் கட்டிக் கொடுப்பதற்குத் தேவஸ்தானக் காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் முன்வந்துள்ளார்கள். இந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்கென மதுரை ஆதீன கர்த்தரும் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இங்கு வருவார்கள் எனத் தெரிகின்றது.


நீண்ட நாட்குறையை நீக்க வந்த நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தாவுக்குத் திருவருளின் துணையால் பொதுமக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் நிறையக் கிடைக்கும் என நம்புகின்ருேம். —அன்பன்.





'ஸ்ரீரிய முயற்சிகள் சிறந்து மிக் கோங்குக! நந்தேயத்தினர் நாடொறும் உயர்க' எனப் பாடினால் மட்டும் போதாது அதைப் பாரறியச் செய்யவும் வேண்டும் என்றெண்ணி 'மில்க்வைற் சோப்' தொழிற்சாலைக்குச் சென்றேன். நிர்வாகிகள் என்னைத் தங்கள் ஆபீசில் வாட்டும் வெயிலுக்கு இதமாக ஒரு 'சுப்பிரமணியன் ஸ்பெஷலை'த் தந்து மிகக் கனிவாக என்னை வரவேற்றார்கள்.

தொழிற்சாலையைப் பார்வையிட்டேன். 'சுமார் ஐம்பது தொழிலாளர்கள்தான் கடமை யாற்றுகின்றார்கள் சுறுசுறுப்பாகவே இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். மில்க்வைற் தொழிற்சாலையைக் காலஞ்சென்ற திரு: வி. மு. கந்தையாபிள்ளை அவர்களும், அவரின் மைந்தரான திரு. கனகராஜா அவர்களும், 1927-ம் ஆண்டு ஆரம்பித்தார்கள். திரு. கனகராஜா அவர்கள் தமது ஆரம்பகால நிலையைப்பற்றி, 'முதலில் விற்பனையில் எவ்வளவோ போட்டி, விற்பனையே


லேபல் சுற்றுகிறார்கள்



அச்சில் வார்க்கப்படுகிறது

கூட இல்லை என்றும் சொல்லலாம். பெரிய ஸ்தாபனங்களுடனெல்லாம் சின்னக் குடிசைத்தொழிலாக ஆரம்பித்த நாங்கள் தாக்குப் பிடிக்க முடியுமா என்ன? இருந்தாலும் பாருங்க விடா முயற்சியினுலேதான் முன்னுக்கு வந்தோம்' என்று சொல்லும்போது எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. இதைக் கேட்டுவிட்டு இன்றோ மில்வைற் சோப் எம்மவரின் தேவையில் 30 வீதத்தைப் பூர்த்தி யாக்குகின்றது என்பதையும் அறியும்போது ஆச்சரியமேலிடுகிறது. இதிலும் வியப்பு என்னவென்றால் திரு: வி. மு. கந்தையாபிள்ளை அவர்கள் சோப் செய்வதை ஒரு பொழுதுபோக்காகத்தான் ஆர்ம்பித்தார்கள் என்பதுவே.



திரு. க. கனகராஜா

இன்றோ திரு. கனகராஜா அவர்கள் தொழில் சம்பந்தமாக இந்தியா சென்று இயந்திரநுணுக்கங்களை அறிந்து வந்திருக்கின்றார். அவர் தன்னம்பிக்கை ஒளிவிடும் பார்வையுடன் சொல்லும் ஒருவிஷயம் என்னவென்றால் 'இந்தத் தொழிற்சாலை சம்பந்தமாக நம்நாட்டுப் பணத்தை நான் வேறெந்த நாட்டிற்குமே செல்லவிடவில்லை' என்பதுதான். தொழிற்சாலையிலுள்ள எந்த இயந்திரமும் இறக்குமதி செய்யப்பட்டதல்ல. இங்கேயே வார்த்துச் செய்யப்பட்டவைதான் எல்லாச் சாதனங்களும். இவற்றின் பெறுமானம் இருபத்திஐயாயிரம் ரூபாய்களுக்குமதிகம்.



குழம்பு காய்ச்சப்படுகிறது

எதிர்காலத்தில் வெளிநாட்டு இயந்திரங்களையும் வரவழைக்கப் போகின்றார். ஏனெனில் இனி 'மில்க் வைற் சோப்' ஸ்தாபனத்தினர் வாசனை சோப், சோப் பவுடர் முதலிய ரகங்களையும் தயாரிக்கப்போகின்றனர்.

நம்நாட்டு மக்களுக்கு நாம் தயாரிக்கும் பொருட்களின்மீது நம்பிக்கையும், நம்தேசத்துச் சாமான்களையே பாவிப்பேன் என்ற பொறுப்புணர்வும் ஏற்படவேண்டும். அப்போதுதான் நாம் பொருளாதார ரீதியில் துரிதகதியில் முன்னேற முடியும். ஏனெனில் 'மில்க்

வைற் சோப், போன்ற] உள்நாட்டுத் தயாரிப்புக்களையே நாம் உபயோகித்தால் அந்த ஸ்தாபனத்தார் வேறு எத்தனையோ வித சோப்புகளை தயாரிக்க உதவியாகிறது. அதனால் வேலை வாய்ப்புகளும் பெருகும்.




கேஸ்களை வான்களில் ஏற்றுகிறார்கள்

இப்போது மில்க் வைற் நீலசோப், வெள்ளை சோப், நீல பார் சோப் வெள்ளை பார்சோப், 5 சத, 10 சத கட்டிகளுமே கிடைக்கின்றன. இவற்றின் அகில இலங்கை விற்பனைமூலம் மொத்த, சில்லரை வியாபாரிகளும் எத்தனையோபேர் பலனடைகின்றனரல்லவா?

இதைப்போலவே வேறு தொழில்களையும் நம்மவர்கள் தொடங்கலாம். அவர்களெல்லாம் திரு. கனகராஜா அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டால் "தாராளமாகச் செய்யுங்கள். பலன் நிச்சயமாகக் கிடைக்கும். எங்களைப் பாருங்கள் இதற்கென்று தனியாக எதுவுமே முதலீடு செய்யவில்லை. **Hobby** ஆகத்தான் என் தந்தை இதை செய்யத் தொடங்கினார் இன்றோ ஆறு 'வான்'களும், லொறிகளும் விநியோகிக்கின்றன; என்பார்.

உண்மைதான். இவர்களுக்கு 'கடன்' என்று அரசாங்கம் கொடுக்காவிட்டாலும் மூலப் பொருட்களைப் பெறுவதற்குப் போதிய வசதி செய்கிறது. இவர்கள் குருநாகல், சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளிலிருந்து எண்ணெயையும். பரந்தனிலிருந்து இரசாயனப் பொருட்களையும் பெறுகின்றனர்.

'மில்க் வைற் சோப்' ஸ்தாபனத்தாரை கைத்தொழில் மந்திரி, பரந்தன் ரசாயன உற்பத்தி ஸ்தாபன சேர்மன்' என்பாரெல்லாம் பாராட்டுகின்றார்கள். நாம் பாராட்டவும் வேண்டும், அவர்களை ஊக்குவிக்கவும் வேண்டும்.

தொழில் வளர நாடுவளரும். நாடு வளர நாம் வளர்வோம். நாம் வளர்ந்தால் 'பூமியில் எவர்க்கும் அடிமை செய்யோம்.' ★

## இலக்கிய நிகழ்ச்சி


தமிழகத்தின் இலக்கிய ஏடான "தீபம்" இதழின் ஆசிரியரும், குறிஞ்சிமலர், பொன்விலங்கு முதலிய நாவல்களின் ஆசிரியருமான திரு நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) அவர்கள் 19-9-66 அன்று யாழ். இலக்கிய வட்ட நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். யாழ். இலக்கிய வட்டம் அவருக்கு சிறப்பான தேநீர் விருந்தளிக்கும். ★

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

தூய்மையான ஆடை
கம்பீரத்தின் சின்னம்!

அதற்கு

# மில்க் வைற் சோப்




★ சிக்கனம்!

★ பளபளப்பு!

★ துரித சலவை!

★ நீடித்த உழைப்பு!

## மில்க் வைற் என்பது திறமானசோப்

○

மில்க்வைற் நீலசோப், வெள்ளை சோப்,
நீல பார்சோப், வெள்ளை பார்சோப்.
5 சத 10 சத கட்டிகள் என்பன
எங்கும் விற்பனையாகின்றன.




அட்டைப் படம் கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பெற்றது.